02 பக்கம்

தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 64 சுபகிருது வருடம், புரட்டாசி மாதம் 02ஆம் திகதி திங்கட்கிழமை
(19.09.2022) ஹிஜ்ரி 1444, சஃபர் - 22 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

பிரிட்டன் மகாராணியின் இறுதிக் கிரியை இன்று

ஜனாதிபதி ரணில் பங்கேற்பு

12 பக்கம்

வடக்கு - கிழக்கைக் கூறுபோடுவதை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது!

கோணேஸ்வரம் ஆக்கிரமிப்பும் நல்லதுக்கல்ல

ஜனாதிபதிக்கு சம்பந்தன் காட்டமான கடிதம்

"இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்கீழ், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களினதும் தமிழ்பேசும் மக்களினதும் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இங்குள்ள மாவட்டங்களைக் கூறுபோட்டு இன நிலத்தொடர்ச்சியை துண்டிக்கும் நடவடிக்கையை இந்தியா ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டாது" - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். திருக்கோணேஸ்வர விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

திருக்கோணேஸ்வரம்

திருக்கோணேஸ்வரத்துக்குள் நுழைவதற்கான பிரெட்ரிக் கோட்டையின் ஒரு பகுதியில் தங்கியிருந்த இராணுவத்தினர் அங்கு புத்தர் சிலையொன்றை நிர்மாணித்தனர்.

02 பக்கம்

பிரித்தானியாவின் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கு இன்று லண்டனில் இடம்பெறுகின்ற நிலையில், அதில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அந்நாட்டைச் சென்றடைந்தார்.

ஹெரோயினின் பிடியில் யாழ்ப்பாண மாவட்டம்!

வெளியாகின அதிர்ச்சித் தகவல்கள்

02 பக்கம்

32 இலட்ச ரூபா நீர்க்கட்டணத்தை செலுத்தாது மரணித்த 15 எம்.பிக்கள்

ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபா குடிநீர்க் கட்டண நிலுவையை செலுத்த வேண்டிய 76 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 15 பேர், 32 இலட்சம் ரூபா குடிநீர்க் கட்டணத்தை...

02 பக்கம்

ஐ.நா. பொதுச்சபையில் அலி சப்ரி அறிக்கை

நியூயோர்க்கில் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 77ஆவது அமர்வில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்...

02 பக்கம்

விமானம் தடுத்துவைக்கப்பட்ட விவகாரம்: ரஷ்யாவிடம் மன்னிப்பு கோரினார் பந்துல

இலங்கையில் ரஷ்ய விமானம் தடுத்துவைக்கப்பட்டமையானது மிகப்பெரிய தவறு எனவும் அதற்காக மன்னிப்புக் கோருவதாகவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

ஜனாதிபதியின் அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமனம்

பிரித்தானியாவின் இரண்டாம் எலிசபெத் மகாராணியாரின் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி

02 பக்கம்

வெளிநாட்டு கடன்வழங்குநர்கள் செப். 23இல் கலந்துரையாடல்

02 பக்கம்

உஷ்

பிரிட்டனுக்கு பயணித்திருக்கும் ஜனாதிபதி ரணில், அந்த விஜயத்தின் பின்னர் ஜப்பானுக்கும், அதன் பின்னர் பிலிப்பைன்ஸுக்கும் பயணம் செய்யவுள்ளார். ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளை மணிலாவில் சந்திக்கவுள்ள ரணில் அதன் பின்னர் தேவைப்பட்டால் சீனாவுக்கும் செல்லவுள்ளாரென தகவல்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருள் கப்பலுக்கான கட்டணம் 450 மில். டொலர்

தாமதத்துக்காக செலுத்தவேண்டியுள்ளதாக பிரதான தொழிற்சங்கம் குற்றச்சாட்டு

யோ.தர்மராஜ்

நிதி செலுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கலினால் எரிபொருள் தாங்கிய கப்பல்கள் இலங்கை கடற்பரப்பில் நீண்ட நாட்களாக நங்கூரமிட்டுள்ளதால், கப்பலுக்கான தாமதக் கட்டணமாக 450 மில்லியன் டொலர்களை செலுத்த வேண்டியுள்ளதாக எரிபொருள் பொதுச் சேவை சங்கத்தின் தலைவர் அசோக ரன்வல தெரிவித்தார்.

» 02 பக்கம்

ரஷ்யப் படையினரின் தடுப்பிலிருந்த இலங்கையர்கள் எழுவர் மீட்பு

உக்ரைன் ஜனாதிபதி அறிவிப்பு

உக்ரைனில் ரஷ்யப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மாணவர்கள் ஏழு பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். கூப்யான்ஸ்க் மருத்துவ கல்லூரியில் கற்கும் இந்த எழுவரும் கார்கிவ் பகுதியில் கடந்த மார்ச் மாதம் முதல் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

02 பக்கம்

கமெண்ட் கந்தர்..

திருகோணமலை பிரச்சினைக்கும் தீபாவளிக்குள்ள தீர்வைத் தருமோ அரசாங்கம்...?

மக்கள் வங்கியில் வைப்பு செய்யும் வைப்புக்கள் அனைத்தும் இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

எந்த இடத்திலிருந்தாலும் அதே இடத்திலிருந்தவாறு

சேமிப்பு கணக்கொன்றை இலகுவாக ஆரம்பித்திடுங்கள்

PEOPLE'S PAY

இப்போது PEOPLE'S PAY APP ஊடாக இருந்த இடத்திலிருந்தே சேமிப்பு கணக்கொன்றை அக்கணமே ஆரம்பியுங்கள்.

1. People's Pay app I Download செய்யுங்கள்
2. உங்கள் விபரங்களை உள்ளிடுங்கள்
3. டிஜிட்டல் சேவைகளுக்கு விண்ணப்பியுங்கள்
4. உங்கள் பொருத்தமான நேரத்திற்கு Non face to face call ஒன்றுக்காக நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள்

நீங்களும் இன்றே People's pay app பெற்றுக்கொடுக்கும் சிறந்த வசதிகளைப் பெற்றுக்கொண்டு நீங்களும் உங்கள் சுதந்திரத்தை அனுபவித்திடுங்கள்

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

AA- (lka) பிட்ச் ரேட்டிங், AAA- ரேர்ண்ட் ஸ்பினல்ஸ் ரேட்டிங்

மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

நாட்டிற்கு ஊட்டச்சத்துக் குறைபாடு அரசாங்கத்திற்கு மிகை ஊட்டச்சத்து

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

சௌபாக்கியம் மிக்க தேசமொன்றை உருவாக்குவோம் என தம்பட்டம் அடித்துக் கொண்டு வந்த அரசாங்கம், போஷாக்குக் குறைபாடுகள் நிறைந்த நாட்டைக் கையகப்படுத்தியுள்ளதாகவும், போஷாக்கின்மையால் நாடு தவிக்கும் வேளையில், அரசாங்கம் மிகை ஊட்டச்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட அத்தனகல்ல ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதிக் கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அப்போது அconsidered இழைக்கப்பட்ட அலைவருக்கும் தனது கடமைனை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என தற்போதைய ஜனாதிபதி அப்போது கூறியிருந்த போதும், ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களை குழிதோண்டிப் புதைத்த குற்றவாளிகளுக்கு அமைச்சு பதவிகளை வழங்கி இன்று



கடமையை நிறைவேற்றி வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்களுக்கு மஹிந்த ராஜபக்ஷவிடம் சென்று தத்தமது துக்கங்களைக் கூறி தலைவணங்க நேரிட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தற்போதைய ஜனாதிபதியின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ள தலைவிதி வருந்தத்தக்கது எனவும், தவறாக வழிநடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் எதிர்காலத்தில் நேலும் மாவத்தையிலுள்ள காக்கையிடமிருந்தே வேட்புமனுக்களைப் பெற வேண்டியிருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தினாலும் அரசாங்கம் அச்சுறுத்துலுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மீண்டும் உதவி வழங்க மாட்டோம் என இந்தியா கூறியுள்ளதாகவும், நாட்டின் மனித உரிமைகள் உள்ளடங்கலாக ஜனநாயகம் பாதுகாக்கப்படும் வரை எவ்வித உதவியும் வழங்கப் போவதில்லை என சர்வதேச அமைப்புகள் கூட தெரிவித்துள்ளன எனவும் குறிப்பிட்டார்.

முழு நாடும் கடும் நெருக்கடியிலிருக்கும் போது அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் சகநிகழ்வுகளின் போது வானவேடிக்கைகளை நடத்தி வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்தே அவர்கள் அந்தப் பதவிகளைப் பெற்றதாகவும் தெரிவித்தார்.

மனிதாபிமான முதலாளித்துவத்தின் ஊடாக இந்நாட்டை கட்டியெழுப்ப முடியும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதற்காக ஐக்கிய மக்கள் சக்தி தம்மை அர்ப்பணிக்கும் எனவும் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் வலுவான தீர்மானம் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட வேண்டும்

உலகத் தமிழர் பேரவை வலியுறுத்து

ஜெனீவாவில் நடைபெறும், மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் வலுவான தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டுமென உலகத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள பேரவை, போரின்போது பாரியளவில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும், அனைத்து சமூகங்களினதும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்படவில்லை என்று குற்றம் சுமத்தியுள்ளது. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஆற்றிய பங்கு இந்த விடயத்தில் முக்கியமானது. கடந்த மாதம் வரை உயர்ஸ்தானிகராக பணியாற்றிய மிச்செல் பச்லேவின் முன்மாதிரியான சேவைக்காக, பேரவை தனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது. இதேவேளை இலங்கை ஒரு குறுக்கு வழியில் இருப்பதாக உலகத் தமிழர் பேரவை கருதுகிறது. துரதிர்ஷ்டவசமாக, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள், ஆரோக்கியமான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு உகந்ததாக இல்லை. எனினும், அதனை பொருட்படுத்தாமல், இலங்கை தொடர்பான பொறுப்புள்ள செயல்பாடுகள், சர்வதேச சமூகத்தால் மனசாட்சியுடன் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமே இது சாத்தியமாகும் என உலகத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

திருமலையில் சாதாரண தர மாணவர்களுக்கு செய்முறை அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை

கல்வி அமைச்சின் கவனயீனம் குறித்து பெற்றோர் விசனம்

2021 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தொடங்கவுள்ளதாக பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ள நிலையில், திருகோணமலை மாவட்ட மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்ப்படவில்லை.

இது விடயமாக கல்வி அதிகாரிகளிடம் கோரிய போதும் அவர்கள் பாடசாலை அதிபர்களிடம் இணையத்தில் பதிவிறக்கம் செய்து வழங்குமாறு கூறியுள்ளனர். முன்னைய காலங்கள் கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி என்ற அனரதான நிலைகள் இருந்த போதிலும் தற்போது அவ்வாறான நிலைமைகள் மாறியிருந்தும் பரீட்சை திணைக்களம் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் விடயத்தில் ஏன் அநீதி இழைக்கின்றது என பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர். இணையத்தில் பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளும் வசதி மாவட்டத்தில் அனைத்து பிரதேசங்களில் இல்லை என்பது அனைவரும் அறிந்ததே. இருந்தும் பரீட்சை திணைக்களம் இந்த விடயத்தில் அலட்சியமாக இருப்பதன் காரணம் என்ன என பெற்றோர் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே, திருகோணமலை மாவட்டத்தில் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அசௌகரிய நிலைமையை கல்வி அமைச்சு கவனத்தில் எடுத்தல் வேண்டும் என பெற்றோர் கோருகின்றனர்.

ரஷ்யப் படையினரின்...

ரஷ்ய ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட கார்கிவ் பகுதியில் அந்நாட்டுப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களுக்கான ஆதாரங்கள் கேகரிக்கப்படுவதாகவும், பொதுமக்கள் கொடுமைப்படுத்தப்பட்ட அறைகள் மற்றும் வளாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

"அவ்வாறான கொடுமைப்படுத்தல்களுக்கு வெளிநாட்டவர்களும் உள்ளாகியுள்ளனர். குறிப்பாக இலங்கை மாணவர்கள் ஏழு பேர் ரஷ்ய படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன" - இவ்வாறு ஸெலென்ஸ்கி மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின்...

ரணில் விக்கிரமசிங்க லண்டன் பயணமாகியுள்ள நிலையில், அவருக்குக் கீழ் இருந்த அமைச்சகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக இலங்கையிலிருந்து புறப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (17) நண்பகல் லண்டனை சென்றடைந்தார்.

லண்டன் சென்றடைந்த ஜனாதிபதியை பொதுநலவாய, மேம்பாட்டு அலுவலகத்தின் இந்து-பசிபிக் பிராந்திய பணிப்பாளர் மற்றும் இந்தியாவுக்கான பணிப்பாளர் பென் மெல்லர், பிரித்தானிய இளவரசரின் விசேட பிரதிநிதி உப லெப்டினன்ட் டேவ் ஈஸ்டன் மற்றும் பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன ஆகியோர் வரவேற்றனர்.

இன்று லண்டனில் உள்ள வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் நடைபெறவுள்ள எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் பங்கேற்கும் ஜனாதிபதி ரணில் எதிர்வரும் புதன்கிழமை (21) அதிகாலை நாடு திரும்புவுள்ளார்.

ஜனாதிபதி நாடு திரும்பும்வரை, தனக்குக் கீழ் உள்ள அமைச்சகளின் இராஜாங்க அமைச்சர்களை பதில் அமைச்சர்களாக நியமித்துள்ளார்.

இதன்படி, பாதுகாப்பு பதில் அமைச்சராக பிரதித்த பண்டார தென்னகோன், நிதி, பொருளாதார, ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகளின் பதில் அமைச்சராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராக கீதா குமாரசிங்க, தொழில்நுட்ப பதில் அமைச்சராக களக ஹேரத் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராக திலும் அமுனுகம ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜ.நா. பொதுச்சபையில்...

அலி சப்ரி இலங்கையின் அறிக்கையை வழங்கவுள்ளார். இந்த விஜயத்தின் போது, ஆசியாவில் தொடர்பு மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் குறித்த மாநாட்டின் வெளிவிவகார அமைச்சர்களின் சந்திப்பு, குழு 77 மற்றும் சீன உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டம், உலகளாவிய அபிவிருத்தி முன்முயற்சியின் நண்பர்கள் குழுவின் அமைச்சர்கள் கூட்டம் மற்றும் அணிசேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டம் போன்ற அமைச்சர்கள் மட்டத்திலான பல்வேறு கூட்டங்களில் அவர் உரையாற்றுவார்.

ஐ.நா. உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடனும் அவர் இருதரப்புக் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார். மேலும், அவர் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.வின் உயர் மட்ட அதிகாரிகளையும் சந்திப்பார்.

இலங்கைத் தூதுக்குழுவில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி மற்றும் நியூயோர்க்கில் உள்ள இலங்கையின் நிரந்தரத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். அமர்வின் உயர்மட்ட அமர்வு நாளை 20 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறும்.

எரிபொருள் கப்பலுக்கான...

எரிபொருள் கத்திகிரிப்பு செயற்பாடுகள் குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கத்திகிரிப்பு நிலையம் இயங்கும் வகையிலேயே மசகு எண்ணெய் கொண்டுவரப்பட வேண்டும். ஆனால், கத்திகிரிப்பு நிலையங்கள் இயங்க முடியாத வகையிலான மசகு எண்ணெயே கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் என்ற மசகு எண்ணெயே சிறந்த எண்ணெயாகும். ஆனால், அதற்கு பதிலாக கொரல் எனெஜி என்ற நிறுவனத்துக்கு அடியணிந்து. அவர்கள் சொல்வதற்கு அடியணிந்து ஊரல் வகை மசகு எண்ணெயை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

ஊரல் வகை மசகு எண்ணெயால் கத்திகிரிப்பு இயந்திரங்கள் செயலிழந்து இன்று கத்திகிரிப்பு நிலையை செயற்பாடுகள் முடங்கிபோயுள்ளன. அதன்படி, மூன்று மசகு எண்ணெய் கப்பல்களைக் கொண்டுவருவதற்கு எங்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டனர். ஒரு கப்பல் வந்து சுத்திகரிப்பு செயற்பாடுகள் நிறைவடைந்த நிலையில், கடந்த 23 ஆம் திகதி வருகை தந்த மசகு எண்ணெய் கப்பல் தற்போதும் கடலில் நங்கூரமிட்டுள்ளது.

கப்பலிலிருந்து நிலைத்த நேரத்தில் தங்களுக்கு தேவையான மசகு எண்ணெயை தரமறிறக்கிவிடுவர். வேறு எந்த நாட்டிலும் இவ்வாறு நடப்பதே கிடையாது. இவ்வாறு நிலைத்த நேரத்துக்கு மசகு எண்ணெயை பகுதி பகுதியாக தரையிறக்கம் செய்வதால் கப்பல்களை தாமதக் கட்டணத்தை செலுத்துவதற்கு தேவையான நிதியை தேட வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

கப்பலை இவ்வாறு நங்கூரமிட்டு வைப்பதால் 450 மில்லியன் டொலர்களை தாமதக் கட்டணமாக செலுத்த வேண்டியுள்ளது – என்றார்.

தோம்பழம்...

பிரபல சிறப்பு அங்காடி நிறுவனம் ஒன்றின் கிளைகளில் இறக்குமதி செய்யப்பட்ட தோம்பழம் ஒன்று அதன் எடைக்கு ஏற்ப 621 ரூபா விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் தோம்பழம் 3 ஆயிரத்து 75 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதுடன், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ திராட்சை பழம் 5 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இறக்குமதிக்கு வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளமை, இறக்குமதிகான வரிகள் அதிகரிக்கப்பட்டமை மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடி என்பன காரணமாக இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் கூறியுள்ளனர்.

வெளிநாட்டு...

இலங்கை அரசாங்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளிநாட்டு கடன் வழங்குநர்களுடன் விசேட கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை மற்றும் அண்மைகால பொருளாதார அபிவிருத்திகள் குறித்து இதன்போது விளக்கமளிக்கப்படவுள்ளது.

மேலும், இலங்கை அரசாங்கத்தின் விளக்கமளிப்புக்குப் பின்னர் கேள்வி-பதில் நேரம் ஒதுக்கப்படவுள்ளது.

கடன் வழங்குநர்களை இணையத்தில் பதிவுசெய்யுமாறு பிரித்தானியாவை தலைமையகமாகக் இயங்கும் சர்வதேச சட்ட நிறுவனமான கிளிபோர்ட் சான்ஸ் கேட்டுக்கொண்டுள்ளது.

விமானம்...

ரஷ்யாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஸ்புட்னிக் என்ற ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மன்னிப்புக் கோரியுள்ளார். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கடந்த ஜூன் மாதம் 02 ஆம் திகதி ரஷ்ய விமானம் தடுத்துவைக்கப்பட்டது. இது குறித்து ஸ்புட்னிக் ஊடகத்துக்கு கருத்து தெரிவித்துள்ள பந்துல குணவர்தன, அந்த விடயம் தீர்க்கப்பட்டுவிட்டது. அது மிகப்பெரிய தவறு, அதற்காக நாம் மன்னிப்புக்கோருகிறோம்.

இவ்வாறான சம்பவம் இனியும் நடைபெறாதென ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் உறுதிப்பாட்டை வழங்குகிறது. இலங்கையில் எந்தவொரு விமானத்தையும் தடுத்துவைக்க நாம் விரும்பவில்லை. இருநாடுகளுக்கும் இடையிலான விமான சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றார்.

வடக்கு...

திருக்கோணேஸ்வரத்தையும், புத்த பெருமானையும் வழிபட விரும்பிய மக்கள் இப் பிரதான நுழைவாயிலின் வழியாக கோட்டையினுள் சென்று வழிபாடு செய்தனர். கோட்டைக்குள் நுழைந்து புத்தபெருமானையும், கோணேஸ்வரையும் வழிபடுவதற்கு வேறு வழிகள் ஏதும் இருக்கவில்லை.

அண்மைக் காலங்களில் புத்த பெருமானின் சிலைக்கும் அங்கிருந்து திருகோணேஸ்வரத்துக்கும் ஒரு புதிய பாதை திறக்கப்பட வேண்டுமென்று முன்மொழிவொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தேவையற்றது என்றோடு, ஆட்கள் இவ் வழியில் அத்துமீறுவதற்கும் அக்கணியில் தங்கியிருப்பதற்கும் வழிவகுக்கும்.

அது திருக்கோணேஸ்வரம் கோயில் மற்றும் புத்த பெருமானின் சிலை ஆகியவற்றின் புனிதத்தன்மையும், பக்தி உணர்வும் குறைவடைவதற்கே வழிவகுக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரினால் இரத்தினபுரியிலிருந்து சில வர்த்தகர்கள் கொண்டுவரப்பட்டு, கோணேஸ்வரத்துக்கான பாதையில் அமர்த்தப்பட்டனர். அது இப்பகுதியின் புனிதத்தன்மையும், பக்தி உணர்வும் குறைவடைவதற்குக் காரணமாகியது.

புத்தபெருமான் சிலை உள்ள பகுதியில் திருக்கோணேஸ்வரம் வரையிலான இப் புதிய பாதை திறப்பு நிறுத்தப்பட வேண்டுமென நான் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். இல்லையேல் இது தீங்கு இழைக்கப்படுவதற்கே வழிவகுக்கும்.

நிலத் துண்டிப்பு

ஒரு சர்வதேச உடன்படிக்கையான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்கீழ், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களினதும், தமிழ் பேசும் மக்களினதும் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பெரும் நிலப்பரப்பு, திருகோணமலை மாவட்டத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக வட மத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுர மாவட்டத்திலிருந்து ஒரு பெரும் நிலப்பரப்பு பதிவீடு செய்யப்படவுள்ளது என எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதன்மையான நோக்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இனத்துவ நிலத் தொடர்ச்சியைத் துண்டிப்பதாகும்.

பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து பெரும் நிலப்பரப்பொன்றை கிழக்கு மாகாணத்துக்குள் கொண்டுவரும் அதேவேளை, கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலிருந்து பெரும் நிலப்பரப்பொன்றை பொலன்னறுவை மாவட்டத்தோடு இணைக்கும் அதே போன்றதொரு முன்மொழிவு திருகோணமலையின் தெற்குப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது, பாரதூரமான எதிர்வலைகளையும் உலகில் இரண்டாவது மிகச் சிறந்த துறைமுகமாக கருதப்படும் திருகோணமலைத் துறைமுகத்துக்கும் பாரதூரமான பின்விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடிய சாத்தியத்தோடு, வடக்கு மற்றும் தெற்கின் கல்லோர் எல்லைகள் ஊறுபடுவதற்கும் வழிவகுக்கும்.

இப் பகுதிகளில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்களோ அல்லது எமது அயல்நாடோ அல்லது மிக அருகில் உள்ள நாடுகளோ இந்த நடவடிக்கையை அங்கீகரிக்கப்போவதில்லை.

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கிலும், தெற்கிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையில் இனத்துவ நிலத் தொடர்ச்சியை இல்லாது செய்வதே இதன் முழு நோக்கமாகும்.

கிழக்கு மாகாணத்தை ஒரு சிங்கள பெரும்பான்மை மாகாணமாக மாற்றியமைப்பதும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான இனத்துவ நிலத் தொடர்ச்சியை துண்டிப்பதும் பேரினவாத சிங்கள அரசுகளின் நீண்டகால குறிக்கோளாக இருந்து வருகின்றது.

இம்முயற்சிகள் அனைத்துக்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டமும் தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையினராகக் கொண்டதாகும் என்பதோடு, எந்தவொரு மாவட்டமும் சிங்களப் பெரும்பான்மை மாவட்டமாக இல்லை என்பதுவுமே யதார்த்தம்.

இது, வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களாகக் கொண்ட தமிழர்கள் தமிழ்பேசும் மக்கள் ஓர் ஐக்கிய மற்றும் பிரிபடாத இலங்கை என்ற வரையறைக்குள் உள்ளக சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடைய ஒரு மக்கள் குழுவினர் ஆவர் என்ற நிலைப்பாட்டுக்கு அமைவானதாகும். இதனையே தமிழர்கள் - தமிழ்பேசும் மக்கள் ஓர் அரசியல் தீர்வாகக் கோரி நிற்கின்றனர்.

இந்த நிலைப்பாடு 1956ஆம் ஆண்டிலிருந்து அனைத்து ஜனநாயகத் தீர்ப்புகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரச்சினையை நீடிக்கச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைவிட, இந்த அடிப்படையில் இப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டுமென நான் பலமாக வலியுறுத்துகின்றேன் - என்றுள்ளது.

32 இலட்ச ரூபா...

செலுத்தாமல் உயிரிழந்துள்ளதாக நீர் வழங்கல் சபை பொட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, இந்த நிலையில், அவர்களிடமிருந்து வரவேண்டிய தொகையை மீளப் பெறுவது கடினம் எனவும், தற்போது அமைச்சுப் பதவிகளை வகித்து வரும் எம்.பி.க்கள் கூட தங்களுடைய குடியிருப்புகளில் பாரியளவில் நீர்க் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சுப் பொறுப்புகளை வகிக்கும் எம்.பி.க்கள் உட்பட 34 பேர் குடிநீர் கட்டணமாக 44 இலட்சம் ரூபாவையும், தற்போது நாடாளுமன்ற பொறுப்புக்களை வகிக்காத 27 பேர் 41 இலட்சம் ரூபாவையும் செலுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

அவர்களிடமிருந்து இந்தப் பணத்தை மீட்பது பெரும் சவாலாக இருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிப்பிடுகின்றன.

ஹெரோயினின்...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 20 கிராமங்களைச் சேர்ந்த பலரும் உயிரிழந்தமைப் போதைப்பொருளான ஹெரோயின் பாவனைக்கு முற்றாக அடிமையாகியுள்ளனர் என்ற அதிர்ச்சி தகவல் வெளிவந்துள்ளது.

இம்மாவட்டத்தில் ஹெரோயின் பயன்படுத்திய 10 பேர் அண்மைக்காலங்களில் உயிரிழந்துள்ளனர்.

இதற்கு அடிமையான 320 பேர் வரையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் யாழ். போதனா மருத்துவமனையில் ஹெரோயினுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சையளிக்கும் நிலையம் திறக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் 134 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஹெரோயினுக்கு அடிமையானவர்களில் அதிகமானோர் 18 – 23 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்பதுடன், யாழ். நகரிலுள்ள பிரபல பாடசாலைகளின் மாணவர்களும் இதற்குப் பழக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

கொரோனா, பொருளாதார நெருக்கடி எனப் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் யாழ். குடாநாட்டில் உயிர்க்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோயின் பயன்பாடு பல்கிப் பெருகியுள்ளது.

கொழும்பிலிருந்து தொடர்ச்சியாக உயிர்க்கொல்லி ஹெரோயின் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்படுகின்றது. இங்குள்ள பல நூற்றுக்கணக்கான முகவர்கள் ஊடாக அவை குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படுகின்றன.

உயிர்க்கொல்லி ஹெரோயினை ஊசி மூலமே அதிகளவானோர் பயன்படுத்துகின்றனர். ஒரு நாளைக்கு 30 மில்லி கிராம் தொடக்கம் 300 மில்லி கிராம் வரையில் நுகர்கின்றனர்.

இதேவேளை, 18 – 23 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களே உயிர்க்கொல்லி போதைப்பொருளான ஹெரோயினை அதிகளவில் நுகர்கின்றனர்.

இதனைத் தவிர பாடசாலை மாணவர்களும் நுகர்கின்றனர்.

ஹெரோயின் நுகரும் பெரும்பாலான இளைஞர்களின் பெற்றோர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து தாமே தமது பிள்ளைகளை பொலிஸில் ஒப்படைக்கின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன. சில பெற்றோர் மருத்துவமனைகளிலும் தமது பிள்ளைகளை ஒப்படைத்துள்ளனர்.

"எவ்வளவு காலம் என்றாலும் பரவாயில்லை. இவனை நீங்கள் வைச்சிருங்கோ. வெளியில விட்டால் பெரிய பிரச்சினை' - என்று தெரிவித்து தாய் ஒருவர் அண்மையில் தனது மகனை மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஹெரோயின் பாவனைக்கு அடிமையான சுமார் 320 பேர் வரையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். உயிர்க்கொல்லி ஹெரோயினுக்கு அடிமையானமையாலும் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு கைதாவோர்களும் இதற்குள் உள்ளடங்குகின்றனர்.

உயிர்க்கொல்லி போதையான ஹெரோயின் பாவனைக்கு அடிமையானவர்கள் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துச் செல்வதைவிட, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் விசேட சிகிச்சைப் பிரிவு இரு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு இதுவரை 134 பேர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் சுமார் 20 கிராமங்கள் ஹெரோயின் போதைக்கு அடிமையானவர்களின் கூடாரமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தக் கிராமங்களிலுள்ள இளைஞர்களில் அநேகர் இதனைப் பயன்படுத்துகின்றமையும் பல்வேறு தரப்புக்கள் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் அதிகரித்துச் செல்லும் இந்த போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான முறையான வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூகத்தினர் முன்வரவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஓமந்தையில் புகையிரதம் மோதி குடும்பஸ்தர் பலி!

(வவுனியா நிருபர்)

வவுனியா, ஓமந்தையில் புகையிரதம் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இன்று இரவு 10 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

யாழிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதம் இரவு 10 மணியளவில் ஓமந்தை, விளக்குவைத்தகுளம் பகுதியில் பயணித்தபோது புகையிரத பாதையில் இருந்த குடும்பஸ்தர் ஒருவரை மோதியுள்ளது.

விபத்தில் சம்பவ இடத்திலேயே குறித்த குடும்பஸ்தர் மரணமடைந்த நிலையில், சடலம் புகையிரத தினைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு, வவுனியா புகையிரத நிலையத்தில் வைத்து பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது.

சடலத்தை வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவத்தில் ஓமந்தை விளக்குவைத்தகுளம் பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான எஸ்.றகுலன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வவுனியாவை சென்றடைந்த பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிரான கையெழுத்துப் போராட்ட ஊர்தி

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக் கோரிய ஊர்திவழி கையெழுத்துப் போராட்டம் நேற்று (18) வவுனியாவை வந்தடைந்தது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி மற்றும் சர்வஜன நீதி அமைப்பு இணைந்து முன்னெடுத்துவரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிரான காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரையான ஊர்திவழி கையெழுத்துப் போராட்டம் வவுனியாவிலும் முன்னெடுக்கப்பட்டது. காலை 10 மணியளவில் வவுனியா தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகமான தாயகத்தில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த கையெழுத்துப் போராட்டம், நகரின் பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், தமிழரசுக் கட்சியின் வவுனியா கிளையின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு தமது ஆதரவை வழங்கியிருந்தனர்.

ஜெனீவா விவகாரம் குறித்து ஆராய தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூடியது

ஜெனீவா விவகாரம் மற்றும் பங்காளிக் கட்சிகளின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்று கூடியது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தலைமையில் வவுனியாவில் உள்ள கட்சி அலுவலகமான தாயகத்தில் நேற்று (18) காலை 10.30 மணிமுதல் மாலைவரை குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் மற்றும் அதன் தற்போதைய போக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் அன்மைக்கால செயற்பாடுகள், பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகள், நிலைவேந்தல் நிகழ்வுகள் குறித்தும் ஆராயப்பட்டன.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி.சிறிதரன், கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் வடமாகாண சபை கௌதார அமைச்சரும், கட்சியின் செயலாளருமான ப.சத்தியலிங்கம் மற்றும் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

அரச கட்டடங்கள் குறித்து தேசிய கொள்கை உருவாக்கப்பட வேண்டும்

கணக்காய்வாளர் நாயகம் பரிந்துரை

அரச கட்டடங்கள் தொடர்பில் தேசிய கொள்கை யொன்று உடனடியாக உருவாக்கப்பட வேண்டுமென கணக்காய்வாளர் நாயகம் பரிந்துரை செய்துள்ளார்.

அரச நிறுவனங்களுக்கான கட்டடத் தேவைகளை பூர்த்திசெய்தல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பித்தே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

2021ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரையில் கூட்டுத்தாபனங்கள், சட்டபூர்வ அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் திட்டங்கள் உட்பட 142 அரச நிறுவனங்களின் 1,165 கட்டடப் பயன்பாடுகள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2016ஆம் ஆண்டுமுதல் 2020ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அரசாங்கத்தினால் உரிய நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட 720 பில்லியன் ரூபா மூலதன ஒதுக்கீட்டில் 482 பில்லியன் ரூபா குறித்த கட்டடங்களின் தேவைகளுக்காக செலவிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது அரசின் மூலதன ஒதுக்கீட்டில் 14 முதல் 16 வீதம் வரை உள்ளதாக கணக்காய்வாளரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரச பணிகளுக்கான கட்டடங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும்போது, அரசின் விலை மதிப்பு தினைக்களத்திலிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டைப் பொருட்படுத்தாமல் குத்தகை செலுத்தப்படுவதாகவும் அங்கீகரிக்கப்பட்ட குத்தகை தொகையை விட அதிகமாக குத்தகை செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச கட்டடங்கள் உட்பட நிதியல்லாத சொத்துகளுக்கு முழுமையாக மையப்படுத்தப்பட்ட தகவல் அமைப்பைப் பேணுவதற்காக 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிதி அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட கட்டுப்பாட்டு நாயகத் தினைக்களம், எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை என கணக்காய்வாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த144 நிறுவனங்களில் 71 நிறுவனங்கள் மாத்திரமே குத்தகை அடிப்படையில் தமது கட்டடங்களை பயன்படுத்துவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

144 நிறுவனங்களில் 118 நிறுவனங்கள், இனக்கச் சான்றிழழ் இல்லாத கட்டடங்களுக்கு உரிமை கோருவதும் தெரியவந்துள்ளது.

ஆய்விற்குட்படுத்தப்பட்ட 144 நிறுவனங்களில் 10 நிறுவனங்கள் தமக்கு சொந்தமான 87 கட்டடங்களை வெளித்தரப் பினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளபோதிலும் அதற்கான குத்தகையை அரச விலை மதிப்புத் தினைக்களத்தினால் மதிப்பீடு செய்யவில்லை.

8 அரச நிறுவனங்கள் தமது கட்டடங்களை உரிய தொகையை மதிப்பிடாமல் தனியாருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

உணவுப் பாதுகாப்பு - போஷாக்கை உறுதிசெய்யும் திட்டத்தை துரிதப்படுத்துக!

மாவட்ட, பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான பல்துறை கூட்டுப் பொறிமுறையை நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களைத் தெளிவுபடுத்தும் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிசெய்யும் திட்டத்திற்குப் பொறுப்பான ஜனாதிபதி ஆலோசகர் சுரேன் படகொட தலைமையில் இணையவழி ஊடாக நடைபெற்ற இக்கலந்துரையாடலில், கிராமிய மட்டத்தில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான பல்துறை கூட்டுப் பொறிமுறையை அமுல்படுத்துதல், அதன்போது ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் வழங்கக்கூடிய தீர்வுகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அடுத்த வாரத்திற்குள் வீடு வீடாகச் சென்று இது தொடர்பில் தேவையான தரவுகளை சேகரிக்கும் பணியை ஆரம்பிக்குமாறும், தேவைப்படின் இந்த தரவு சேகரிப்பை ஊடாக மேற்கொள்ள முடியும் எனவும் அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டிய படகொட , உணவு இல்லாதவர்களுக்கு உணவு வழங்குவதை முதன்மை இலக்காகக்கொண்டு இற்றைத் திட்டத்தை முன்னெடுக்குமாறும் தெரிவித்தார்.

கிராமிய பொருளாதார மறுமலர்ச்சி மையங்கள் அமைப்பது தொடர்பான அடிப்படை பிரச்சினைகள், பயிர்களுக்கு போதிய உரம் இல்லாமை, விதைகள் தட்டுப்பாடு, விவசாய இயந்திரங்களின் இயக்கத்திற்கு தேவையான எரிபொருள் பற்றாக்குறை, பூச்சிகொல்லி பற்றாக்குறை, கால்நடைகளால் பயிர் சேதம் மற்றும் மேலதிக அறுவடைகளை விற்பனை செய்வதில் உள்ள சிரமங்கள் போன்ற பல்வேறு விவசாயப் பிரச்சினைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், உரம் மற்றும் பூச்சிகொல்லிகளை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், எரிபொருள்களான OR குறியீட்டின் கீழ் எரிபொருள் ஒதுக்கீட்டை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கலாநிதி சுரேன் படகொட சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த கலாநிதி சுரேன் படகொட,

"கடந்த சிறுபோகம் மற்றும் பெரும்போகத்தின் தோல்வியின் காரணமாக நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டது. நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறை காரணமாக சுமார் 60% மக்கள் உணவு உட்கொள்வதைக் குறைத்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. அதனால்தான் குறைந்த வருமானம் பெறு வோருக்கு உணவு வழங்குவது, எங்களின் முதன்மையான திட்டங்களில் ஒன்றாக அமைந்துள்ளது.

யாரும் பட்டினியால் வாடுவதற்கு இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி எங்களை அறிவுறுத்தியுள்ளார். எனவே, சமூக கமையவரை என்ற திட்டத்தின் மூலம் உணவு இல்லாதோருக்கு உணவு வழங்க திட்டமிட்டுள்ளோம். அதன்படி, வீட்டு அலகுகளை வலுப்படுத்தவும், எதிர்வரும் பெரும்போகத்தில் பயிர்செய்கைத் திட்டங்களை செயல்படுத்த தரவுகளை சேகரிக்கவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் தொடர்ச்சியாக நடைமுறைப் படுத்தப்பட்டால் நாட்டிலுள்ள மக்களுக்கு தட்டுப்பாடு இன்றி உணவு வழங்க முடியும். நாட்டில் உணவு நெருக்கடி ஏற்படுவதற்கு ஒரு வகையில் அரச அதிகாரிகளும் பொறுப்புக் கூறவேண்டும். அரச அதிகாரிகளாகிய நாமும் இதில் தலையிட வேண்டும். இந்த பொருளாதார மையத்தின் ஊடாக உணவு மற்றும் பயிர்செய்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த நாம் எதிர்பார்க்கிறோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர்களான எல்.பி.ஜயம்பதி, கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன, உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குக் குழுவின் பணிப்பாளர்களான யசந்தா முனசிங்க, பி.எம்.எஸ்.ஜயதிலக்க உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

உடுவிலில் பனங்கூடலுக்கு தீ வைத்த விஷமிகள்

20 பனை மரங்கள் தீயில் எரிந்து நாசம்

உடுவில் தொம்பை வைரவர் ஆலய வளாகத்தினுள் நின்ற பனை மரங்களுக்கு விஷமிகள் தீ வைத்தமையால் 20 பனைகள் முற்றாக எரிந்து கருகியுள்ளன.

யாழ்ப்பாணம் தொம்பை வீதியிலுள்ள தொம்பை வைரவர் ஆலய வளாகத்தைச் சூழ பனை மரங்கள் காணப்பட்டன. அவற்றுக்கு விஷமிகள் தீ வைத்துள்ளனர்.

பனை மரங்கள் தீப்பிரிந்து எரிவதனை அவதானித்த அயலவர்கள் உடனடியாக தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவித்தமையை அடுத்து, அவ்விடத்திற்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

தீயணைப்புப் படையினர் விரைந்து செயற்பட்டமையால், தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இல்லையென்றால் அயலில் இருந்த தென்னந்தோட்டம் மற்றும் மேலும் பல பனை மரங்கள் தீயினால் அழிவடைந்திருக்கும் என அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர்.

இருந்தபோதிலும் தீயினால் 20 பனை மரங்கள் எரிந்து கருகியுள்ளன. சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டமையை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இலத்திரனியல், மின்சார தொழிற்துறையை மேம்படுத்த பங்களாதேஷுடன் இலங்கை கைகோர்ப்பு

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் பங்களாதேஷ் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து, பங்களாதேஷில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் அண்மையில் இலங்கை இலத்திரனியல் மற்றும் மின்சார ஏற்றுமதியாளர்களுக்கான மெய்நிகர் வர்த்தக அமர்வை ஏற்பாடு செய்தது.

பங்களாதேஷைச் சேர்ந்த மூன்று முன்னணி இலத்திரனியல் மற்றும் மின்சார நிறுவனங்கள் வர்த்தக அமர்வில் இணைந்ததுடன், பங்களாதேஷ் சந்தையை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கும் 10 இலங்கை நிறுவனங்களுடன் பயனுள்ள சந்திப்புகளை நடத்தின.

பங்களாதேஷ் இலத்திரனியல் வர்த்தகர்கள் சங்கம் மற்றும் இலங்கை நிறுவனங்களுக்கு இடையில் தனியான சந்திப்பொன்றும் இடம்பெற்றது. இச்சந்திப்பில், இலங்கையின் இலத்திரனியல் மற்றும் மின்சார தொழிற்துறையை மேம்படுத்துவதற்கு இலங்கையுடன் இணைந்து செயற்பட சங்கத்தின் விருப்பத்தை யெலாளர் நாயகம் கௌரங்க டே தெரிவித்தார்.

ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆர்வமுள்ள பகுதிகளைக் குறிப்பிட்டு தமது முன்மொழிவுகளை சங்கத்திற்கு சமர்ப்பிக்குமாறு செயலாளர் நாயகம் இலங்கை நிறுவனங்களைக் கேட்டுக்கொண்டார்.

இலங்கை மற்றும் பங்களாதேஷுக்கு இடையிலான மின்சாரத் துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் பன்முகப்படுத்துவதற்கும் இலங்கை உயர்ஸ்தானிகராலயமும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையும் இணைந்து செயற்படுகின்றன.

இலங்கையிலுள்ள ஆடை அலங்கார விற்பனை நிலையத்தின் கிளை டுபாயில்

(அஸ்ரப் ஏ சமத்)

இலங்கையிலுள்ள நோலிமிட் ஆடை அலங்கார விற்பனை நிலையத்தின் புதிய கிளை ஒன்று நேற்று முன்தினம் (17) டுபாய் நகரத்தில் அல் ஹுரையர் விற்பனைத் தொகுதியில் இலங்கை நோலிமிட் முகாமைத்துவப் பணிப்பாளர் முபாரக் ஹாஜி மற்றும் அவரது புதல்வர் ஹாபீஸ் ஆகியோரினால் திறந்துவைக்கப்பட்டது.

இதனால் இலங்கையர் 50 இளைஞர், யுவதி களுக்கு தொழில்வாய்ப்பும் கிட்டியுள்ளது. இத் திட்டத்தினால் இலங்கையர் வெளிநாட்டில் முதலிட்டுள்ளனர்.

இதன் வருமானங்கள் அந்நிய செலவாணி கள் இலங்கைக்கு கிடைக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கையர் ஒருவர் ஆடைத் தொழிற்சாலை மற்றும் ஆண், பெண், சிறுவர் ஆடை அலங்காரத்துறையில் டுபாயில் முதலிட்டு திறந்துவைத்துள்ள முதலாவது சந்தர்ப்பம் எனவும் குறிப்பிடப்பட்டது.

மக்களின் துயர் துடைக்கும் பணியில் மலையக 'அகரம்' அமைப்பு

பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கு வரும் மக்களின் துயர் துடைக்கும் பணியில் மலையக 'அகரம்' அமைப்பு முனைப்புடன் களப்பணியாற்றி வருகிறது.

இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள குருவிட, கீரகல தமிழ் வித்தியாலயத்தில் சுமார் 150 மாணவர்கள் கல்வி கற்றுவரும் நிலையில் அவர்களில் 45இற்கும் மேற்பட்ட மாணவர்கள் அன்றாட உணவுத் தேவையை நிறைவு செய்ய முடியாமல் திண்டாடி வருவதை அறிந்த அகரம் அமைப்பினர், கடந்த வாரம் அந்த பாடசாலையில் கல்வி கற்றுவந்த மாணவர்கள் அனைவருக்கும் மதிய உணவினை வழங்கினார்கள்.

"அன்றாட உணவுத் தேவையை பூர்த்திசெய்ய முடியாமல் கஷ்டப்படும் இந்த மாணவர்களுக்கு தன்னார்வ அமைப்புகள் முன்வந்து உதவுவது காலத்தின் கட்டாயமாகும்" என்று அகரம் அமைப்பின் மகளிர் அணித் தலைவி திருமதி டிலானி 'தமிழன்' நாளிதழுக்குத் தெரிவித்தார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

சிறு விளம்பரம்

ஜோதிடம்

உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒரு முறை என்னை தொடர்புகொண்டால் 100% வெற்றி நிச்சயம். நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன், முன்னேறத்தடை, எதிரிக்தொல்லை, வழக்கு, கொடுத்த பணம் திரும்பி வர, காதல், கணவன், மனைவி பிரச்சினை, நீண்டகால நட்பின் பிரிவால் வேதனை, நன்றாக பழகி பயனடைந்துவிட்டு விலகிச்சென்றுவிட்டவர், குழந்தையின்மை மற்றும் சில பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு. நினைத்தது நினைத்தபடி. உடனே என்னை தொடர்புகொள்ளுங்கள். உலகப் புகழ்பெற்ற மலையான மாந்தீரீக ஜாம்பவான் தத்துவஞானி மகரிஷி தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி 071 0192687 www.facebook.com / Srimath suwamiji

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்தரங்கை காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, செப்டெம்பர் 19ஆம் திகதி, திங்கட்கிழமை

தொடரும் தமிழர் பிரதேச ஆக்கிரமிப்பு!

திருகோணமலை வரலாற்று முக்கியத்துவம் பெற்ற, பாடல்பெற்ற திருத்தலமான கோணேஸ்வரத்தின் புனிதபூமி ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார். சம்பந்தனால் ஜனாதிபதியிடம் பல விடயங்கள் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

"இலங்கையின் வரலாறு அறிந்த தனாதிபதி ரணிலை திருக்கோணேஸ்வரத்துக்குள் நுழைவதற்கான பிரமாணிக்க கோட்டையின் ஒரு பகுதியில் தங்கியிருந்த இராணுவத்தினர் அங்கு புத்தர் சிலையொன்றை நிர்மாணித்தனர்.

திருக்கோணேஸ்வரத்தையும், புத்த பெருமானையும் வழிபட விரும்பிய மக்கள் இப்பிரதான நுழைவாயிலின் வழியாக கோட்டையினுள் சென்று வழிபாடு செய்தனர். கோட்டைக்குள் நுழைந்து புத்தபெருமானையும் கோணேஸ்வரரையும் வழிபடுவதற்கு வேறு வழிகள் ஏதும் இருக்கவில்லை.

அண்மைக்க காலங்களில் பத்தபெருமானின் சிலைக்கும், அங்கிருந்து திருகோணேஸ்வரத்துக்கும் ஒரு புதிய பாதை திறக்கப்பட வேண்டுமென்று முன்மொழிவொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தேவையற்று என்பதோடு, ஆட்கள் இவ்வழியில் அத்துமீறுவதற்கும் அக்காணியில் தங்கியிருப்பதற்கும் வழிவகுக்கும்.

அது திருக்கோணேஸ்வரம் கோயில் மற்றும் புத்த பெருமானின் சிலை ஆகியவற்றின் புனிதத்தன்மையும், பக்தி உணர்வும் குறைவடைவடைவதற்கே வழிவகுக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரினால் இத்திணபூரியிலிருந்து சில வர்த்தகர்கள் கொண்டுவரப்பட்டு, கோணேஸ்வரத்துக்கான பாதையில் அமர்த்தப்பட்டனர். அது இப்பகுதியின் புனிதத்தன்மையும், பக்தி உணர்வும் குறைவடைவதற்குக் காரணமாகியது.

புத்தபெருமான் சிலை உள்ள பகுதியில் திருகோணேஸ்வரம் வரையிலான இப் புதிய பாதை திறப்பு நிறுத்தப்பட வேண்டுமென நான் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். இல்லையேல் இது தீங்கு இழைக்கப்படுவதற்கே வழிவகுக்கும். ஒரு சர்வதேச உடன்படிக்கையான இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின்கீழ், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களினதும், தமிழ் பேசும் மக்களினதும் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பெரும் நிலப்பரப்பு, திருகோணமலை மாவட்டத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக வட மத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுர மாவட்டத்திலிருந்து ஒரு பெரும் நிலப்பரப்பு பதிலீடு செய்யப்படவுள்ளது என எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதன்மையான நோக்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இனத்துவ நிலத் தொடர்ச்சியைத் துண்டிப்பதாகும்.

பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து பெரும் நிலப்பரப்பொன்றை கிழக்கு மாகாணத்துக்குள் கொண்டுவருதம் அதேவேளை, கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலிருந்து பெரும் நிலப்பரப்பொன்றை பொலன்னறுவை மாவட்டத்தோடு இணைக்கும் அதே போன்றதொரு முன்மொழிவு திருகோணமலையின் தெற்குப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது, பாரதூரமான எதிர்வலைகளையும் உலகில் இரண்டாவது மிகச் சிறந்த துறைமுகமாக கருதப்படும் திருகோணமலைத் துறைமுகத்துக்குப் பாரதூரமான பின்விளைவுகளையும் ஏற்படுத்தக்கடிய சாத்தியத்தோடு, வடக்கு மற்றும் தெற்கின் கல்சார் எல்லைகள் ஊறுபடுவதற்கும் வழிவகுக்கும்.

இப்படிதிகளில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களோ, எமது அயல்நாடோ அல்லது மிக அருகில் உள்ள நாடுகளோ இந்த நடவடிக்கையை அங்கீகரிக்கப்போவதில்லை. திருகோணமலை மாவட்டத்தின் வடக்கிலும், தெற்கிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையில் இனத்துவ நிலத் தொடர்ச்சியை இல்லாது செய்வதே இதன் முழு நோக்கமாகும்.

கிழக்கு மாகாணத்தை ஒரு சிங்கள பெரும்பான்மை மாகாணமாக மாற்றியமைப்பதும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான இனத்துவ நிலத் தொடர்ச்சியை துண்டிப்பதும் பேரினவாத சிங்கள அரசுகளின் நீண்டகால குறிக்கோளாக இருந்து வருகின்றது.

இம் முயற்சிகள் அனைத்துக்கும் எதிப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டமும் தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையினராகக் கொண்டதாகும் என்பதோடு, எந்தவொரு மாவட்டமும் சிங்களப் பெரும்பான்மை மாவட்டமாக இல்லை என்பதுவுமே மதார்த்தம்.

இது, வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களாகக் கொண்ட தமிழர்கள் தமிழ்பேசும் மக்கள் ஓர் ஐக்கிய மற்றும் பிரிபடாத இலங்கை என்ற வரையறைக்குள் உள்ளக சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடைய ஒரு மக்கள் குழுவினர் ஆவர் என்ற நிலைப்பாட்டுக்கு அமைவானதாகும். இதனையே தமிழர்கள் – தமிழ்பேசும் மக்கள் ஓர் அரசியல் தீர்வாகக் கோரி நிற்கின்றனர்" என்று ஜனாதிபதி ரணிலுக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார் சம்பந்தன்.

திருக்கோணேஸ்வரத்தின் இதே பிரச்சினையை அமைச்சரவையில் கடந்தவாரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியபோது, இந்தப்பிரச்சினை குறித்து தாம் அறிந்திருப்பதாகவும், அது தொடர்பில் அறிக்கையொன்றை தருமாறும் ஜனாதிபதி ரணில் கூறியதாகவும் செய்திகள் ஏற்கனவே வெளியாகிருந்தன. அரசாங்கத்திடம் இந்த பிரச்சினையை முதலில் எடுத்துக்கூறிய அமைச்சர் டக்ளஸ், அடுத்தவாரம் திருகோணமலைக்கு சென்று கள நிலவரத்தை நேரடியாகவே ஆராயவுள்ளதாக தெரிகிறது.

தமிழர் தாயகத்தின் தலைநகர் என்ற பெருமையுள்ள திருகோணமலையின் பாரம்பரிய மாண்மியங்களும், புராதன பெறுமதியும் கடந்தகாலங்களில் திட்டமிட்டே அழிக்கப்பட்டன. கன்னியா வெந்நீரூற்று போன்ற இடங்களுக்கு கூட அனுமதிபெற்றே சென்றுவரவேண்டிய நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டது. கடந்த நல்லாட்சிக்காலத்தில் ஆளுங்கட்சியுடன் மிக நெருக்கமாக செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருகோணமலை ஆக்கிரமிப்புகள் குறித்து அவ்வப்போது பேசினாலும் ஆக்கபூர்வமாக எதையும் செய்யவில்லை. திருகோணமலையின் எம்.பியாக இருக்கும் சம்பந்தன்கூட தித்திரைவில் இருந்து விழித்துக்கொண்டவராக இப்போதுதான் ஆக்கிரமிப்பின் தாற்பரியத்தை உணர்ந்திருக்கிறார். இன்னொரு மாகான அரசியல்வாதியொருவர் அங்கு ஆக்கிரமிப்பை சில ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொண்டார் என்று இப்போது சொல்லும் சம்பந்தன், வெள்ளம் வந்ததை தெரிந்துகொண்டும், முழுமையாக வந்தபின்னர் அணை கட்டுவோம் என்று அமைதியாக இருந்துவிட்டார்?

திருகோணமலை தொடக்கம் முல்லைத்தீவு குருந்தூர்மலைவரை தமிழர் தொன்மை வாய்ந்த பகுதிகளில் அடாவடித்தனமான ஆக்கிரமிப்புகள் இடம்பெறுகின்றன. ஆட்சியாளர்களுக்குத் தெரியாமலா இவையெல்லாம் நடக்கின்றன? தமிழர் தொன்மையைக் காக்க உதவுமாறு ஜனாதிபதியிடம் சம்பந்தன் கோருவது நியாயமானதுதான். ஆனால், ரணில் அதனை செய்வாரா? செய்யத்தான் முடியுமா?

பிரதமராக ரணில் செயற்பட்டுக்கொண்டிருந்த ஒரு காலத்தில், அதுவும் உன்நாட்டு சண்டை உக்கிரமாக நடந்த ஒரு காலத்தில், வடக்கு – கிழக்கின் எல்லைப்பகுதிகளில் இரவுநேரக் களியாட்ட விடுதிகளைத் திறக்கத் தீர்மானித்தார் ரணில். ஏனெனில், புலிகள் இயக்க உறுப்பினர்கள் அல்லது அப்பகுதி மக்கள் அவற்றுடன் கலந்து போராட்ட குணத்தை இழந்துவிடுவர் என்பது ரணிலின் கணிப்பு. அது சாத்தியமாகவில்லை. ஆனால், அந்தக்காலத்தில் தமிழர் பிரதேச ஆக்கிரமிப்பு குறைவின்றி நடந்தது. இப்போது அவரிடம் போய் பிரச்சினைகளை சொல்வது விழலுக்கிறைத்த நீர். தமிழர் பிரதேச ஆக்கிரமிப்பு சர்வதேசமயப்படுத்தப்பட வேண்டும். அப்போதே அதற்கொரு தீர்வு கிடைக்கும்.

கடனில்லா வாழ்வு வேண்டும்!

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இடம், கல்வி, ஆரோக்கியம் ஆகியனவற்றைப் பெற்றிருந்தாலே நாம் மகிழ்ச்சியாக வாழ முடியும். வாழ்க்கையில் தேவையில்லாததை கைவிடுவும், தேவையில் மட்டும் கவனம் செலுத்துவதும் மிகவும் முக்கியம். அன்றாட வாழ்வில் அடிப்படை தேவைகளில் எளிமையை கடைப்பிடித்தால், பிற்காலத்தில் ஏற்படக்கூடிய பொருளாதார சிக்கல்களை நம்மால் தவிர்க்க முடியும்.

திருமணமானதும் ஒரு முழுமையான புதிய வாழ்க்கை முறைக்கு குடும்பத் தலைவர்கள் தங்களைப் பொருத்திக் கொள்ள வேண்டும். தனக்கு முற்றைய தலைமுறை, தனது தலைமுறை, தனக்கு அடுத்த தலைமுறை என மூன்று தலைமுறைகளைப் பராமரிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள் இவர்கள். எனவே, வாழ்க்கைத் துணையுடன் ஆலோசித்து நிதி நிர்வாகம் பற்றிய தெளிவான சிந்தனையுடன் வாழ்க்கையைத் தொடங்குவது நல்லது.

இருவரும் ஒவ்வொரு மாதமும் ஏற்படும் வரவு, செலவு மேம்பிப்பு, கடன் இவற்றை பற்றிய விடயங்களில் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும். கடன்தரி வாழ வேண்டுமானால், எப்போது, யார், எவ்வளவு செலவளிக்க வேண்டும் என்பதில் சரியான முடிவு எடுக்க வேண்டும். வங்கி ஒன்றில் ஒரு கூட்டுக் கணக்காக மின்னஞ்சல் முகவரியுடன் தொடங்குவது நல்லது. அந்த வங்கிக் கணக்குகள் தொடர்பான கட்டண அறிக்கைகள், இதர செலவுகளைப் பற்றி இருவரும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும்.

நிதி சார்ந்த விடயத்தில் வருமானத்திற்குள் வாழக் கற்றுக் கொள்வது மிக முக்கியமானது. மேலும், எதிர்பாராத சூழ்நிலைகளை சமாளிக்க நிதி நிலைமை தயாராக இருக்கும் நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இது இருவருக்கும் எளிதில் பணமாக்கக்கூடிய ஒரு நிதித் திட்டமாக இருக்க வேண்டும்.

கடன் இருந்தால் சேமிப்பில் உள்ள பணத்தைக் கொண்டு, அதிலிருந்து விரைவாக வெளியே வர முயற்சிகள் எடுக்க வேண்டும். தேவைப்படும் பொருட்களை மாதக் கடனில் வாங்குவதைத் தவிர்த்து, கடனில்லாமல் கையிலிருக்கும் காசைக் கொண்டு வாங்கலாம். ஆடம்பர வாழ்வை தவிர்த்து, குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வாடகை வீடு, வாகனம், பிற பொருட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

குறைந்த நபர்கள் கொண்ட குடும்பத்துக்கு பெரிய வீட்டை வாடகைக்கு தேர்ந்தெடுப்பது, பயன்பாடு குறைவாக இருந்தும் தேவையில்லாமல் தவணை முறையில் வாகனங்களை வாங்குவது, கடன் அட்டைகளை அடிக்கடி பயன்படுத்துவது போன்றவற்றை தவிர்ப்பது நல்லது.

பல குடும்பங்களில் மனைவிக்கு அன்றாடச் செலவுகளைத் தவிர்த்து இதர பண விடயங்களைப் பற்றி விழிப்புணர்வில்லாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானது. ஏதேனும் நெருக்கடி நிலை ஏற்படும்போது மனைவி இப்படி இருப்பது பெரும் சிக்கல்களுக்கு வழிவகுக்கும். மேலும், அத்தப் பெண் குடும்ப நிதி, நிலுவையிலுள்ள கடன், காப்பீட்டுத் தொகை போன்ற எதைப் பற்றியும் அறியாமல் இருப்பார். இதனால், குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உருவாகி பெரிய பிரச்சினைகளுக்கு வழிவகுக்கலாம்.

ஆவணப்படுத்துதலில் உள்ள சிக்கல்கள் காரணமாக பெண்கள் பெரும்பாலும் தங்களுடைய பெயரை கணவனின் வாரிசு என்று பதிவு செய்யாமல் விட்டு விடுகிறார்கள். பெண்கள் தங்கள் வாழ்க்கைத் துணைவரின் வாரிசாக தங்களை அனைத்து ஆவணங்களிலும் பதிவு செய்து செய்து கொள்ள வேண்டும். நிதிசார்ந்த அனைத்து இடங்களிலும் புதிய தகவல்களைப் பதிவு செய்து கொள்வது, பிற்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்கும்.

திருமணத்திற்குப் பிறகு காப்புறுதிய அதிகரிக்கவும், குடும்ப ஆரோக்கிய காப்பீட்டுத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கவும் முனைப்புகள் காட்டலாம். இருவரின் பெற்றோருக்கும் மருத்துவக் காப்பீடு இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு வய அதிகரிப்பதைப் போலவே மருத்துவ செலவுகளும் அதிகரிக்கும் என்பதை நினைவில் கொண்டு, அதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்து கொள்ள வேண்டும்.

மூத்த குடிமக்களுக்கான பல்வேறு ஆரோக்கிய காப்பீட்டுத் திட்டங்கள் இருக்கின்றன. குழந்தைகளை அரசுப் பாடசாலைகளில் சேர்த்து படிக்க வைத்தல், அரசுப் பேருந்துகளில் பயணம் செய்தல், அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துக் கொள்ளுதல், எல்லா பணப்பரிவர்த்தனைகளையும் இணையவழியில் செய்தல், வீட்டிற்கு ஒரு தரைவழி தொலைபேசி பயன்பாடு போன்றவை செலவுகளைக் குறைக்கும்.

குடும்பச் செலவைக் கண்காணிப்பது அவர்களை கடன்றவர்களாக மாற்றும். ஒரு மாதத்தில், செய்த அனைத்து செலவுகளையும் சரிபார்த்து பதிவு செய்வதன் மூலம், வரவு - செலவு பற்றிய தெளிவான புரிதல் இருவருக்கும் இருக்கும். இது தேவையற்ற செலவுகளை குறைத்து, அவர்கள் கடன்களிலிருந்து விரைவில் விடுபட உதவும்.

இது அவர்களின் செலவுகளைக் கட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல், நல்ல தொகையைச் சேமிக்கவும் உதவும். இதன் மூலம், அவர்கள் அடைய விரும்பும் வீடு கட்டுதல் போன்ற இலக்குகளை அடையவும், வாய்ப்புள்ள முதலீட்டுத் திட்டங்களை முறையாக செயல்படுத்தவும் முயற்சிக்கலாம்.

பணத்தைக் கையாள்வதில் நாம் குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். அவர்கள் கேட்பதை தேவையிருந்தால் மட்டுமே வாங்கித்தர வேண்டும். அவர்களுக்கு உண்டியல் ஒன்றை வாங்கிக் கொடுத்து சேமிக்கும் பழக்கத்தை கற்றுக் கொடுக்கலாம். சிக்கமாக வாழவும், நமது வருமானத்தை உயர்த்தவும் வழிகளை கண்டுபிடிக்க வேண்டும்.

கடனில்லாமல் வாழ்கிறேன் என்ற நினைப்பு தரும் நிம்மதியை உணர்ந்தோர் கடன் வாங்கி பொருள் சேர்க்க ஆசைப்பட மாட்டார்கள். கடன் என்ற சொல்லைக் கேட்டவே மனம் அஞ்சிக் கலங்க வேண்டும். கடனிலும், தவணை முறையிலும் ஒருபோதும் பொருட்களை வாங்கக் கூடாது. தன்ஞுடி என்னும் கொடிய வலையில் சிக்க வைக்கும் இன்றைய உலகத்தில், மன உறுதி இருந்தால் மட்டுமே இது சாத்தியம்.

கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினானாம் இலங்கை வேந்தன். வேந்தனுக்கே அந்த நிலை என்றால், கடன்பட்டார் நம் நிலை என்ன? எனவே, கடனின்றி வாழ்வோம்; கவலையின்றி வாழ்வோம்.

- பேராசிரியர் என்.பத்ரி -
(நன்றி - தினமணி)

நிலவில் கண்டெடுத்த தாதுப்பொருள்

சீன விண்வெளி அமைப்பு நிலாவுக்கு அனுப்பிய, சாங்பி-5 விண்கலன், டிசம்பர், 2020இல் திரும்பி பூமிக்கு சில மாதிரிகளை எடுத்து வந்தது. அதை ஆராய்ந்த சீன விஞ்ஞானிகள், ஒரு புதிய தாதுப்பொருள் இருப்பதைக் கண்டறிந்தனர். தூய கண்ணாடிப் படிகம் போல உள்ள அத்தாதுவை, அணு உலைக்கான எரிபொருளாகப் பயன்படுத்தலாம் என்று சீன அணு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இப்புதிய தாதுவிற்கு சாங்பிசைட்-லை என்று சீனர்கள் பெயரிட்டுள்ளனர். கடைசியாக 1970இல்தான், நிலாவிலிருந்து நேரடியாக மாதிரிகளை பூமிக்கு மனிதர்கள் எடுத்து வந்தனர். அதன் பின்னர் சீனாதான் அந்த அளப்பெரிய சாதனையை செய்துள்ளது.

பசுமைச்சலவை

சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காமல், அதே சமயம் இலாபகரமாகவும் சலவைத் தொழிலை நடத்தக்கினம்பியிருக்கிறது ஒக்ஸ்வொஷ் நிறுவனம். பிரிட்டனிலுள்ள இதனைத் தொடங்கிய டொக்டர் கைல் கிராண்ட் மற்றும் டாம் டிவில்டன் ஆகியோர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள்.

வர்த்தக சலவையகங்கள், உலர் சலவைக்கடை, சூழலைக் கெடுக்கும் முரட்டு வேதிப் பொருட்களை பயன்படுத்துகின்றன. இதை தவிர்க்க, ஒக்ஸ்வொஷ் ஈரச் சலவை முறையை நாடுகிறது. இந்த முறையில், சலவைக்கு மறுசுழற்சி செய்த நீர்தான் பயன்படுத்தப்படுகிறது. இயற்கை சோப்புத் தூள்களை பயன்படுத்துகிறது.

கிருமிகளைக் கொல்லவும், தூர்நாற்றத்தை போக்கவும், ஓசோன் தொழில்நுட்பம் பயன்படுகிறது.

அது மட்டுமல்ல, துணியின் வகையை அறிந்து, சோப்புகளைப் பயன்படுத்த செயற்கை நுண்ணறிவு கெமராக்களும், ரோபோ கரங்களும் பயன்படுகின்றன. கடைசியாக, சலவை செய்த துணிகளைக் கொடுக்க சூரிய மின்சார வாகனங்கள் செல்கின்றன. இயற்கைக்கு இசைவான சலவையகத்தை விஞ்ஞானிகளால்தான் நடத்த முடியும்.

நக்கல் நமசிவாயம்

தோல்விதான் வெற்றிக்கு முதற்படி என்று கிரிக்கெட் ரீமைப் பார்த்து உணர்ட்டம் என்று ரணில் மக்களுக்கு சொல்லுறார்..! ஏன் ரணில் ஐயாவைப் பார்த்தே உணரலாமே..!

இன்றைய நாளில்...

1658 – யாழ்ப்பாணத்தில் உரோமன் கத்தோலிக்க மதகுருமாரை மறைத்து வைத்திருப்பது மரணதண்டனைக்குரிய குற்றமாக டச்சு அரசால் அறிவிக்கப்பட்டது.

1893 – உலகின் முதலாவது நாடாக நியூசிலாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1893 – சுவாமி விவேகானந்தர் சிக்காகோவில் உலக சமய மாநாட்டில் உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினார்.

1985 – மெக்சிக்கோ நகரில் இடம்பெற்ற 7.8 ரிக்டர் நிலநடுக்கத்தினால் குறைந்தது 9,000 பேர் உயிரிழந்தனர்.

1991 – ஏட்டி பனிமனிதன் இத்தாலிக்கும், ஆஸ்திரியாவுக்கும் இடையில் ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டான்.

2006 – தாய்லாந்து இராணுவப் புரட்சியில் இராணுவத் தளபதி சோந்தி பூன்யா ரத்கிலின் ஆட்சியைக் கைப்பற்றினார்.

2014 – இலங்கையின் வடக்கே வேலணையில் நான்கு இடங்களில் மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டன.

நொச்சிக்குளம் இரட்டை படுகொலை விவகாரம்;

20 சந்தேக நபர்களுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் நொச்சிக்குளம் இரட்டை படுகொலை தொடர்பாக சரணடைந்த நிலையில் கைதுசெய்யப்பட்ட 20 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

குறித்த 20 சந்தேக நபர்களையும் கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது குறித்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், சம்பவ இடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுப்பொருட்களான இரத்த மாதிரி, இரண்டு மோட்டார்சைக்கிள்களுக்கான பதிவுப்புத்தக தினைக்களத்திற்கு அனுப்ப பொலிஸாரால் கோரப்பட்டதையடுத்து, பொலிஸ் அதிகாரி ஒருவரை நியமித்து குறித்த சான்றுப்பொருட்களையும் பகுப் பாய்வுத் தினைக்களத்திற்கு அனுப்ப நீதவான் உத்தரவு பிறப்பித்தார். இந்நிலையில், சந்தேக நபர்கள் 20 பேரையும் இம்மாதம் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த ஜூன் மாதம் 10ஆம் திகதி மன்னார் நொச்சிக்குளத்தில் இடம்பெற்ற சம்பவத்தில், உயிரிழந்தவர் பகுதியைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் கொலை செய்யப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக 20 பேர் மீது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

இரட்டைக் கொலை சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவர்களின் மற்றும் தலைமன்னார் பொலிஸ் உத்தியோகத்தர்கள், மன்னார் குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுப்பதாகக் கூறி பண மோசடி

ஏழு நாட்களுக்கான தொழில்வாய்ப்பு குறித்து மிகவும் அவதானமாக இருக்குமாறு அமைச்சர் மனுஷ எச்சரிக்கை

போலந்து, ருமேனியா, இஸ்ரேல், தென் கொரியா, ஜப்பான், மலேசியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதாகத் தெரிவித்து, நிதி மோசடி செய்யும் நபர்களிடம் சிக்கிக்கொள்ள வேண்டாம் - என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள நிலைமையின் காரணமாக பாரியளவானவர்கள் வேலை வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு செல்ல முயற்சிக்கிறார்கள்.

அதன் காரணமாக மேற்குறிப்பிட்ட நாடுகளில் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதாகத் தெரிவித்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்

தளங்களில் விளம்பரங்களை வெளியிட்டு அணுகாக நிதி பெற்றுக்கொடுக்கும் மோசடிக்காரர்கள் தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றன.

அதன் காரணமாக வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்கு நபரொருவருக்கோ அல்லது நிறுவன மொன்றுக்கோ கடவுச்சீட்டு அல்லது பணத்தை கொடுக்க முன்னர் குறித்த நிறுவனம், பணியகத்தின் சான்றிதழ் உரிமம் பெற்ற சட்ட பூர்வமான நிறுவனமா என்பதை தேடிப்பார்க்க வேண்டும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள முகவரியான www.slbfe.lk என்ற இணையத்தளம் அல்லது பணியகத்தின் 24 மணிநேரம் இயங்கும் தகவல் மத்திய நிலையத்தின் நேரடி அழைப்பு இலக்கமான 1989 என்ற இலக்கத்தினூடாக தொழில் நிறுவனங்களின் சட்டபூர்வாங்கங்கள் தொடர்பில் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊழல்வாதிகள் குறித்து தகவல் வழங்கினால் அவர்கள் தொடர்பில் தகவல்களை பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவுக்கு பெற்றுக்கொடுக்குமாறு அமைச்சர் கோரியுள்ளார். விசேட விசாரணைப் பிரிவினை தொலைபேசி இலக்கமான 0112864241 அல்லது 0112864118 என்ற தொலைநகல் இலக்கத்துக்கு அறிவிக்க முடியும்.

பொருட்களின் விலையை குறைக்கக் கோரி ஹட்டனில் பெண்கள் அமைப்பு ஆர்ப்பாட்டம்

(ஹட்டன் நிருபர்கள்)

"பொருட்களின் விலையை உடனடியாக குறை'' என்ற தொனிப்பொருளில் ஹட்ட னில் உரிமைகளுக்கான பெண்கள் அமைப் பின் ஏற்பாட்டில் போராட்டமொன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், தோட்டத் தொழிலாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் என பெருமளவானோர் பங்கேற் றனர்.

ஹட்டன் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு முன் பாக நேற்று (18) மதியம் இப்போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசணம் எங்கே, பால், முட்டை, இறைச்சி, மீன் ஆகிய அமைச்சர்களுக்கு மாத்திரமே, மக்கள் வீதியில்

சொகுசு வாகனம் அமைச்சர்களுக்கு, நாட்டுக்கு பாமான அமைச்சர்களின் வரப்பிரசாதங்களை இல்லாதொழி என்ற பதாகைகளை ஏந்திய வண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கற்பிட்டி துறையடிக்கும் - முகத்துவாரத்துக்கும் இடையிலான படகு சேவையில் பாதிப்பு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம், கற்பிட்டி துறையடிக்கும் - முகத்துவாரத்துக்கும் இடையில் முன்னெடுக்கப்பட்டுவந்த பயணிகள் படகு சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக கற்பிட்டி முகத்துவாரம் தீவு மக்கள் தெரிவிக்கின்றனர்.

முகத்துவாரம் தீவு பகுதியில் வாழும் மக்கள் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கும், மாணவர்கள் கல்வி கற்பதற்கும் கற்பிட்டி நகருக்கே வருகை தருகின்றனர்.

எனினும், தரைவழிப் போக்குவரத்து வசதிகள் இன்மையால், முகத்துவாரத்திற்கும், கற்பிட்டி துறையடிக்கும் இடையில் நடத்தப்படும் இயந்திர படகு சேவை மூலமே தீவுப் பகுதி மக்கள் நகரப் பகுதிகளுக்குச் சென்று தமது தேவைகளைப் பூர்த்திசெய்து வருகின்றனர்.

இந்நிலையில், சில மாதங்களாக குறித்த படகு சேவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தீவு மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இதனால் உரிய நேரத்திற்குச் சென்று தமது தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குவதாக முகத்துவாரம் தீவு மக்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன், ஒருசிலர் தமக்கு சொந்த இயந்திரமில்லாத படகுகளைப் பயன்படுத்தி முகத்துவாரத்திலிருந்து கற்பிட்டி துறையடி வரைக்கு தந்து தமது தேவைகளை நிறைவேற்றி வருவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

கடந்த சில மாதங்களாக மண்ணெண்ணெய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதால், இவ்வாறு சீரான முறையில் படகு சேவையை மேற்கொள்ள முடியாதுள்ளதாக அந்த படகு சேவையை முன்னெடுத்துவரும் உரிமையாளர் கூறினார்.

மேற்படி படகு சேவையை முன்னெடுக்க நாளொன்றுக்கு 10 தொட்டகம் 15 லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப்படும்போது, 5 லீற்றர் அளவில் மண்ணெண்ணெய் கிடைப்பதாகவும் படகு சேவை உரிமையாளர் சுட்டிக்காட்டினார்.

இந்த படகு சேவையை முன்னெடுக்க தேவையான மண்ணெண்ணெய் கிடைக்கும் பட்சத்தில், வழமைபோல் இந்த சேவையை முன்னெடுக்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

பேஸ்புக் காதலிக்காக விகாராதிபதியை கொலை செய்த இளம் பிக்கு

கொலை செய்யப்பட்டவர்

கொலை செய்தவர்

சீதுவை வெத்தேவ ஸ்ரீ நந்தாராம விகாராதி பதியை கொலை செய்த இளைய பிக்குவிடம் நடத்தப்பட்ட விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பேஸ்புக் காதலியின் ஆலோசனைக்கமையவே இந்தக் கொலையை செய்ததாக அவர் தெரிவித் துள்ளார்.

நேற்று கமுவே மகாநாம தேரர் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரான 19 வயதுடைய சிவரதாரிய ஏவல காமனசிறி. கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டிருந்தார். டுபாயிலுள்ள தனது பேஸ்புக் காதலியைத் தேடி செல்லவிருந்தபோது இவர் கைதுசெய்யப் பட்டிருந்தார்.

விகாரை வளாகத்திற்குள் துர்நாற்றம் வீசியதையடுத்து, கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட தேடுதலில், அறைக்குள் விகாராதிபதி சடமாக இருந்துள்ளார். அவரது கைகள் கட்டப்பட்ட நிலையிலும், முகத்தில் மிளகாய்த்தூள் தூவப்பட் டிருந்ததாகவும் முகத்தில் மிளகாய்த்தூள் தூவப்பட் டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த விகாரையில் தங்கியிருந்த 19 வயதான சிவரதாரிய ஏவல காமனசிறி என்ற இளம் பிக்கு காணாமல்போயிருந்தார். பின்னர் வியாழக்கிழமை அதிகாலை அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதானார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், விகாராதிபதியை கொல்ல 3 மாதங்களாக திட்டமிட்டிருந்ததை ஒப்புக்கொண்டுள்ளார்.

மினுவாங்கொட வனீனட்டியான பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதான யுவதியொருவருடன் இளம் பிக்குவுக்கு பேஸ்புக் மூலம் காதல் ஏற்பட்டுள்ளது. அவரது ஆலோசனையின்படியே கொலை நடந்துள்ளது. பேஸ்புக் காதலிய பிக்கு ஒருமுறை கூட நேரில் சந்தித்திருக்கவில்லை.

விகாராதிபதியின் சொத்துகள் குறித்து பேஸ்புக் காதலியிடம் இளம் பிக்கு தெரிவித் துள்ளார். அந்த தகவல்களை டுபாயில் தன்னுடன் தொடர்பில் இருந்த வீட்டு உரிமையாளருக்கு யுவதி தெரிவித்துள்ளார். சொத்துகளை கொள்ளையடித்து, டுபாய்க்கு கொண்டுவர யுவதியும், வீட்டு உரிமையாளரும் திட்டமிட்டுள்ளனர்.

இரண்டு வாகனங்களையும் தனக்கு தருமாறு இளம் பிக்கு தகராறு செய்துகொண்டிருந்தார். இரண்டு வாகனங்களையும் விற்று பணத்தை பெறுமாறு காதலி ஆலோசனை வழங்கியிருந்தார். இளம் பிக்குவுடனான தகராறையடுத்து, இரண்டு மூன்று முறை விகாராதிபதி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். கொலையின் பின்னர் இரண்டு வாகனங்களையும் 2 கோடி ரூபாவுக்கு விற்றுவிட்டு டுபாயிலுள்ள தனது காதலியிடம் செல்ல திட்டமிட்டிருந்தார்.டிபென்டர் ஜீப் ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சத்திற்கும் வேகன்ஆர் 65 இலட்சத்திற்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

டிபென்டரை வாங்கிய நபர் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாவுக்கு காரை வேறு ஒருவருக்கு விற்பனை செய்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.விற்பனை செய்யப்பட்ட டிபென்டர் ஜீப் மற்றும் வேகன்ஆர் ரக கார் 2 கோடி ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், மேற்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வாகனங்களை விற்பனை செய்த ரு. 2 கோடி பணமும் உண்டியல் முறை மூலமாக டுபாய்க்கு அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை, இளம் பிக்குவிற்கு 19ஆவது பிறந்தநாளாகும்.

இளம் பிக்குவின் காதலி, 4 மாதங்களுக்கு முன்னர் டுபாய் சென்றுள்ளார்.

விகாராதிபதி கொலையுடன், பேஸ்புக் காதலியின் பெற்றோருக்கும் தொடர்பிருப்பதாக பொலிஸார் நம்புகிறார்கள். அவர்கள் தற்போது தலைமறைவாகியுள்ளனர்.

விகாராதிபதியை கொல்வதற்காக கடந்த 12ஆம் திகதி மதியம் காதலியின் தாயும் தற்தையும் விகாரைக்கு வந்துள்ளனர். விகாராதிபதியின் அறைக்குள் புகுந்த இளம் பிக்குவும், அவரது பேஸ்புக் காதலியின் பெற்றோரும், விகாராதிபதியை தாக்கியுள்ளனர்.

காதலியின் தாயும் தற்தையும் விகாராதிபதியை கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விகாராதிபதியின் சடலம் விகாரையில் இருந்த நிலையில், இளம் பிக்கு வாகனங்களை விற்பனை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இரண்டு வாகனங்களையும் விற்றுவிட்டு, விகாராதிபதியிடம் இருந்த பணம் மற்றும் பிற விலையுயர்ந்த பொருட்களை எடுத்துக்கொண்டு, டுபாயிலுள்ள காதலியிடம் செல்ல முற்பட்ட போதே இளம் பிக்கு கிக்கினார்.

கொலைத் திட்டம் டுபாயில் உள்ள தனது காதலியால் தயாரிக்கப்பட்டது என்று இளம் பிக்கு கூறினார். விகாராதிபதியைக் கொன்று டிபென்டர் மற்றும் வேகன்ஆர் ஆகியவற்றை எடுத்து விற்று பணத்தை டுபாய்க்கு அனுப்புமாறு தனது காதலி தன்னை பல சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தியதாகவும் இளம் பிக்கு கூறியுள்ளார். காதலி, காதலியுடன் தொடர்புடைய வீட்டு உரிமையாளர் ஆகியோரை கைதுசெய்ய சர்வதேச பொலிஸாரின் உதவி நாடப்பட்டுள்ளது.

பலரின் பங்கேற்புடன் இடம்பெற்ற நாடகம், அரங்க உயர் டிப்ளோமா விருது வழங்கும் விழா

(எம்.நசார்)

நாடகம் மற்றும் அரங்க உயர் டிப்ளோமா விருது வழங்கும் விழா அண்மையில் மருதனை எல்பின்ஸ்டோன் திரையரங்கில் நடைபெற்றது.

டவர் மண்டப அரங்க மன்றம் 1978ஆம் ஆண்டு நாடாஞமன்ற முதலாம் இலக்க சட்டத்தின் கீழ், இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நாடாஞமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. அதன் நோக்கங்கள் மற்றும் பணிகளை செயல்படுத்துவதற்கான படிகளில் ஒன்றாக 1997இல் நிறுவப்பட்ட டவர் நாடக அரங்க பாடசாலையின் நாடகம் மற்றும் அரங்க உயர்தர டிப்ளோமா பாடநெறியின் எட்டாவது டிப்ளோமா விருது வழங்கும் விழா பௌத்த, கலாசார மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் வழிகாட்டலில் அண்மையில் எல்பின்ஸ்டன் திரையரங்கில் இடம்பெற்றது.

உயர் டிப்ளோமா சான்றிதழ் பெற்ற மூப்பத்தேழு பேரில் ஐவருக்கு சி. டொன் பல்டியன் ஜயவீர பண்டார புலமைப்பரிசில், சட்டத்தரணி ஜோன் டி. சில்வா புலமைப்பரிசில், சட்டத்தரணி சார்ல்ஸ் டயஸ் புலமைப்பரிசில், பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திர புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

டவர் நாடக அரங்கப் பாடசாலை இலங்கையில் நாடகம் மற்றும் அரங்க உயர் டிப்ளோமாவை வழங்கும் ஒரே பொது நிறுவனமாகும். நாடகம் மற்றும் நாடகம் பற்றிய அறிமுறை மற்றும் செய்முறை அறிவு நிறைந்த நிபுணத்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் கீழ் அறிவு, திறன் மற்றும் மனப்பான்மைகளைக்கொண்ட முழுமையான டிப்ளோமாதாரர்களை உருவாக்கி, அவர்களை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துடன் இணைத்து நாடகம் மற்றும் அரங்கியல் துறையில் கல்விமானி பட்டம் பெற வழிகாட்டுகின்றது. பின்னர் நாடகம் மற்றும் அரங்கியல் ஆசிரியர்களாக பங்களிக்க இப்பட்டம் இடம்கொடுக்கின்றது.

இந்நிகழ்வில் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பி.எம்.கி.திலகரத்ன, அதே பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தின் பீடாதிபதி சசிகலா குரூஸ்த்தி, கல்விப் பீடத்தின் இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் ஏதேந்திர வசரிங்க, புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

நல்லிணக்கம், சகவாழ்வை ஏற்படுத்துவதற்காக கட்டுகலை ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு சமயத் தலைவர்கள் விஜயம்

(இக்பால் அலி)

சமயங்களுக்கிடையே பரிந்துணர்வையும், நாட்டின் தேசிய நல்லிணக்கத்தைத் தேசிய சகவாழ்வையும் ஏற்படுத்தும் நோக்கில் கண்டி கட்டுகலை ஜும்ஆப் பள்ளிவாசல், அரபுக் கல்லூரிக்கு பௌத்த சமயத் தலைவர்கள் அண்மையில் விஜயம் மேற்கொண்டனர்.

நாட்டில் நல்லினக்கத்தைக் சகவாழ்வையும் ஏற்படுத்தும் நோக்கில் அலவத்துக்கொட கொனகலைல விகாராதிபதி தலைமையிலான பௌத்த சமய தேரர் குழுவினர்கள், கண்டி கட்டுகலை ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் கட்டுகலை அல்-புர்கானியா அரபுக் கல்லூரிக்கு விஜயம் செய்து ஜும்ஆப் குத்பா சொற்பொழிவினையும் மத்ரஸா மற்றும் அங்கு அமைந்துள்ள நூதனசாலை போன்ற இடங்களையும் பார்வையிட்டனர்.

கண்டி, கட்டுகலை ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்ற குத்பா பேருரையினையும் அரபு கல்லூரியின் வகுப்பறைகள், நூலகம், கற்பித்தல் முறைமைகள், நூதனசாலை போன்றவற்றைப் பார்வையிட்ட இஸ்லாமிய சமயக் கடமைகள் போன்ற விளக்கங்களையும் தெளிவுகளையும் பெற்றுக்கொண்டதோடு அரபுக் கல்லூரி மாணவர்களுக்கு பௌத்த பிரிவினை போன்ற இடங்களைப் பார்வையிட்ட பௌத்த தேரர்கள் தங்களுடைய இடங்களுக்கும் வருகை தந்து பார்வையிடுமாறு அங்கு வருகை தந்த பிரதான பௌத்த தேரர் அன்பான கோரிக்கை விடுத்தார்.

இதன்போது கண்டி கட்டுகலை ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளரும் கண்டி மாவட்ட பள்ளிவாசல்களின் சம்மேளனத்தின் தலைவர் கே.ஆர்.சித்தீக உள்ளிட்ட பள்ளிவாசல் நிர்வாக உத்தியோகத்தர்கள், அரபுக் கல்லூரி அதிபர், மௌலவிமார்கள் மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் வைத்திய நிபுணர் டாக்டர் பி.டி.எல்.சிறிவர்தன உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

மின் துண்டிப்பால் இருளில் மூழ்கிய நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடம்

(செ.திவாகரன்)

நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடத்தில் கடந்த ஒரு வாரமாக மின் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் பயணிகள் மற்றும் வியாபாரிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

மாதாந்த மின் கட்டணத்தினை உரிய முறையில் செலுத்தாமையால் நுவரெலியா மின்சார சபையின் மூலம் மின் துண்டிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் பிரதான பஸ் தரிப்பிடத்தில் பயணிகளின் பணப்பைகள், பயணப்பைகள், தங்க ஆபரணங்கள் களவாடப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மின் துண்டிப்பால் பஸ் தரிப்பிடத்திலுள்ள வியாபார நிலையங்களில் பயணிகளின் வருகை இன்றி வியாபாரம் மந்தநிலையில் உள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றன

நுவரெலியா பஸ் நிலையத்திலிருந்து கொழும்பு, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் செல்லும்

திருடர்கள் கைவரிசை; பயணிகள் - வியாபாரிகள் பெரும் பாதிப்பு

பஸ்கள் அனைத்துக்கும் பயணிகள் வருகை யின்றி இயக்கப்படாமல் நிறுத்தப்படும் சூழ்நிலை லுள்ளதாக பஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பயணிகளின் வருகையால் இரவு முழுவதும் பரபரப்பாக இயங்கி வரும் நுவரெலியா பஸ் நிலையம் மின் துண்டிப்பால் வெறிச்சோடிக் காணப்படுகிறது.

எனவே, பாதிக்கப்பட்டுள்ள பயணிகள், வியாபாரிகள், பஸ் உரிமையாளர்களின் நன்மை கருதி நுவரெலியா பிரதான பஸ் நிலையத்துக்கு சொந்தமான காரியாலயத்தின் மூலம் மின்சார சபைக்கு உரிய பணத்தை செலுத்தி மின்சாரத்தை பெற்றுத் தருமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எம்பிலிப்பிட்டியவை ஆக்கிரமிக்கும் காட்டு யானைகள்; விவசாய நிலங்கள் நாசம் – உயிராபத்து ஏற்படும் அபாயம்

(பலங்கொடை மேலதிக நிருபர்)

எம்பிலிப்பிட்டிய - சூரியவெவ உட்பட சப்ர கமுவ தென் மாகாண எல்லைகளில் காட்டு யானைகள், கிராமியக் குடியிருப்புகள் - விவசாய நிலங்களை ஆக்கிரமிப்பதால் பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

எம்பிலிப்பிட்டிய - சூரியவெவ உட்பட மதுனாகல, அபயபூமி, வெலிவெவ வெவேகம மற்றும் பந்தகிரிய உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களே காட்டு யானைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

காட்டு யானைகள் கிராமங்களுக்கும், விவசாய நிலங்களுக்கும் படையெடுத்து பயிர்களை நாசப்படுத்துவதுடன், மாலை நேரங்களிலும், அதிகாலை நேரங்களிலும் இப்பிரதேசங்கள் முழுவதும் ஆக்கிரமிக்கப்படுவதால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், அதிகாலை வேளைகளில் கிராம வீதிகளை ஆக்கிரமிப்பதால் மாண வர்கள் பாடசாலை செல்வதற்கு அச்சப்படுவ தாகவும் கட்டிக்காட்டப்படுகிறது. பல்வேறு நோக் கங்களால் காடுகள் துப்புரவு செய்யப்பட்டு வரு வதால் உணவு மற்றும் பாதுகாப்புத் தேவைக ளுக்காக யானைகள் இடம்பெயர்கின்றன. இரவு - பகலாக இவை கிராமப்பகுதிகளில் சஞ்சரிப்பதால் உயிராபத்து ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

அதிக கட்டணம் அறவிடும் ஹட்டன் – நுவரெலியா சொகுசு பஸ்கள்

(மஸ்கெலியா நிருபர்)

பணத்திற்கேற்ப பயணச்சீட்டு வழங்கவும் மறுப்பு; பயணிகள் குற்றச்சாட்டு

ஹட்டன் நகரிலிருந்து நுவரெலியா வரை சேவையில் ஈடுபடும் வரும் தனியார் சொகுசு பஸ்களில் அதிகளவில் கட்டணம் அறவிடப்படுவதாக பயணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

மேலும், குறித்த பஸ்களில் அதிகளவில் பயணிகளை ஏற்றிச்செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சேவையில் ஈடுபட்டு வரும் தனியார் சொகுசு பஸ்களில் பயணிகளுக்கு வழங்கும் பணத்திற்கு பற்றுச்சீட்டை நடத்துநர்கள் வழங்க மறுப்பதாகவும் பயணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளிடம் ஹட்டன் நகரிலிருந்து நுவரெலியா நகருக்கு செல்ல 1500 ரூபா அறவிடப்படுவதாக உல்லாசப் பயணிகள் நுவரெலியா மாவட்டத்திலுள்ள உரிய அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளனர். மேலும், தங்களைப் போன்று ஏனைய பயணிகளுக்கு இவ்வாறு நடைபெறாமல் இருக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது குறித்து போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் உரிய அதிகாரிகள் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஊழல் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் விலகத் தயார்

கொட்டகலை பிரதேச சபைத் தலைவர் ராஜமணி பிரசாந்த் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் தாம் வகிக்கின்ற பிரதேச சபைத் தலைவர் பதவி உட்பட இ.தொ.காவில் வகிக்கும் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் விலகிக் கொள்ளத் தயார் என கொட்டகலை பிரதேச சபைத் தலைவர் ராஜமணி பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை பிரதேச சபையில் நடைபெற்ற மாதாந்த அமர்வில், தலைவர் உட்பட 15 உறுப்பினர்கள் கலந்து கொண்ட அமர்வில் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

பத்தனை சந்தியில் அமைக்கப்பட்டுள்ள கடைத் தொகுதி குறித்து சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன. கடைத் தொகுதிகள் அரச நிதியையோ, மாகாண சபை, பிரதேச சபை நிதியையோ கொண்டு கட்டப்பட்டதல்ல. இது பிரதேச சபை நிதிக் குழுவினால் உறுதிப்படுத்தப்பட்டு ஹட்டன் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு அந்த இடத்தை பிரதேச சபைக்குப் பெற்றுத் தருமாறு பிரதேச செயலாளருக்கும், காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், கொட்டகலை பிரதேச சபை கடந்த 4 வருடங்களாக மக்களுக்கு சிறந்த சேவையாற்றி வந்துள்ளது. மத்திய மாகாணத்தில் சிறந்தசபையாகஅங்கீகரிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது. இந்த சபையின் கௌரவத்தைப் பாதிக்கக் கூடிய வகையில் நான் செயற்பட்டது கிடையாது. சபைக்கு அவப்பெயர் ஏற்பட இடம் கொடுக்கவும் மாட்டேன். பிரதேச சபைத் தலைவர் என்ற ரீதியில் இலஞ்ச ஊழலில் சிக்கியிருந்தால், அது கனக்குப் பரிசோதனை ஊடாக ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்படும் பட்சத்தில் பிரதேச சபைத் தலைவர் பதவியிலிருந்தும், இ.தொ.காவில் நான் வகிக்கும் சகல பொறுப்புகளிலிருந்தும் விலகிக் கொள்ளத் தயாராக இருக்கின்றேன். எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிடுவேன். மக்கள் செல்வாக்கோடு பெரும்பான்மை வாக்குகளால் நிச்சயம் வெற்றி பெறுவேன். மேலும், அண்மையில் பெய்த பலத்த மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் உலர் உணவு நிவாரண உதவிகளை வழங்கு வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல உறுப் பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள் கிறேன். மேலும், கொட்டகலை பிரதேச சபைக் கட்டடத்தை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தக்காரருக்கு 27 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது.

எனவே, உள்ளூராட்சி கடன் வழங்கும் நிதியத்தின் ஊடாக 50 மில்லியன் ரூபாவைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கட்டடத்துக்கான பணம் செலுத்தப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள பணத்தைக் கொண்டு கடைத் தொகுதியை அமைத்து மாதாந்தம் 4 - 5 இலட்சம் ரூபா வரை வருமானத்தைப் பெற்று பெற்றுக் கொண்டால் கடனுக்கு திருப்பிச் செலுத்தக் கூடியதாக இருக்கும். கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் சமூர்த்தி வங்கி அமைப்பதற்கும், சுயதொழில் வாய்ப்புக்காக இளைஞர், யுவதிகளுக்கு காணி பகிர்தளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்போது 'கேஸ்' விலை குறைந்துள்ளதால் கொட்டகலை தகனசாலையில் பிரேதங்களை தகனம் செய்வதற்கான கட்டணம் 1500 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்க பஷீர் காக்கா தலைமையில் குழு

(யாழ். நிருபர்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்க பஷீர் காக்கா தலைமையில் 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பொன்றினை உருவாக்கி அதனூடாக நிகழ்வு ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆரம்ப கலந்துரையாடல் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நேற்று முன்தினம் (17) சனிக்கிழமை மாலை இடம்பெற்று.

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் சிவில் அமைப்புகளின் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், யாழ்ப்பாண மானவர் ஒன்றியப் பிரதிநிதிகள், மூத்த முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் கலந்துகொண்ட பலரும் தமது கருத்துகளை முன்வைத்தனர். "அரசியல் கலப்பற்ற ஒரு கட்டமைப்பாக இது உருவாக வேண்டும். அரசியல்வாதிகள் தமது அரசியலுக்கப்பால் இக்கட்டமைப்பிற்கு ஆதரவாக செயற்பட வேண்டும்" என்பதே பலரின் கோரிக்கையாக இருந்தது.

கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்களின் கருத்து பகிர்வுகளைத் தொடர்ந்து முதல் கட்டமாக பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்காக மாவீரர்களின் தந்தையும், மூத்த போராளியுமான பஷீர் காக்கா தலைமையில் மூத்த போராளிகள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி உள்ளிட்ட ஏழு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவானது எதிர்வரும் நாட்களில் மதகுருமார், அரசியல் கட்சித் தலைவர்கள், நாட்டாளுமன்ற உறுப்பினர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கங்கள், பொது அமைப்புகள் என அனைத்து தரப்புகளுடனும் சந்திப்புகளை மேற்கொண்டு பொதுக்கட்டமைப்பின் உருவாக்கம், அதன் நோக்கம், எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகள் என்பன தொடர்பில் எடுத்துக்கூறி அவர்களையும் ஒன்றிணைத்து முழுமையான பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் எனக் கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது.

சிறுவர்களை வியாபாரம் – யாசகத்திற்குப் பயன்படுத்தலை கட்டுப்படுத்தல் அனைவரினதும் கூட்டுப்பொறுப்பு

(யாழ். நிருபர்)

சிறுவர்களை வியாபாரம் மற்றும் யாசகத்திற்கு பயன்படுத்தலை கட்டுப்படுத்துவதற்கான துறைசார் கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (16) மாவட்டசெயலககேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் சிறுவர்களைப் பயன்படுத்தி யாசகம் பெறுதல் மற்றும் சிறுவர் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதோடு, பதிவில்லாத விடுதிகளைக் கண்காணித்து கட்டநடவடிக்கையெடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், பொது இடங்களில் நிகழும் சமூகச் சீர்கேடுகளை தடுத்தல் மற்றும் கண்காணித்தல், போதைப்பொருள் விற்பனை மற்றும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு முயற்சிகளை உருவாக்குதல், மாவட்ட மற்றும் சிறுவர் உதவியோகத்தர்கள் ஊடாக மாணவர்களின் ஒழுக்க நெறிகளை மேம்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், இந்நடவடிக்கைகள் உணர்வுபூர்வமான விடயமாகும். எமது சமூகத்தைப் பேண வேண்டியது எமது கடமையாகும். அனைவரும் இணைந்து கூட்டுப்பொறுப்புடன் இந்நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், உதவி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், சட்ட வைத்தியர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், மாகாண பிரதிக் கல்வி பணிப்பாளர், மாநகர சபை ஆணையாளர், மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தார்கள்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

'இந்து தரிசனம்' முதலாவது சர்வதேச இந்து மாநாடு யாழ். பல்கலையில்

யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தால் நடத்தப்பட்ட 'இந்து தரிசனம்' முதலாவது சர்வதேச இந்து மாநாடு அண்மையில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் மதத்தலைவர்கள், பேராசிரியர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(யாழ். நிருபர்)

யாழ். இருபாலையில் புதையல் அகழும் பணிகள் இடைநிறுத்தம்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் இருபாலை டச்ச வீதியிலுள்ள வீடொன்றில் விடுதலைப் புலிகள் அமைப்பினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் புதையலை அகழும் பணிகள் நேற்று முன்தினம் (17) பிற்பகல் 2 மணியுடன் நிறுத்தப்பட்டன.

குறித்த வீட்டில் புலிகளின் புதையல்கள் காணப்படுவதாக கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் புதையல அகழ்வதற்கான அனுமதியை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் பொலிஸார் கோரியிருந்தனர்.

நீதிமன்ற அனுமதி கிடைக்கப்பெற்ற நிலையில், நேற்று முன்தினம் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையில் புதையல் அகழும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இப்பணிகளுக்காக கொழும்பிலிருந்து விசேட அணியினர் வந்திருந்த நிலையில், கனரக வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன.

பிற்பகல் 2 மணிவரையில் யாழ்ப்பாண நீதவான் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற போதிலும், எவ்வித மான பொருட்களும் மீட்கப்படாத நிலையில் அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப் பட்டன.

நிதிச் செயற்பாடுகளை கண்காணிக்க புதிய வரவு-செலவுத்திட்ட அலுவலகம்

நாடாளுமன்றத்தில் அமைக்கப்படுமென செயலாளர் நாயகம் தசநாயக்க தெரிவிப்பு

வருவாய்கள் மற்றும் செலவீனங்கள் உள்ளிட்ட அரசாங்கத்தின் நிதி முகாமைத்துவம் குறித்த சரியான தகவல்களைப் பெற்றுக்கொண்டு நிதிச் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காகத் தனியான வரவு-செலவுத்திட்ட அலுவலக மொன்றை நாடாளுமன்றத்தில் அமைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் - என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

செப்டெம்பர் 15ஆம் திகதி கொண்டாடப்படும் ஜனநாயகம் தொடர்பான சர்வதேச தினத்தை யொட்டி நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் தினைக்களம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடன் இணைந்து தேசிய ஜனநாயக நிறுவனத்தின் அனுசரணையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட பொதுச் சேவைகள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'ஜனநாயகமும் இளைஞர் சமூகத்தின் வகிபாகமும்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித் துவப்படுத்தி இளைஞர், யுவதிகள் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

உலகில் அபிவிருத்தியடைந்த ஜனநாயக நாடுகளைப்போல் வழிவகைகள் பற்றிய குழு, வங்கித் தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு, பொருளாதார உறுதிப்படுத்தல் குழு உள்ளிட்ட புதிய குழுக்கள் அமைக்கப்பட்டு, நாடாளுமன்றத்தை மேலும் பலப்படுத்த எடுக்கப் படவுள்ள நடவடிக்கைகள் குறித்து செயலாளர் நாயகம் இங்கு விளக்கமளித்தார்.

நாடாளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர, படைக்கலசேவிதர் நரேந்திர பெர்னான்டோ, நாடாளுமன்ற நிர்வாகப் பணிப்பாளர் ஜீவ்ட்னராணி, ஹன்சார்ட் பதிப்பாசிரியர் நயனி பொக்குகொடிக்கார, சட்டவாக்கப் பணிப்பாளரும், தொடர்பாடல் தினைக்களப் பிரதிப் பணிப்பாளருமான ஜனகாந்த சில்வா, தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவத் தினைக்களத்தின் பணிப்பாளர் மகேஷ் பெரேரா, பிரதம ஆய்வு அதிகாரி அயேஷா கொடகம ஆகியோர் இதில் வளவாளர் களாகக் கலந்துகொண்டனர்.

ஜனநாயகம் மற்றும் இளைஞர் சமூகத்தின் வகிபாகம், சட்டவாக்க செயற்பாடுகள் உள்ளிட்ட நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள், நிலையியற் கட்டளைகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பணிகள் உள்ளிட் பலவேறு விடயங்கள் குறித்து இளைஞர், யுவதிகளுக்கு சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் சுருக்குப் பகிர்வுகள் இடம்பெற்றன. இதில் கலந்துகொண்ட இளைஞர், யுவதிகளுக்கு நாடாளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கான வாய்ப்பும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ். பல்கலைக்கழக வருடாந்த சர்வதேச விவசாய ஆய்வு மாநாடு

(யாழ். செய்தியாளர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆய்வு மாநாடு கடந்த புதன்கிழமை கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் அமைந்துள்ள விவசாய பீட மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடம், வடக்கு - கிழக்கை மையப்படுத்தி உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆய்வு மாநாட்டை 2015ஆம் ஆண்டுமுதல் வருடந்தோறும் நடத்தி வருகிறது. அந்த வரிசையில், அதன் எட்டாவது மாநாடு கடந்த புதன்கிழமை விவசாய பீடாதிபதி கலாநிதி எஸ்.வசந்தரூபா தலைமையில் இடம்பெற்றது.

'உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்காக வளர்ந்து வரும் பொருத்தமான விவசாயத் தொழில்நுட்பங்கள்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த ஆய்வு மாநாட்டில் யாழ்ப் பாண்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறீதரக்குணராசா பிரதம விருந்தின ராகக் கலந்துகொண்டார்.

ஜப்பான் கய்சு பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் ஒகடா கைசு ஜப்பானிலிருந்து வருகை தந்து பிரதான பேச்சாளராக கலந்துகொண்டு, 'ஜப்பானின் ஸ்மார்ட் விவசாயம், ஒரு பார்வையும் அதன் போக்கும்' எனும் தலைப்பில் முதன்மைப் உரையாற்றினார்.

இந்த ஆய்வு மாநாட்டில் இலங்கை மற்றும் சர்வதேச ஆய்வாளர்களால் பயிராக்கவியல், விவசாய உயிரியல், விலங்கு விஞ்ஞானம், மண், சூழல் மற்றும் பொறியியல் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், நீர், பொருளாதாரம் மற்றும் அறிவுட்டல் ஆகிய உப தொனிப்பொருட்களில் 48 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இறக்குவானை, டெல்வின் அரசமரத்தடி காளியம்மன் ஆலய புனர்நிர்மாணத்தின் முதலாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு அன்மையில் விசேட பூஜைகள் இடம்பெற்றன.

நாட்டின் வருங்கால சந்ததியினரை கல்வி ஊடாக வளர்க்க வேண்டும்

கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் இராமநாதன் தெரிவிப்பு

(சாவகச்சேரி செய்தியாளர்)

வருங்கால சந்ததியினரை கல்வியினூடாக வளர்த்தெடுத்து அவர்களை சமூகத்தில் நல்ல நிலைக்கு இட்டுச்செல்ல வேண்டும் - என கரவெட்டி பிரதேச சபை உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் பிரத்தியேக செயலாளருமாகிய தசரிவம் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் அம்பாள் சனசமூக நிலைய ஆண்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

2022ஆம் ஆண்டில் பல அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்ற வந்தபோதிலும் நாட்டு நிலைமை காரணமாக அவற்றில் பல தடைப்பட்டுள்ளன.

இருப்பினும், மட்டுவில் சந்திரபுரம் கிராமத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் சிபாரிசில் மாவட்ட செயலர், பிரதேச செயலர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இவ்வருடம் ஒரு கோடியே 30 இலட்சம் செலவில் தேங்காயெண்ணெய் உற்பத்திக் கிராமம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

குறித்த உற்பத்திக் கிராமத்தின் பயனாளிகள் 73 பேரின் வாழ்வாதார மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு காற்றடைக்கா வழங்கப்பட்டுள்ளன. இதனூடாக எதிர்காலத்தில் சந்திரபுரம் கிராமம் பால் உற்பத்திக் கிராமமாகவும் மாற்றமடையும்.

அதனைவிட சந்திரபுரம் கண்ணகை விளையாட்டுக் கழக மைதானம் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் சிபாரிசில் 50 இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வெகுவிரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. குறித்த அபிவிருத்திகள் ஊடாக சமூகம் முன்னேற வேண்டும்.

அதனூடாக பிள்ளைகள் சிறந்த கல்வியைப் பெற்று சமூகத்தில் நல்ல நிலையை அடையவேண்டும் என்பதே எமது நோக்கம். இன்று சமூகத்தில் உறவுப்பாலம் வலுவிழந்து வருகிறது. கடந்த காலங்களில் உறவுகளுக்கிடையே இருந்த நெருக்கம் இன்று இல்லை. அந்த உறவுப் பாலத்தை மீண்டும் உருவாக்க வேண்டும் - என அவர் தெரிவித்திருந்தார்.

கைப்பற்றப்பட்ட 4,470 லீற்றர் மண்ணெண்ணெயை அரசுடமையாக்குக!

நுகர்வோர் அதிகாரசபைக்கு அநுராதபுரம் நீதவான் உத்தரவு

(அநுராதபும் செய்தியாளர்)

அநுராதபுரம், யாழ்ப்பாணம் சந்தியில் அமைந்துள்ள சீ.பீ.மொஹமட் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்ட 4 ஆயிரத்து 470 லீற்றர் மண்ணெண்ணெயை அரசுடமை யாக்குமாறு அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெயை பொதுமக்களுக்கு விநியோகிக்காமல் பதுக்கிவைத்திருந்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் குற்றத்தினை ஒப்புக்கொண்ட எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் உள்ளிட்ட மூவருக்கு தலா பத்தாயிரம் வீதம் முப்பது ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்தும்படி நீதவான் மேலும் உத்தரவிட்டுள்ளார்.

அரசுடமையாக்கப்பட்ட 4 ஆயிரத்து 470 லீற்றர் மண்ணெண்ணெயை தற்போது வழக்கத்திலுள்ள 340 ரூபாவுக்கு விற்பனை செய்து அதிலிருந்து வரும் (15 இலட்சத்து 19 ஆயிரத்து 800 ரூபா) பணத்தை நீதிமன்றில் வைப்பு செய்தபின் பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையத்திலுள்ள நிலக்கீழ் தாங்கிகளை உரியவர்களிடம் கையளிக்குமாறு அநுராதபுரம் நுகர்வோர் அதிகாரசபையின் அநுராதபுரம் அலுவலகப் பொறுப்பதிகாரி பெரேராவுக்கு அநுராதபுரம் நீதிமன்ற மேலதிக நீதவான் மேலும் உத்தரவிட்டுள்ளார்.

லக்விஜய அனல் மின் நிலைய ஊழியர் கடலில் விழுந்து உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி - நுரைச்சோலை லக்விஜய அனல் மின் நிலைய ஊழியர் ஒருவர் கடலில் வீழ்ந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

லக்விஜய அனல் மின் நிலையத்தில் கடலுடன் கட்டப்பட்டிருக்கும் இறங்குதுறை (ஜெட்டி) பகுதியிலிருந்து கடலில் வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அனல் மின்சார நிலையத்தில் பணிபுரிந்த பல்லம பகுதியைச் சேர்ந்த கனிஷ்ட தொழில்நுட்ப உதவியாளரான 32 வயதுடைய பத்திராஜ முதியன்சேலாகே ஹர்ஷ ஹேமந்த பிரியசாத் என்பவரே உயிரிழந்ததாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கடலில் வீழ்ந்த நிலையில் உயிரிழந்துள்ள தொழில்நுட்ப உதவியாளரின் சடலத்தை மீட்க பொலிஸார், கடற்படையின் சுழியோடி பிரிவு, மீனவர்கள் இணைந்து தேடிவந்தனர்.

இந்நிலையில், குறித்த நபரின் சடலம் நேற்று முன்தினம் (17) கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவில பகுதியில் கரையொதுங்கியுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திகதி 17.09.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4881
இரண்டாம் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 8,757,120.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 8 1 9 3 3 0
அடுத்த சீட்டிழுப்பின் சுபப் பரிசு ரூ. 11,664,063.00

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3123
இரண்டாம் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,216,700.00
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 06 27 32 76
அடுத்த சீட்டிழுப்பின் சுபப் பரிசு ரூ. 76,735,252.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1336
இரண்டாம் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,747,880.00
வெற்றி இலக்கம் 1 வெற்றி இலக்கங்கள் 9 0 6 7 4
அடுத்த சீட்டிழுப்பின் சுபப் பரிசு ரூ. 10,775,774.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 911
இரண்டாம் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,205,220.00
N 22 24 30 37
வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுபப் பரிசு ரூ. 125,916,170.80

ராசிசுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 190
இரண்டாம் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,258,120.00
இலக்கம் 03 09 24 40
வெற்றி இலக்கங்கள்
கன்னி விடை இலக்கங்கள் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுபப் பரிசு ரூ. 4,808,068.20

வே! 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1229
இரண்டாம் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,907,900.00
அடுத்த சீட்டிழுப்பின் சுபப் பரிசு ரூ. 270,957,670.00
அதிஷ்ட எண் L 05 07 09 61 74
அடுத்த பவர் சுபப் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த மிரளவை சுபப் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபைக்கு சேவைகளை பெறுவோர் கொள்ளுங்கள்
National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பொன்சுப: 011-4669475 Web : www.nlb.lk

திகதி 16.09.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4880
இரண்டாம் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 9,003,420.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 0 0 0 1 5 7
அடுத்த சீட்டிழுப்பின் சுபப் பரிசு ரூ. 11,175,061.00

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3122
இரண்டாம் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,779,400.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 14 25 36 40
அடுத்த சீட்டிழுப்பின் சுபப் பரிசு ரூ. 76,632,678.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1335
இரண்டாம் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,831,200.00
வெற்றி இலக்கம் 5 வெற்றி இலக்கங்கள் 5 7 6 8 9
அடுத்த சீட்டிழுப்பின் சுபப் பரிசு ரூ. 10,739,619.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 910
இரண்டாம் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,446,440.00
T 16 32 56 78
வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுபப் பரிசு ரூ. 125,753,622.00

ராசிசுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 189
இரண்டாம் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,878,960.00
இலக்கம் 03 30 44 59
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் விடை இலக்கங்கள் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுபப் பரிசு ரூ. 4,741,808.20

வே! 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1228
இரண்டாம் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,989,980.00
அடுத்த சீட்டிழுப்பின் சுபப் பரிசு ரூ. 270,912,810.00
அதிஷ்ட எண் N 06 07 41 58 62
அடுத்த பவர் சுபப் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த மிரளவை சுபப் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபைக்கு சேவைகளை பெறுவோர் கொள்ளுங்கள்
National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பொன்சுப: 011-4669475 Web : www.nlb.lk

பழங்களுக்கு இரசாயன திரவம் பயன்படுத்திய இருவர் கைது

- பொத்துவிலில் தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணம்
- நிறமூட்டி கலந்த அரிசி பகுப்பாய்வுக்கு அனுப்பிவைப்பு

(நிந்தவூர் நிருபர்)

பொத்துவில் பிரதேசத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துடன் இணைந்து மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது வாழைக்காய்களுக்கு இரசாயன திரவம் உபயோகித்து அதனை பழுக்கச்செய்யும் மூலரசியில் ஈடுபட்ட இருவர் கைதுசெய்யப்பட்டு பொத்துவில் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில், இருவருக்கும் தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு பொத்துவில் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.ஸி.றில்வான் உத்தரவிட்டார்.

அண்மைக்காலமாக பொத்துவில் பிரதேசத்தில் பழங்களை பழுக்கவைப்பதற்காக இரசாயன திரவம் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் இதனால் அவ்வாறான மருந்து தெளிக்கப்பட்ட பழங்களை உண்பதால் பக்கவிளைவுகளான வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் ஏற்படுவதாகவும் பொதுமக்கள் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இவ்வாறு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ்.எம்.மஃபீ தெரிவித்தார்.

இந்தத் திடீர் பரிசோதனையின்போது பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.யு.அப்துல் சமட், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான எம்.பைருஸ், எம்.ஜ.அர்ஸாத், எம்.ஏ.எல்.ஏ.பாரி, முஹம்மட் சர்ஜூன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொத்துவில் மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஏ.ஸி.றில்வான், சந்தேக நபர்களுக்கு எச்சரிக்கை விடுத்து தண்டப்பணத்தை செலுத்துமாறு உத்தரவிட்டார்.

அரிசியில் சிவப்பு நிறமூட்டிகள் பயன் படுத்தி அரிசி மாதிரிகள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன.

இதேவேளை, கல்முனை சுகாதார வைத்திய சேவைகள் பணிமனைக்குட்பட்ட நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனையிலும் வழிநடத்தலிலும் உணவுச் சட்டத்திற்கு முரணான செயற்பாடான மனித நுகர்வுக்கு பாவிக்கப்படும் அரிசிகளில் "சிவப்பு நிறமூட்டிகள்" கலக்கும் செயற்பாடுகளை கண்டறிவதற்கான திடீர் பரிசோதனைகள் பிரதேசத்திலுள்ள அரிசி ஆலைகளில் கடந்த வியாழக்கிழமை பொழுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பெருமளவிலான நிறமூட்டிகள் அடங்கிய ரின்கள் கைப்பற்றப்பட்டதுடன், சந்தேகத்துக்கிடமான அரிசி மூடைகள் தடுத்துவைக்கப்பட்டு, பகுப்பாய்வுக்காக அரிசி மாதிரிகளும் பெறப்பட்டுள்ளன.

பகுப்பாய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றதும் சம்பந்தப்பட்ட அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் அதிகாரிபொருவர் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

மறைந்த உறுப்பினர் புவனேஸ்வரிக்கு கல்முனை மாநகர சபையில் அஞ்சலி

(சாய்ந்தமருது, மாளிகைக்காடு நிருபர்கள்)

காலம்சென்ற கல்முனை மாநகர சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக அமரர் புவனேஸ்வரி விநாயகமூர்த்தியின் பூதவுடல் நேற்று (18) மாநகர சபைக்கு கொண்டு வரப்பட்டு, இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.

கல்முனை மாநகர சபையின் சபா மண்டபத்தில் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இறுதி அஞ்சலியுடன் இரங்கல் உரைகளும் நிகழ்த்தப்பட்டன.

அத்துடன், ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க வின் விசேட இரங்கல் செய்தியும் அவரது பிரதிநிதியினால் இங்கு வாசிக்கப்பட்டு, குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வுக்காக பாண்டிருப்பு பிரதேசத்திலுள்ள அமரர் புவனேஸ்வரியின் வீட்டிலிருந்து அவருடைய பூதவுடல் தாங்கிய ஊர்தி, கல்முனை - மட்டக்களப்பு நெடுஞ்சாலை ஊடாக மாநகர சபை வரை ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டிருந்தது.

இதன்போது மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் அரசியல், சிவில் சமூக பிரதிநிதிகள் பலரும் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி உள்ளிட்ட அதிகாரிகளும் இறுதி மரியாதை செலுத்தினர்.

மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப், மாநகர சபை உறுப்பினர்களான ஹென்றி மகேந்திரன், ஏ.ஆர்.அமீர், கதிரமலை செல்வராசா, ஆரிக்கா காரியப்பர், சுலைல் அலீஸ், ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ்.ஏ.ரஸ்ஸாக், முன்னாள் மாநகர சபை உறுப்பினர் அப்துல் மனாப் ஆகியோர் இரங்கல் உரைகளை நிகழ்த்தினர்.

இதன்போது அமரத்துவமடைந்த புவனேஸ்வரி விநாயகமூர்த்தியின் சிறந்த குணாதிசயங்கள், றற்பன்புகள், அவரால் முன்னெடுக்கப்பட்ட சமூகநலன்சார் சேவைகள், அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அமரர் புவனேஸ்வரி விநாயகமூர்த்தியின் சகோதரர்கள் ஏற்புரை மற்றும் நன்றியுரை நிகழ்த்தினர்.

இற்நிகழ்வில் அமரர் புவனேஸ்வரி விநாயகமூர்த்தியின் புதல்வர் உட்பட குடும்பத்தினர், உறவினர்கள், ஆதரவாளர்கள் என பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்றி ருந்தனர்.

கல்முனை மாநகர சபையில் கடந்த 2018ஆம் ஆண்டு தொடக்கம் உறுப்பினராக பதவி வகித்துவந்த புவனேஸ்வரி விநாயக மூர்த்தி, திடீர் சுகயீனம் காரணமாக கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை (15) இரவு தனது 53ஆவது வயதில் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனையில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின்படி பிரதம பொலிஸ் பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ்.ஏ.மஜீத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நடாத்திய ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 85 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப் பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (17) ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

திருகோணமலையில் கரையோர பாதுகாப்பு வாரம் ஆரம்பம்

(சீனக்குடா நிருபர்)

திருகோணமலை நகரில் கரையோரச் சூழல் பாதுகாப்பு வாரம் 17-23 வரை அனுஷ்டிக்கப் படுகின்றது.

இதற்கான ஏற்பாட்டை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மேற்கொண்டுள்ளதாக அதன் முகாமையாளர் திருநாவுக்கரசு ஸ்ரீபதி தெரிவித்தார்.

காலை 6.30 மணியளவில் திருக்கோணேஸ்வரத்திற்கு நுழையும் பகுதியிலுள்ள மான் பார்க் கடற்கரையில் கழிவுகளை அகற்றும் சிரமதானம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போதே மேற்படி தகவலை அவர் தெரிவித்தார்.

இற்நிகழ்வில் 60இற்கும் அதிகமான கடற்படைவீரர்கள் முதற்கட்டமாக பங்கு கொண்டனர். இற்நடவடிக்கை தொடர்ந்து 23.09.2022 வரை இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கான அனுசரணையை இளைஞர் அபிவிருத்தி அகம் வழங்குகின்றது.

இற்நிகழ்வில் அகத்தின் இணைப்பாளர் பொ.சற்சிவானந்தம், திருகோணமலை நகரசபையின் செயலாளர் வி.ராஜசேகர், கரையோர கடற்படை பாதுகாப்பு அதிகாரி லெப்டினன் கொமாண்டர் ஜயமால் ஜயவர்தன மற்றும் கரையோரச் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மாவடி பேர்ல்ஸ் ப்ரீமியர் லீக் சீசன் - 3; சம்பியனானது பேர்ல்ஸ் ஸ்ட்ரைக்கஸ்

(மாளிகைக்காடு நிருபர்)

மாவடிப்பள்ளி மாவடி பேர்ல்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பேர்ல்ஸ் ப்ரீமியர் லீக் பாகம் - 3இற்கான போட்டியில் பேர்ல்ஸ் வாரியர்ஸ் அணியை வீழ்த்தி பேர்ல்ஸ் ஸ்ட்ரைக்கஸ் அணி வெற்றிபெற்று பேர்ல்ஸ் ப்ரீமியர் லீக் பாகம் - 3இன் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

மாவடி பேர்ல்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் பேர்ல்ஸ் பைட்டர்ஸ், பேர்ல்ஸ் ஸ்ட்ரைக்கர்ஸ் மற்றும் பேர்ல்ஸ் வாரியர்ஸ் ஆகிய 3 அணிகள் பேர்ல்ஸ் ப்ரீமியர் லீக் பாகம் - 3இற்கான போட்டியில் பங்குபற்றின. இதில் புள்ளிப்பட்டியலில் முதலிரு இடங்களைப் பெற்ற பேர்ல்ஸ் ஸ்ட்ரைக்கர்ஸ் மற்றும் பேர்ல்ஸ் வாரியர்ஸ் ஆகிய அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றன.

அன்றையதினம் மாவடிப்பள்ளி அஸ்ரப் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பேர்ல்ஸ் வாரியர்ஸ் அணியை வீழ்த்தி பேர்ல்ஸ் ஸ்ட்ரைக்கஸ் அணி வெற்றிபெற்று பேர்ல்ஸ் ப்ரீமியர் லீக் 3ஆம் பாகத்தின் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது. இதில் வெற்றிபெற்ற அணிக்கு 30,000 ரூபா பணப்பரிசும், வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டதுடன், இரண்டாவது இடத்தைப் பெற்ற பேர்ல்ஸ் வாரியர்ஸ் அணிக்கு 20,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக பேர்ல்ஸ் ஸ்ட்ரைக்கஸ் வீரர் பாஹிம் தெரிவுசெய்யப்பட்டதுடன், இச்சுற்றுப் போட்டியில் அதிக ஓட்டங்களை பெற்ற அம்ஜாத் (பேர்ல்ஸ் ஸ்ட்ரைக்கர்ஸ்), அதிக விக்கெட்டுகள் பெற்ற வீரர் சுஜாத் (பேர்ல்ஸ் ஸ்ட்ரைக்கஸ்) ஆகியோர் வெற்றி கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

நிலாவெளி அல்-பதாஹ் அணியினரின் புதிய ஜேர்ஸி அறிமுக நிகழ்வும், கண்காட்சி கிரிக்கெட் போட்டியும்

(ஜிப்ரி எம் ஹிஷாம்)

திருகோணமலை மாவட்டத்தில் வளர்ந்துவரும் கிரிக்கெட் அணிகளில் ஒன்றான நிலாவெளி அல்-பதாஹ் கடின பந்து கிரிக்கெட் அணியின் புதிய ஜேர்ஸி வெளியீட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

கிராமப்புறங்களிலும் கடினபந்து கிரிக்கெட்டை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு நிலாவெளி டைவர்ஸ் வேண்ட் டைவ் கிளப் நிறுவனத்தின் பணிப்பாளர் ரிஸ்வான் டயஸ் அபேகுணவர்தனவால் அன்பளிப்பு செய்யப்பட்ட சீருடைகள் வீரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து திருகோணமலை யூனைடெட் கிங்ஸ் கிரிக்கெட் அணிக்கு எதிரான 50 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டியும் நடைபெற்றது. இக்கால் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அப்போட்டியில் யூனைடெட் கிங்ஸ் அணியினர் 65 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர்.

கோலூன்றிப் பாய்தலில் சாதனை படைத்த யாழ். வீரர்

இந்த ஆண்டுக்கான கடைசி மெய்வல்லுனர் தகுதிகாண் போட்டி நேற்று முன்தினம் தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்ற நிலையில், வடக்கின் நட்சத்திர மெய்வல்லுனர் வீரர் அருந்தவராசா புவிதரன், ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 5.15 மீற்றர் உயரம் தாவி புதிய இலங்கை சாதனை படைத்தார்.

அத்தத சூண்டு நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழா மற்றும் ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டித் தொடரை இலக்காகக் கொண்டு இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய மெய்வல்லுனர் தகுதிகாண் போட்டிகள் சனிக்கிழமை தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் ஆரம்பமான.

மட்டுப்படுத்தப்பட்ட வீரர்கள் மாத்திரம் பங்குகொண்ட இந்த தகுதிகாண் போட்டியில்

ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் பங்குகொண்ட அருந்தவராசா, 5.15 மீற்றர் உயரத்தை தாவி புதிய இலங்கை சாதனை படைத்தார். இந்தப் போட்டியின் முதல் முயற்சியில் 4.70 மீற்றர் உயரத்தை தாவிய புவிதரன், அதன்பிறகு 4.80, 4.90, 5.00 மீற்றர் உயரங்களை முதல் முயற்சியிலேயே தாவி அசத்தினார்.

இதனையடுத்து, இலங்கை விமானப்படை வீரர் இஷார சந்தருவன் 2017ஆம் ஆண்டு 5.11 மீற்றர் உயரத்தைத் தாவி நிலைநாட்டிய இலங்கை சாதனையை முறியடிப்பதற்கான முயற்சியில் புவிதரன் களமிறங்கினார்.

இதன்படி, 5.12 மீற்றர் உயரத்தை தெரிவுசெய்த அவர், முதலாவது முயற்சியிலேயே அந்த மைல்கல்லை வெற்றிகரமாக தாண்டி ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் இலங்கை சாதனையை 5 ஆண்டுகளுக்குப் பிறகு முறியடித்தார்.

பும்ராவின் வருகை, கோஹ்லியின் சதம் இந்திய அணிக்கு பெரிய பலம்

உலகக்கிண்ணம் தொடர்பில் மஹேல கருத்து

2022ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாகுவதற்கு இன்னும் ஒரு மாதத்திற்கும் குறைவான காலப்பகுதி எஞ்சியிருக்கும் நிலையில், முன்னாள் வீரர்கள் பலர் அது தொடர்பில் தங்களது கருத்துகளை தெரிவித்துவரும் நிலையில், பும்ராவின் வருகை, கோஹ்லியின் சதம் இந்திய அணிக்கு பெரிய பலம் - என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் வாய்ப்பு குறித்து பேசிய மஹேல, இந்திய அணியில் சகலதுறை வீரர் ஜடேஜா ஆடாதது இந்திய அணிக்கு பெரும் பாதிப்புதான். ஆனாலும் ஜஸ்ப்ரித் பும்ரா அணியில் இணைந்திருப்பதும், கோஹ்லி சதமடித்து மீண்டும் அவரது ஃப்ளோவிற்கு

வந்திருப்பதும் இந்திய அணிக்கு பெரிய பலம். ஆகியக்கிண்ணத் தொடரில் பும்ரா இல்லாதது பெரும் பாதிப்பாக அமைந்தது. இந்திய அணியில் இருந்த மிகப்பெரிய ஓட்டையை அடைத்துள்ளார் பும்ரா. அவஸ்திரேலியாவில் பும்ரா ஆடுவது பெரிய பலம். அவர் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவார். அதனால் இந்திய அணி வெற்றிகரமாகத் திகழும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் சிறுவர் துஷ்பிரயோகம்!

நூருல் ஹூதா உமர்

நாளை தலைவர்களாக மலர இருப்பவர்களே இன்றைய சிறுவர்கள் என பல தசாப்தங்களாக நாங்கள் கேட்டு வந்திருக்கின்றோம். ஆனால், இதுபோன்ற வார்த்தைகளும், கருத்துகளும் வெறும் வாய்வார்த்தைகளாகவும், போலி அக்கறையாகவும் மாத்திரமே காண முடிகிறது. அது உண்மையான அக்கறையா என்று கேட்டால் இல்லை என்பதே உண்மை. நாகரீக காலத்தின் ஆரம்பத்தில் இருந்தே சிறுவர்கள் மீதான வன்முறைகள் கொடூரமான முறையில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இன்று எமது உலக நாடுகள் - அதிலும் குறிப்பாக, இலங்கை, இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய அவலம் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம். அதுவும் பெண்பிள்ளைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. ஒவ்வொரு மணித்தியாலமும் எங்கோ ஒரு மூலையில் ஆக்குறைந்தது ஒரு சிறுமி அல்லது சிறுவன் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகிக்கொண்டுதான் இருக்கின்றனர் என்கின்றன ஆராய்ச்சி முடிவுகள்.

ஆண், பெண் என்ற வேறுபாடின்றி சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் குறித்து சமூக அக்கறையுடன் வாய்வார்த்தைகளால் எம்மால் கூற முடிகின்றதே தவிர, அதனைத் தடுக்கவோ, அதற்கு எதிரான நடவடிக்கைகளை விளைத்திறனுடன் முன்னெடுக்கவோ நாம் திராணியற்றவர்களாக இருக்கின்றோம் என்பதே உண்மை. சிறுவர் துஷ்பிரயோகமானது பிரதானமாக உடலியல் ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான துஷ்பிரயோகம், புறக்கணிப்பு ரீதியிலான துஷ்பிரயோகம், உளவியல் ரீதியான துஷ்பிரயோகம், உணர்வு ரீதியான துஷ்பிரயோகம் என பிரித்தறியப்படுகின்றது. மூன்பு குறிப்பிட்டதுபோன்று இவ்வகையிலுள்ள சிறுவர்கள் சமூகம் வன்முறைகளினால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். மிகவும் நெருங்கிய நபர்களினாலேயே சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதனாலேயே பல சம்பவங்கள் மூடி மறைக்கப்படுகின்றன என்று பலதரப்பட்ட செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

வீடுகளில் சிறுவர்களில் பெற்றோர் தமது கேளத்தை தேவையற்ற விதத்தில் வெளிப்படுத்தல், முரணான தண்டனை வழங்குகள் போன்ற செயற்பாடுகளை சிறுவர்கள் தன்னுடைய நண்பரிடம் அல்லது தெரிந்தோர்களிடம் வெளிப்படுத்த முனைகின்றனர். இதன் காரணமாக இவர்கள் சமூகத்தில் கெட்டவர்களாக அடையாளப்படுத்தப் படுகிறார்கள். சிறுவர்களிடம் இறுக்கமாக நடந்து கொள்ளும் பெற்றோர், ஆசிரியர் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்களினால் சிறுவர்களின் மனநிலை மற்றும் தேவையை புரிந்துகொள்ள முடிவதில்லை, இதன் காரணமாக பெற்றோர் - சிறுவர்கள் மற்றும் ஆசிரியர் - சிறுவர்கள் இடையிலான உறவில் முறிவு ஏற்படுகின்றது. அதிகமாக இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகும் சிறுவர்கள் மனநோயாளிகளாக எதிர்காலத்தில் அடையாளப்படுத்தப் படுகின்றார்கள். அவர்களுடைய குடும்ப வாழ்க்கை உள்ளிட்ட அனைத்தும் கேள்விக்குறியாகின்றது. கல்வி நடவடிக்கைகள் முதல் சாதாரண வாழ்க்கை வரை பாதிப்படைகின்றன. எதிர்காலத்தில் தன்னுடைய குழந்தைக்கும் இவ்வகையான அடக்குமுறைகளை அவர்கள் பிரயோகிக்க முனைகின்றார்கள். இதன் காரணமாக சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள் சங்கிலித் தொடராக சந்ததிக்கு சந்ததி எடுத்துச் செல்லப்படுகின்றது என்பதே உண்மை.

அதுமட்டுமல்லாது, பெரியவர்களின் கோபங்களை வெளிப்படுத்துகின்ற இடமாகவும் சிறுவர்கள் விளங்குகின்றார்கள். பெற்றோர் மற்றும் பெரியவர்கள் தமது கோபங்களை சிறுவர்களை அடித்தல், தண்டனை வழங்குதல் உள்ளிட்ட செயற்பாடுகளினால் வெளிப்படுத்துகின்றனர். இதனால் உடல் ரீதியான, உணர்வு ரீதியான, உள ரீதியான துஷ்பிரயோகங்கள் தற்போது மிக அதிகரித்துள்ளன. பெற்றோர் தங்களுடைய விருப்பங்களை பிள்ளைகளிடத்தில் திணிக்க முயற்சி செய்வதும், அதற்காக அவர்களை கட்டாயப்படுத்தல் வற்புத்தல் என்பனவும் துஷ்பிரயோகங்களே என்கின்றனர் சிறுவர் நலன் பேணும் அதிகாரிகள்.

இவ்வாறான அணுகுமுறை உண்மையில் பெற்றோரிடத்திலிருந்து சிறுவர்களை அந்நியப்படுத்துகின்றது. இதுவே பல துஷ்பிரயோகங்களுக்கும், அது குறித்து குழந்தைகள் வெளிப்படுத்த தயங்குவதற்கும் காரணமாக அமைகின்றது. அத்துடன், இப்போது மிகச் சாதாரணமாக அரங்கேறிக்கொண்டிருக்கும் பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் மிகக் கொடூரமான துயரங்களை தந்துவிட்டுப் போகக்கூடிய ஒன்று. சிறுவர்களை அவர்களின் அனுமதியின்றி உடல் உறுப்புகளை தொடுதல், வருடுதல், ஆபாச வார்த்தைகள் பிரயோகம், வற்புறுத்தல் என்பன பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்குள் அடங்குகின்றன. இதுபோன்ற துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகும் சிறுவர்கள் பெரும்பாலும் மன அழுத்தத்திற்கு ஆளாகி தவறான பாதையில் சென்று விடுகின்றார்கள். இவ்வாறான சிறுவர்கள் தமது அனுபவங்களை மற்றவர்களுக்கு செய்ய முற்படலாம் என்ற ஒரு கருத்தும் நிலவுகின்றது. ஆகவே, அது எதிர்காலத்தில் ஒரு சிறந்த சந்ததியை கட்டியெழுப்பத் தடையாகவே இருக்கும். அது சமூகத்தினதும் நாட்டினதும் எதிர்காலத்தைப் பாரியளவில் பாதிக்கும்.

சகலரும் அறிந்த புங்குடுதீவு மாணவி வித்தியா, ஐந்து வயதான யோ சதெவ்மி, முல்லைத்தீவு சிறுமி நிதர்சனா, ஹிசாலினி, பாத்திமா ஆயிஷா போன்ற பல சிறுமிகளின் வன்முறை மரணங்கள் எமக்கு உணர்த்திச் செல்லும் ஒரே பாடம் இந்த உலகு பெண் குழந்தைகளை, பெண் குழந்தைகளாகவே சந்தோசமாக வாழ வைக்க தகுதியற்று என்பதேயாகும். அதனைத் தாண்டி ஒழுக்கம் கற்பிக்க வேண்டிய பாடசாலைகள், அறநெறி கல்வி நிலையங்கள் போன்ற இடங்களிலும் பரவலாக இந்த சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுவது அருவெறுப்பாக அமைந்துள்ளது.

துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ள இடங்களை கூர்ந்து கவனித்தால், குறித்த சிறுவர்களை சுற்றியுள்ளவர்களாலேயே அவர்கள் துஷ்பிரயோகத்திற்கும் துயரங்களுக்கும் உள்ளாக்கப்பட்டிருப்பர்.

பாதுகாப்புக்கு போடப்பட்ட வேலியே பயிரை மேய்ந்த கதையாக தம் உறவுகளாலேயே சிறுவர்கள் வன்புணர்வுக்குப் பலியாகிக்கொண்டிருப்பது மிகவும் வேதனையான விடயம். தம்து தந்தை, சகோதரன், மாமன் போன்ற நெருங்கியவர்களினாலேயே சிறுவர்கள் இந்த துஷ்பிரயோகங்களுக்குப் பலியாகிக்கொண்டிருக்கிறார்கள் என்பது கவலையான விடயம். மிரட்டல்கள், பயமுறுத்தல், சின்ன அன்பளிப்புகள் மூலம் அவர்களை தம்வசப்படுத்தி, பின்னர் இவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர் என பொலிஸ் அறிக்கைகள் திடமாகக் கூறுகின்றன. இதை அறிந்திருந்தும் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களின் கவனயீனம் காரணமாக சிறுவர்கள் பலியாவது இப்போது அதிகரித்து வருகின்றது.

ஒரு பிள்ளை இவ்வாறான வன்புணர்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டு அல்லது வெகுவாக பாதிக்கப்பட்டு பரபரப்பான செய்தியாக மாறினாலேயன்றி பொதுமக்கள் இது குறித்து அறிந்துகொள்வது மிகக் குறைவு. ஊடகங்களில் வெளிவராமல், பொதுமக்கள் பார்வைக்கு புலப்படாமல் இன்னும் பல கொடுமைகளும் வன்புணர்வுகளும், துன்புறுத்தல்களும் அன்றாட வாழ்வில் குழந்தைகள் அதிகமாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றன் என்பது தவிர்க்கமுடியாத உண்மையாகும். பெற்றோர்கள் வேலைக்குச் செல்பவர்களாக இருந்தால் பெண்பிள்ளைகள் வீட்டில் தனித்து விடப்பட்டுள்ள சூழ்நிலைகளில் இவ்வாறான ஆபத்துகள் அதிகமாக காணப்படுகின்றன. வெளிச்சத்திற்கு வராதவை ஏராளம். கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் வித்தியாசமின்றி இது இடம்பெற்று வருகின்றது.

பாடசாலை விடுமுறை நாட்கள், மேலதிக வகுப்புகள், உறவினர் வீடு, ஏன் தனது சொந்த வீடுகூட தரியோது சிறுவர்களுக்கு குறிப்பாக பெண்பிள்ளைகளுக்கு பாதுகாப்பு அற்று என்பதே நிதர்சனமான உண்மை. சிறுவர்களை சிறைக்கைதிகள் போலவும், கல்வி கற்கும் இயந்திரங்களாகவும் மட்டும் பார்க்காமல் அவர்களோடு அன்பாகவும், நட்பாகவும் உறவாடுவதும், அவர்களுக்குப் பாலியல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொடுப்பதும் பெற்றோரின் முதலிலை கடமையாகக் காணப்படுகின்றது. இவ்வாறான வன்முறைகளை முற்றுமுழுதாக நிறுத்த முடியாவிட்டாலும், தவறுகள் நிகழாத வண்ணம் தடுக்கவேண்டியது சுற்றியுள்ள சமூகத்தினரின் தலையாய கடமை.

துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுமி ஆயிஷா உயிரிழந்த பின்னர் அவரது தந்தை இனிமேல் போதைப்பொருள் பாவனையில் தான் ஈடுபட மாட்டேன் என அறிவித்திருந்தார். இது உருக்கமான அறிவிப்பாக இருக்கலாம், ஆனால், இப்போது அந்த கருத்து நிலைநின்றதா? இப்படிப்பட்டவர்களின் செயலால் இன்னும் எத்தனை ஆயிஷாக்களை இழக்கப்போகின்றோம். ஐந்து வயது சிறுமியையும் பெண்ணாக மட்டுமே பார்க்கும், ஒன்றரை வயது குழந்தையையும் வெறும் சதையாக மட்டுமே பார்க்கும், ஒரு தனிப்பட்ட நபரை பழிவாங்க பெண்பிள்ளையை வன்முறைக்குள்ளாக்கி கொலை செய்யும், ஆசிரியர் என்ற நிலையை மறந்த மாணவியரையும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கும் சமூகம் இருக்கும்வரை ஒரு வித்தியா அல்ல, ஒரு சோ அல்ல, ஒரு ஆயிஷா அல்ல இன்னும் பல வித்தியாக்களையும், சோக்களையும், ஆயிஷாக்களையும் நாங்கள் எமது வாழ்நாளில் காணத்தான் போகின்றோம்.

திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பதுபோல் தனிமனித மாற்றம் இல்லையெனில் இன்னும் பல கொடூரங்களை நாங்கள் அனுபவித்துத்தான் ஆகவேண்டும். சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை அறிவிப்பதற்கு 1929 என்ற தூரித இலக்கம் தற்போது 24 மணிநேரமும் செயற்பட்டு வருகின்றது. அதனால் சிறுவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை அந்த இலக்கத்துக்கு அறிவிக்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர். அதனைக் கட்டுப்படுத்த எமது சட்டதிட்டங்களை இறுக்கமாக்குவதுடன் சிறந்த ஒழுக்கமுள்ள சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். அதற்கு ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு ஊடக நெறிமுறையொன்றை ஏற்படுத்த வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் அடிப்படையில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஏறும் ஒன்றே முறைப்பாடு செய்யப்படுகின்றது. மேலும் சிறுவர் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் 60 நாடுகளின் பட்டியலை ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் வெளியிட்டிருந்தது. அதில் 3 நாடுகளே ஆசிய நாடுகளாக இருக்கின்றன. ஜப்பான், சிங்கப்பூர், மற்றும் தென் கொரியா ஆகியவாகும். ஏனைய 57 நாடுகளும் மேற்கத்தேய நாடுகளாகும்.

உலகளாவிய ரீதியில் அதிகளவில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறும் நாடுகளில் ஆபிரிக்க நாடுகளே முதலிடத்தில் இருக்கின்றன. அதன் இரண்டாம் இடத்தில் ஆசிய நாடுகளே இருக்கின்றன. அத்துடன், சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருப்பது, கல்விக் கட்டமைப்பு, சட்டக் கட்டமைப்பு மற்றும் ஊடக பிரச்சார கட்டமைப்பின் பலவீனமாகும். இவற்றை சரிசெய்வது எமது கடமையாகும். அதனால் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக ஊடகங்களில் செய்தி அறிக்கையிடுவதற்கு முறையான ஊடக நெறிமுறை ஒன்று பின்பற்றப்பட வேண்டும். அதற்காக ஊடக நெறிமுறையொன்று விரைவில் ஏற்படுத்துவோம். அதற்கு அனைத்து ஊடக நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கையில் 92 வீதமானவர்கள் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளார்கள். இருந்தபோதிலும் சிறுவர் மீதான குடும்ப வன்முறைகள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு குறைந்துள்ளதாக குறிப்பிட முடியாது. இதுதொடர்பில் விழிப்புணர்வுகளை இன்னமும் ஆசிரியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடையே ஏற்படுத்த வேண்டிய தேவையுள்ளது. கொரோனா தொற்று காரணமாகவும், பொருளாதார நெருக்கடி நிலை காரணமாகவும் சிறுவர்கள், மட்டுமன்றி பெரியவர்களும் மிகுந்த மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். இந்நிலையை புரிந்து செயற்பட வேண்டிய பெரியவர்களின் பொறுப்பாகும். இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக நாடளாவிய ரீதியில் முடக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் குடும்ப உறுப்பினர்களினால் சிறுவர் மீதான வன்முறைகள் அதிகரித்திருந்தமை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இது சிறுவர்களுக்கு மிகுந்த மன அழுத்தத்தையும் தற்கொலைக்குத் தூண்டும் செயலாகவும் மாறியிருந்ததை பல சம்பவங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. குறித்த காலகட்டத்தில் சிறுவர்கள் இணையத்தின் ஊடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக இணையவழி சிறுவர் துஷ்பிரயோக செயல்கள் அதிகரித்துள்ளன. இது குறித்து பெற்றோர்களுக்கு தெரியாத போதும், இலங்கையில் தற்போது அதிகரித்துவருகின்ற சிறுவர் துஷ்பிரயோக செயல்களில் இதுவும் பிரதானமான ஒன்றாகும். இவ்வாறான முறைப்பாடுகளை பெற்று அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சிறுவர்களுக்கான விசேட சைபர் விசாரணைப் பிரிவு ஒன்றை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவியுள்ளது என சேவ த சில்ரன்ஸ் அமைப்பின் கொள்கை மற்றும் ஆய்வு இயக்குனர் ரன்ஜன் வெத்தசிங்க தெரிவித்த கருத்தை இங்கு அடிக்கோடிட்டு காட்டவேண்டியுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான இலங்கையின் சட்டங்களில் சில சட்டங்கள் போதுமானதாக இருந்த போதிலும் அதனை செயற்படுத்துவதில் சிக்கல் உள்ளதனாலேயே துஷ்பிரயோக சம்பவங்கள் கூடுதலாக இடம்பெறுகின்றன என்று கருதுகின்றேன். சிறுவர் தொடர்பான வழக்குகளுக்கு தீர்வை எட்டுவதற்கு சில நேரங்களில் ஐந்து முதல் பத்து வருடங்கள் வரை ஆகலாம். இதன்போது தவறு செய்தவரும், பாதிக்கப்பட்ட சிறுவரும் உடல் உள ரீதியாக பல மாற்றங்களுக்கு உள்ளாகின்றனர். சிறுவர்களின் வழக்குகளில் நீதியை செயற்படுத்தில் தூரிதப்படுத்தப்படுமாயின் அது இலங்கையின் எதிர்கால சந்ததிக்கு சிறந்தது மட்டுமன்றி பாலியல் ரீதியிலான அறிவு குறைந்தவர்களாகவே சிறுவர்கள் உள்ளனர்.

இவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். எமது நாட்டில் குறிப்பாக, 16 வயதுக்கு குறைந்த 80 வீத சிறுமிகளின் விருப்பத்துடனேயே பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இதற்கு சிறுவர்களின் அறியாமையும் அதில் அவர்கள் எதிர்காலத்தில் முகங்கொடுக்கும் பிரச்சினை குறித்து தெளிவின்மையுமே முக்கிய காரணமாகும் என்கிறார் ரன்ஜன் வெத்தசிங்க.

எனவே, பாலியல் கல்வி இலங்கையின் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படுவதன் மூலம் சிறுவர்களுக்கு இது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தவதால் இவ்வாறான செயல்களிலிருந்து சிறுவர்கள் தம்மை பாதுகாத்துக்கொள்ளவும் பாலியல் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்கும் ஏதுவாக அமையும். அண்மையில் கல்முனையிலுள்ள மத ஸ்தலமொன்றில் இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோகத்திலும் நாட்டின் இன்னும் பல இடங்களில் இடம்பெற்ற - இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகத்திலும் மேற்கூறிய விடயங்களே ஆதிக்கம் செலுத்தின.

கல்வியறிவு கூடிய ஆசியாவின் ஆச்சரியமிக்க தேசத்தில் சிறுவர்களின் எதிர்காலம் மிகப்பெரும் கேள்விக்குறியாக அமையாமல் பாதுகாக்கவேண்டியது இலங்கைத் தாயின் கடமை. சட்டம் இன்னும் கடுமையாக்கப்பட்டு தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதியாக இல்லாது உடனடியாக தீர்ப்புகள் வழங்கப்பட்டால் - தண்டனைகள் உடனடியாக பாரபட்சமின்றி குற்றவாளிகளுக்கு கிடைத்தால் அழகிய இலங்கையில் நேரிய எதிர்கால சந்ததி கிட்டும்.

திருமலையில் வெட்டுக்காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்பு

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேதிஸ்புர பிரதேசத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் கடந்த 15ஆம் திகதி நள்ளிரவு ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட திருகோணமலை மகாமாயபுர பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆர்.பி.பிரதீப் லெனும் (வயது -34) எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நண்பர்களுடன் விருந்துபசாரத்தில் ஈடுபட்டிருந்ததாகவும் பின்னர் நள்ளிரவில் குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமம் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவிப்பதற்கான களவிஜயம் நேற்று முன்தினம் (17) இடம்பெற்றது.

குறித்த களவிஜயமானது தம்பலகாமம் பிரதேச செயலாளர் செ.புரீபுதி தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் உரிய பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம உட்பட வனப் பாதுகாப்பு அதிகாரிகள், சுற்றாடல்

திணைக்கள அதிகாரிகள், காணி பயன்பாட்டு, நில அளவை உள்ளிட்ட திணைக்கள உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதில் வயல்நிலப் பகுதி காணிகள், மேய்ச்சல்தரை என காணி காணப்படுகிறது. கடவானையில் 160 ஏக்கரும், அட்டவானையில் 102 ஏக்கர் நிலப்பரப்பும் உள்ள நிலையில் உரிய காணிக்கு சொந்தமானவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கையாக இவ்விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

காணி அனுமதிப்பத்திரமும் உள்ள நிலையில் நெற்செய்கை விவசாயத்தை மேற்கொள்ள ஓர் ஆரம்பகட்ட நடவடிக்கையாக இது உள்ளது. இக்காணியை விடுவிப்புச் செய்வதன் மூலம் விவசாயத்தை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பாக அமையும்.

மட்டு. கிரானில் உயிரிழந்த காட்டு யானையொன்று மீட்பு

(கல்குடா நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் முள்ளிவட்டுவான் பிரதேசத்தில் உயிரிழந்த நிலையில், நேற்று முன்தினம் (17) யானை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

முள்ளிவட்டுவான் காட்டுப்பகுதியில் நான்கு வயது மதிக்கத்தக்க யானை உயிரிழந்த நிலையில் இருப்பதை பிரதேசவாசி ஒருவர் அவதானித்து வாழைச்சேனை பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து கிரான் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யானை உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் இது தொடர்பான அறிக்கையை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வழங்கிய பின்னரே யானை எதனால் மரணமடைந்துள்ளது என்பது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மட்டு. வாவியில் மக்களை அச்சுறுத்திய இராட்சத முதலை பிடிபட்டது

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு வாவியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்களுக்கு பெரும் உயிர் அச்சுறுத்தலாக இருந்த முதலை, வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் பிடிக்கப்பட்டு முகை காட்டுப் பகுதிக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வாவியின் பெரியகல்லாறு மற்றும் கோட்டைக்கல்லாறு பகுதியில் அதிகளவு மக்கள் மீன்பிடித் தொழிலை நம்பியே தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், குறித்த ஆற்றுப்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு முதலைகள் பெரும் அச்சுறுத்தலாக காணப்படுவதாக அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு தமக்கு அச்சுறுத்தலாக உள்ள முதலைகளைப் பிடிக்குமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்ததற்கு இணங்க, கடந்த வியாழக்கிழமை (15) இரவு குறித்த ஆற்றுப் பகுதிக்கு வந்த வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மிகவும் சூட்சுமமான முறையில் முதலையைப் பிடிப்பதற்கு இரும்புக்கூடு வைத்துள்ளனர்.

இந்நிலையில், வைத்த கூட்டுக்குள் அகப்பட்ட குறித்த முதலையை கடந்த வெள்ளிக்கிழமை (16) ஆற்றுக்குள்ளிருந்து வெளியில் கொண்டுவந்துள்ளனர். இவ்வாறு பிடிக்கப்பட்ட முதலையை முகை காட்டுப் பகுதிக்குக் கொண்டுசென்று விடவுள்ளதாக அத்திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

முதலைக் கடிக்கு இலக்காகி மூன்று பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். எனினும், தமது வாழ்வாதாரத் திற்கு அச்சுறுத்தலாக இருந்த ஒரு முதலை தற்போது பிடிக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஒரு முதலை உள்ளது. அதனையும் பிடித்துச்செல்லப்படும் பட்சத்திலேயேதான் தாம் சுதந்திரமாக மட்டக்களப்பு வாவியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடலாம் என அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒலுவிலில் 19 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நூலகம் திறந்துவைப்பு

(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் பங்களிப்புடன் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லாவின் முயற்சியின் பயனாக சுமார் 19 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொது நூலகம் நேற்று முன்தினம் மாலை (17) வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நூலகத்தை திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினருமான எம். எஸ். உமர் மாபெப்பை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகர் செயலாளர் உயர்பீட உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவி தவிசாளர் எஸ்.எம்.எம்.ஹனீபா, பிரதேச சபையின் உறுப்பினர்களான ஏ.எஸ்.எம்.உவைஸ், ஏ.பீ.பதூதீன், எம்.எஸ்.அமீன், எம்.ஹம்சா பிரதேச சபையின் செயலாளர் எம்.ஜ.எம்.பாயிஸ், வைத்தியர் கே.எம்.றக்பர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் போராளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

போடியார் புலம்பல்!

மக்கள் ஆணையுடன் ஆட்சிபீடம் ஏறினால் சகல பிரச்சினைகளுக்கும் கெதியா தீர்வு வருமாம் எண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜீத் தம்பி சொல்லுறாரு எலுவா?

அப்ப மக்கள் ஆணையுடன்தானே ஆட்சிபீடம் ஏறினார் கோட்டாபய. இப்ப தீர்வு தந்தித்தீரா? அவரே சோலி இல்லாம ஒதுங்கித்தாரு... உங்களுக்கு ஆணை வர யானை உடாது சும்மா பொத்தித்து இருங்க!

மீராவோடையில் மாற்றுத்திறனாளி பெண்ணொருவரைக் காணவில்லை

(கல்குடா நிருபர்)

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மீராவோடை-04 ஹாஜியார் வீதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி பெண்ணை கடந்த 08 நாட்களாக காணவில்லை என்று குடும்பத்தினர் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாற்றுத்திறனாளியான ஏ.ஐ.பாத்திமா சம்ஹா என்ற இப்பெண் 23 வயதுடையவர். கடந்த 10.09.2022 திகதி வீட்டிலிருந்து வைத்தியசாலைக்கு சென்று வருவதாக சென்ற குறித்த பெண் நேற்று முன்தினம் (17) சனிக்கிழமை வரை வீடு திரும்பவில்லை.

இவர் காணாமல்போனது தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இவரைக் கண்டவர்கள் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தின் தொலைபேசி இலக்கமான 0652257709 என்ற இலக்கத்திற்கோ அல்லது அவரது குடும்பத்தாரின் இலக்கமான 0773727293 என்ற இலக்கத்திற்கோ தொடர்பை ஏற்படுத்துமாறு குடும்பத்தார் பொதுமக்களின் உதவியை நாடி நிற்கின்றனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்திய உதவி அத்தியட்சகர் பிரபாகரன்

கடமையைப் பொறுப்பேற்று ஒரு மாதத்திற்குள் சிறந்ததொரு நிர்வாகம்

மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர் ந.பிரபாகரன் கடமையைப் பொறுப்பேற்று ஒரு மாதகாலம் நிறைவடைந்துள்ளது.

இந்த ஒருமாத காலப்பகுதியில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த வருடங்களில் பல்வேறுபட்ட நிர்வாகச் சீர்கேடுகளால் மட்டக்களப்பு சிறைச்சாலையானது ஊடகவெளியிலும், மட்டக்களப்பு மாவட்ட புத்திஜீவிகள் மத்தியிலும் கடுமையான விமர்சனங்களைச் சந்தித்துவந்தது.

அவ்வாறானதொரு நெருக்கடிமிக்க தருணத்தில் மட்டக்களப்பு சிறைச்சாலையைப் பொறுப்பேற்றுக்கொண்ட அத்தியட்சகர் பிரபாகரன் மிக விரைவாகச் செயற்பட்டு, பலவேறுபட்ட விடயங்களிலுமிருந்த முரண்பாடுகளை நிவர்த்திசெய்து சிறந்ததொரு நிர்வாக கட்டமைப்பை உருவாக்கியுள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளுடன் மிகவும் நெருக்கமாக உரையாடி, சிறைச்சாலையில் கைதிகளுக்கான உணவு தொடர்பான பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டபோது ஒரு வாரத்தில் அதற்கான தீர்வுகளை வழங்கி, கைதிகளுக்கு தரமான உணவுகள் கிடைக்க வழிவகை செய்தார்.

கடந்த காலங்களில் சிறைச்சாலை நலன்புரிச் சங்கத்துக்கும், சிறைச்சாலை நிர்வாகத்துக்கும் இடையிலிருந்துவந்த முரண்பாடுகளைச் சீர்செய்து, நலன்புரிச் சங்கத்துடன் இணைந்து செயற்பட்டு, கைதிகளுக்கு பல்வேறுபட்ட நன்மைகள் கிடைக்க வழிவகைகளைச் செய்துள்ளார்.

அத்தோடு கொரோனா தொற்றுகளால் இரண்டு வருடங்கள் செய்யப்படாமலிருந்த வருடா வருடம் சிறைச்சாலைகளில் செய்யப்படும் சிறைக்கைதிகள் தின நிகழ்வை இந்த வருடத்தில் மிகவும் திறம்பட ஒழுங்கமைத்து, நெருக்கடி நிலைகளைக் கருத்திற்கொள்ளாது, உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை மட்டும் நம்பி பிற சிறைச்சாலைகளிலிருந்த மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தண்டனைபெற்ற பல கைதிகளையும் வரவழைத்து, உறவினர்களுடன் நேரடிச் சந்திப்புகளை ஏற்படுத்தி கைதிகள் தினத்தன்று மதிய உணவை உறவினர்களுடன் பகிர்ந்துண்ணக்கூடிய சூழலை உருவாக்கிக்கொடுத்தார்.

மட்டக்களப்பு, திருப்பெருந்துறை எனுமிடத்தில் அமையப்பெற்றுள்ள சிறைச்சாலைக்குச் சொந்தமான பண்ணையிலுள்ள வயல்நிலங்களில் இம்முறை முன்மாரி செய்கைக்கான தயார்படுத்தல்கள் முழுவீச்சில் நடைபெற்றுவரும் நிலையில், கடந்த காலங்களில் குறித்த பண்ணையில் நடைபெற்ற ஊழல்கள் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்து உற்பத்தியை அதிகரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையை இது எங்கள் சிறைச்சாலை என நினைத்து மனதாரச் சேவையாற்றிவரும் அத்தியட்சகர் பிரபாகரனின் திறமையான செயற்பாடுகளால் மட்டக்களப்பு சிறைச்சாலையும், திருப்பெருந்துறை விவசாயப் பண்ணையும் விரைவாகப் புத்தெழுச்சி பெறும் என்பதோடு, கடந்த காலங்களில் ஏற்பட்ட அவப்பெயர்கள் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பதும் உறுதி.

நெருக்கடிமிக்கதொரு தருணத்தில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தின் துரித நடவடிக்கையின் காரணமாக நியமனம் செய்யப்பட்டு, மட்டக்களப்பு சிறைச்சாலையைப் பொறுபேற்றுக்கொண்ட அத்தியட்சகர் பிரபாகரன் ஆவார்.

Rocell அதன் 75ஆவது கருத்திட்ட மையத்தை திறக்கிறது

மேற்பரப்பை நேர்த்தியா மூடுவதிலும் உயர்தர குளியலறை சாதனங்களை வழங்குவதிலும் உள்ளூர் ஜாம்பவானாக விளங்கும் Rocell, இலங்கையின் கிழக்குக் கடற்கரையின் செழுமையான பாரம்பரியத்திற்கு ஏற்ற வகையில், அதன் நேர்த்தியான உட்புறங்களை அழகுகூட்டுவதற்காக கல்முனையில் தனது புதிய Concept Centre (கருத்திட்ட மையம்) இனை திறக்கிறது. நாடளாவிய ரீதியில் பரந்து விரிந்த காட்சியறை வலையமைப்பு மற்றும் உலகெங்கிலும் உள்ள விநியோகஸ்தர்களின் ஆதரவுடன், Royal Ceramics Lanka நிறுவனத்தின் முதன்மையான தரக்குறியீடான Rocell, உயர்தர தரை ஓடுகள், சுவர் ஓடுகள், குளியலறை உபகரணங்களுக்கான (Floor Tiles, Wall Tiles, Bathware) பெயராக மாறியுள்ளது. அத்துடன், இந்த வர்த்தகக் குறியீடானது, உலகின் சிறந்த வடிவமைப்பாளர்கள் மற்றும் வடிவமைப்புக் குழுக்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளதுடன், அது உலகின் மிகச் சிறந்தவற்றை எமது நாட்டிற்கு கொண்டு வந்து சேர்க்கிறது.

128A, பிரதான வீதி, கல்முனை 12இல் அமைந்துள்ள புதிய Concept Centre ஆனது, Rocellஇன் 75ஆவது காட்சியறையாகத் திகழ்கிறது. இது Rocellஇன் நாடளாவிய ரீதியில் வளர்ந்து வரும் காட்சியறை வலையமைப்பின் ஒரு அங்கமாகும். 4,780 சதுர அடி பரப்பளவில், இரண்டு மாடிகளைக்கொண்ட, தனித்துவமான இடப்பரப்பில், பாரம்பரிய ஷொப்பிங் அனுபவத்தை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. 700இற்கும் மேற்பட்ட வகையான ஓடுகள் (Tiles), கேரிப்பு அம்சங்கள் கொண்டவைகள் (collections), மேற்பரப்பு அலங்காரங்கள் (surface finishes) மற்றும் 70இற்கும் அதிகதனித்துவமான குளியலறை பெரும் சாதனங்கள் (Bathware Masterpieces) ஆகியவற்றை இது கொண்டுள்ளது.

1990ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தனது பயணத்தை ஆரம்பித்ததிலிருந்து Royal Ceramics Lanka PLC நிறுவனமானது, தற்போது இலங்கையின் முதன்மையான பெயராகவும், மேற்பரப்புகளை நேர்த்தியாக மூடுகின்ற மற்றும் உயர்தர கழிப்பறை உபகரணங்களில் சமகால வடிவமைப்பு மற்றும் செயற்பாடுகளைக் கொண்ட தயாரிப்புகளை வழங்குவதிலும் சிறந்து விளங்கும் சந்தையின் முன்னணி நிறுவனமாகவும் மாறியுள்ளது.

உலகின் சிறந்த தொழில்நுட்பக் குழுக்களுடன் வலுவான கூட்டாண்மைகளை ஏற்படுத்துவதன் மூலம், அதன் ஆரம்பம் முதல் இலங்கைக்கு உலகத்தரம் வாய்ந்த தயாரிப்புகளை அறிமுகப் படுத்துவதில் Rocell தொடர்ந்தும் முன்னணியில் உள்ளது.

தமிழன் வணிக உலகம் Business world GROWTH www.thamilan.lk

இலங்கையில் விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் நிறுவனமாக யூனிலீவர் முதலிடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது

2022ஆம் ஆண்டிற்கான LMDஇன் மிகவும் மதிப்பிற்குரிய நிறுவனங்களின் பட்டியல் வெளியீட்டில் யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம் நாட்டிலேயே 1ஆவது ஸ்தானத்திலுள்ள மிகவும் மதிக்கப்படும், விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் நிறுவனமாகத் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. நிறுவனம் தொடர்ந்து 17ஆவது ஆண்டாக இத்தரவரிசைப் பட்டியலில் இடம்பிடித்துள்ளதுடன், 2021ஆம் ஆண்டில் காணப்பட்ட தரவரிசையிலிருந்து 4 இடங்கள் முன்னேறி, 10ஆம்இற்கும் மேற்பட்ட பல்வேறு துறைசார் நிறுவனங்கள் மத்தியில் ஒட்டுமொத்தமாக 6ஆவது ஸ்தானத்தைத் தனதாக்கியுள்ளது. 'நுகர்வோர் பொருட்கள்', 'பல்தேசிய நிறுவனங்கள்' ஆகிய இரு பிரிவுகளிலும் யூனிலீவர் மீண்டும் துறைசார் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்துள்ளது.

இத்தரவரிசைகளை வழங்குவதில் LMDஇன் சிறந்த 12 செயல்திறன் குறிகாட்டிகளான, 'நிதியியல் பெறுமேற்றுத்திறன்', 'தர உணர்வு', 'முகாமைத்துவ நிர்வாகச் சுயவிவரம்', 'நேர்மை', 'புத்தாக்கம்', 'வலிமை ஆற்றல்', 'நிறுவன கலாசாரம்', 'வர்த்தக சமூகப் பொறுப்புணர்வு மற்றும் நிலைபேற்றியல்', 'குறிக்கோள் இலக்கு', 'நேசிய கண்ணோட்டம்', 'மனித வளம் மற்றும் பணியாளர் முகாமைத்துவம்', 'நெருக்கடி நிர்வாகம்' ஆகியவற்றில் அதியுயர் தர மதிப்பீட்டைப் பெற்ற விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் நிறுவனமாகவும் இந்நிறுவனம் மாறியுள்ளது.

Web Lankan நிறுவனத்துக்கு Best Web Developer தங்கப் பதக்க விருது

Web Lankan (www.weblankan.com) நிறுவனம், BestWeb.lkஇன் 12ஆவது வருடாந்த விருது வழங்கும் விழாவில் சிறந்த Web Developer பிரிவில் தங்கப் பதக்க விருதை வென்றுள்ளது. மேற்படி விருது வழங்கும் விழா கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.Web Lankan தமது சிறப்பான ஆற்றலை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளுக்கான BestWeb. lk விருது விழாக்களிலும் பல்வேறு விருதுகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Web Lankan ISO சான்றிதழை வென்றுள்ளதுடன், சந்தைப்படுத்தல் நிறுவனமாக திகழ்வதோடு ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பெருமித அங்கத்துவ நிறுவனமாகவும் விளங்குகிறது. Google அங்கீகாரத்தைப் பெற்ற முகவர் நிறுவனமான Web Lankan 600இற்கு மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு சேவைபெறுநர்களுக்கு தமது சேவையை வழங்குகிறது.

மக்கள் வங்கி தமது புதிய சேவை நிலையத்தை திஹாகொடையில் அங்குரார்ப்பணம் செய்தது

மக்கள் வங்கிதமது புதிய சேவை நிலையத்தினை திஹாகொடையில் அங்குரார்ப்பணம் செய்தது. இந்நிலையமானது அப்பிரதேசத்திலுள்ள வாடிக்கையாளர்களுக்கு தூரித டிஜிட்டல் வங்கிச் சேவைகளை வழங்குவதோடு கிழமையின் 7 நாட்களும், 24 மணிநேரமும் தங்கள் பணத்தினை மீளப்பெறுக்கொள்ளக்கூடிய தன்னியக்க இயந்திரத்தினையும் (ATM) கொண்டுள்ளது.

இந்நிகழ்வின் ஓரங்கமாக சிறு ஏற்றுமதி பயிர்களுக்கு கடன் வசதிகளை வழங்கியதுடன், மக்கள் வங்கியின் சிக உதான மற்றும் இகறு உதான கணக்குகளை ஆரம்பித்த சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

அத்தருணம் மக்கள் வங்கியின் தலைவர் - சுஜீவ ராஜபக்ஷ, மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் - ரஞ்சித் கொடிதுவக்கு, பிரதி பொது முகாமையாளர் - மகிந்த பிரேமநாத், உதவி பொது முகாமையாளர் (பெருநிறுவன வங்கியியல் (பிரிவு I) – நளின் பெரேரா, மாத்தறை பிராந்திய முகாமையாளர் - ஐ.கே. இந்திக்க, உதவி பிராந்திய முகாமையாளர் - துஷாரி நம்முனியாரச்சி, சிரேஷ்ட முகாமையாளர் (பிராந்திய கடன் வசதிகள் பிரிவு) - நிஷாளி பத்திரன, திஹாகொட பிரதேச சபைத் தலைவர் - நிர்மல சுமரசிங்ஹ, திஹாகொட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி – டீ. ஜயதுராயக்க, திஹாகொட தேசிய பாடசாலையின் அதிபர் - ஆர்.எம்.ஆர்.பண்டார, கம்பறுபிட்டிய கிளை முகாமையாளர் - ஆர். தயான் பத்மா மற்றும் திஹாகொட சேவை நிலைய முகாமையாளர் - ஜே.பி.டி.நதீஷா ஆகியோர் கலந்துகொண்டனர்.

SLIM Brand Excellence Awards 2022க்கான புதிய விருது மதிப்பீடு வெளியிடப்பட்டது

இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM), சவாலான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் தமது செயற்திறனைப் பெற்ற நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக 21ஆவது SLIM Brand Excellence Awards 2022இ 2022 ஒக்ஸ்ட் 22ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இந்த ஆண்டு Mettle of Resilience எனும் இலக்கினை அடிப்படையில் புத்தம் புதிய மதிப்பீட்டு செயல் முறையை அறிமுகப்படுத்துகிறது. செப்டெம்பர் 5ஆம் திகதி ஜேக் ஹில்டனில் நடைபெற்ற நிகழ்வில் இதுதொடர்பான மேலதிக விளக்கமளிக்கப்பட்டது.

மூலோபாயம், படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தின் மூலோபாய பயன்பாட்டினூடாக உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தைகளில் வெற்றிகரமாக வாடிக்கையாளர் தம்பதித்துள்ள வர்த்தக நாமங்களின் முயற்சிகளை அங்கீகரிப் பதற்காக ஐந்து வர்த்தக நாம விருதுகள் மற்றும் பத்து சிறப்பு விருதுகளை வழங்குவதை SLIM வாடிக்கையாளர் நோக்கமாகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் தலைவர் நுவன் கமே, இந்த அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டவர்களை வரவேற்றதுடன், தற்போதைய பிரச்சினைகளுக்கு நேரடித் தீர்வாக இலங்கையின் வர்த்தக நாமத்தை முன்னெடுத்துச் செல்ல சந்தை முகவர்கள் முன்வர வேண்டுமென வலியுறுத்தினார். நடுவர் குழுவின் தலைவர் இமால் பொன்சேகா மற்றும் திட்டத் தலைவர் கலி ராஜபக்ஷ ஆகியோர் முன்னோக்கிச் செல்வதற்கான செயல்முறை மற்றும் இரண்டாவது சுற்று சமர்ப்பிப்புகளை ஆதரிக்கும் மீபத்திய மதிப்பீட்டு அளவுகோல்கள் குறித்தும் விளக்கமளித்தனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கேள்வி - பதில் அமர்வின்போது, சமீபத்திய செயல்முறை மற்றும் நடுவர் மன்றத்தின் எதிர்பார்ப்புகள் என்ன என்பது குறித்து கேள்விகள் கேட்கப்பட்டன, மேலும் அதில் பங்குபற்றியவர்கள் மற்றும் டிஜிட்டல் பார்வையாளர்களின் பங்கேற்புடன் ஒரு முக்கிய கேள்வி - பதில் சுற்று ஒன்றும் இடம்பெற்றது.

Supreme Chef - S4IG இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து

Super Chefஐ தெரிவுசெய்யும் Supreme Chef - Season 3 ரியலிட்டி நிகழ்ச்சியை நடத்துவதற்கு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA), தொழில் பயிற்சி அதிகாரசபை (MANI), மட்டக்களப்பு MANI தொழிற்பயிற்சி நிறுவகம், அநுராதபுரத்தின் Don Bosco பயிற்சி நிறுவகம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் (SLRC) ஆகிய நிறுவனங்கள் ஒத்துழைப்புடன் செயற்படவுள்ளன. அதற்கான உடன்படிக்கையில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் சொனாலி குணவர்தன, பணிப்பாளர் நாயகம் கலாநிதி பதுள்ளகே விஜேரத்ன மற்றும் S4IG குழுவின் பிரதானி டேவிட் அப்பல் ஆகியோர் அன்மையில் கைச்சாத்திட்டனர். மேற்படி நிகழ்வில் NAITA தவிசாளர் தரங்க கம்தவ், VTA தவிசாளர் தரங்க பஸ்நாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த ரியலிட்டி நிகழ்ச்சியில் 18-35 வயதுக்கிடைப்பட்ட பயிற்சியெறும் சமையல் கலைஞர்கள் பங்குபெறலாம். அடுத்த மூன்று வருட காலத்துக்குஇந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்படவுள்ளது. NAITA, VTA ஊடக குழுக்களின் உதவியுடன் சத்துர ஜயதிலக்கவின் தலைமையிலான Creative Network நிறுவனம் இந்த நிகழ்ச்சியை தயாரித்து வழங்கவுள்ளது.

''Supreme Chef ரியலிட்டி நிகழ்ச்சி இலங்கையின் தொழில் பயிற்சித்துறையை இலக்காகக்கொண்டதொரு நிகழ்ச்சியாகும். சில தொழில்கள் தொடர்பாக ஊகத்தில் காணப்படுகின்ற குறைந்த மதிப்பிடும் போக்கினை உடைத்தெறிந்து இலங்கை இளைஞர், யுவதிகளுக்கு புதிய தொழில்துறைகளின் கதவுகளை திறந்துவிட்டு நாட்டின் பொருளாதாரத்துக்கு அனுகூலங்களை பெற்றுக்கொடுப்பதற்கு இந்த நிகழ்ச்சி பெரிதும் உதவுமென்பதில் எவ்விதஷ சந்தேகமுமில்லை'' என SLRC தலைவர் சொனால குணவர்தன தெரிவித்தார்.

இலங்கையில் இரத்தநாதர் நிட்டந்தை Brandix மீள ஆரம்பித்துள்ளது



புவி மற்றும் சமூகங்களின் மீது அக்கறை கொண்டு, தனது ஆடை உற்பத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் Brandix 2022ஆம் ஆண்டுக்கான இரத்த தான திட்டத்தை முன்னெடுத்துள்ளது. இலங்கை மக்களின் சுகாதார நலனுக்கு ஆதரவளிக்கும் அரணாகத் திகழும் Brandix, "மாபெரும் கூட்டான்மை இரத்த தானம் செய்யும் நிறுவனம்" எனும் வகையில், இந்த ஆண்டிலும் தனது புத்துணர்வான ஊழியர்களினூடாக பெருமளவு இரத்தத்தை தானமாக வழங்கக்கடியதாக இருக்குமென எதிர்பார்க்கின்றது.

தேசிய இரத்த மாற்றீட்டுச் சேவைக்கு தொடர்ச்சியாக இரத்த விநியோகம் எந்தளவு முக்கியமானது என்பதை புரிந்து கொண்டு, Brandixஇனால் 13 வருட காலமாக, வருடாந்தம் இரத்த தான நிகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது. கடந்த இரண்டு வருடங்களில் நிலவிய தொற்றுப் பரவலுடனான சூழ்நிலை காரணமாக இந்தத் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டிருந்தது. இலங்கையில் 23 பகுதிகளில் 35,000இற்கும் அதிகமான ஊழியர்களைக்கொண்ட பகுதி களில் இந்த ஊழியர் ஈடுபாட்டுத் திட்டம் முன்னெடுக்கின்றது. இந்தத் திட்டத்தை ஊழியர்கள் சுயமாக முன்வந்து முன்னெடுப்பதுடன், மற்றுமொருவரின் உயிருக்கு உதவும் மனப் பாங்கில் ஆதரவளிக்கப்படுகின்றது.

நெருக்கடியான காலப்பகுதியை இலங்கை கடந்த வண்ணமுள்ள நிலையில், நாட்டின் மருத்துவக் கட்டமைப்பில் அதிகளவு தேவைகள் நிலவுகின்றன. இந்தக் காலப்பகுதியில் தேசிய இரத்த மாற்றீட்டுச் சேவையினால் இரத்த தானத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், Brandix இன் புத்துணர்வான ஊழியர்கள் தாமாக முன்வந்து இந்த மனிதநேய செயற்பாட்டில் பங்களிப்பு வழங்கியிருந்தனர்.

nnl n m நடத்திய 'Kid ventures' Holiday Camp நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக நிறைவு

Colombo City Centre பாடசாலை விடுமுறை நாட்களில் 4-13 வயதுக்குட்பட்ட சூழ்தைகளுக்கு "Kid ventures" Holiday Camp நிகழ்ச்சித் திட்டத்தை அண்மையில் மிகவும் வெற்றிகரமாக நிறைவு செய்தது. அதில் சிறார்களின் பங்கேற்பில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்ட தோடு, இந்த நிகழ்வில் பங்குபற்றிய குழந்தைகள் தங்களது திறமைகளை மிகவும் ஆர்வத்துடனும், சுவாரஸ்யமாக வும் வெளிப்படுத்தினர். ராணாரா அகடமிக் மூலம் நடத்தப்பட்ட Ballet மற்றும் Drumming பயிற்சிப் பட்டறை மற்றும் Learnware இன்ஸ்டிட்யூட் மூலம் நடத்தப்பட்ட Robotics & Coding பயிற்சிப் பட்டறை மற்றும் STEAM செயல்பாடுகளுக்கு மிகப் பெரியளவில் குழந்தைகள் பங்கேற்று சிறப்பித்தனர்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றிய குழந்தைகளுக்கு மிகவும் கவையான உணவுகளை சுவைத்திடக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டதோடு இதற்காக குறித்த உணவங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் விசேட சலுகைகளை வழங்கின. LAGO இடமிருந்து புதிய குக்கீஸ், Il Café மூலம் கவையான ஐஸ் கிறீம், Food Studio மூலம் சுவையான Eclairs, Play Zone மற்றும் Buy 1 Get 1 Free கொடுப்பனவுகள் மற்றும் Cargills Foodhall மூலம் பெறுமதியான பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கொவிட்-19 தொற்றுநோய், பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடிகள் மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பல பிரச்சினைகள் காரணமாக பிள்ளைகள் தொடர்ச்சியாக பாடசாலைகளுக்கு செல்வதற்கும், கல்வி நடவடிக்கை களில் ஈடுபடுவதற்குமான வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் அவர்களுக்கான மனவலிமையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இந்தத் திட்டம் மூலம் கிடைத்துள்ளது. பாடசாலை விடுமுறையின்போது பிள்ளைகளை திறன்மிக்க செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும் என்பதே பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் எதிர்பார்ப்பாகும், அதற்கான தீர்வு இத்திட்டம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

அலியான்ஸ் லங்கா 2021ஆம் ஆண்டின் சிறந்த விற்பனையாளர்களை வருடாந்த விருது வழங்கும் விழாவில் போற்றிப் பாராட்டியுள்ளது

இலங்கையின் முதன்மையான காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றும், உலகளாவிய Allianz SE குழுமத்தின் உறுப்பு நிறுவனமுமான அலியான்ஸ் லங்கா, 2022 ஒகஸ்ட் 16ஆம் திகதியன்று மொனார்க் இற்பரியலில் நடைபெற்ற அலியான்ஸ் வருடாந்த விருது வழங்கும் விழாவில் 2021ஆம் ஆண்டின் சிறந்த விற்பனைப் பணியாளர்களைப் போற்றிப் பாராட்டியுள்ளது.

இந்த ஆண்டு,"வளர்ச்சியின் சிறகுகள்" என்ற தொனிப்பொருளின் கீழ் விருதுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அலியான்ஸ் வருடாந்த விருது விழா என்பது மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற விற்பனை நிகழ்வாகும்.

இது நிறுவனத்தின் தலைமைத்துவ அதிகாரி களின் பங்கேற்புடன் ஆண்டுதோறும் நடத்தப் பட்டு வருவதுடன், அலியான்ஸ் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த வெளிநாட்டு பிரமுகர்களும் அடிக்கடி இநிகழ்விலில் கலந்து கொள்கின்றனர்.

உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்தி வருகிறது சிங்கர் (ஸ்ரீலங்கா)

முன்னணி சில்லறை விற்பனை நிறுவனமான சிங்கர் (ஸ்ரீலங்கா), தொடர்ந்து வளர்ந்துவரும் நுகர்வோர் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக உயர்தர தளபாடங்கள் மற்றும் நீர்ப்பம்பிகளை 1993முதல் உற்பத்திசெய்து வருகிறது. சிங்கரின் உள்ளூர் உற்பத்திப் பலமானது, நிறுவனத்தை இத்துறையிலுள்ள ஏனைய நிறுவனங்களிலிருந்து தனித்துவமாக வேறுபடுத்துகிறது. அதேநேரத்தில், உள்ளூர் நுகர்வோருக்குநீனே வகைதளாடங்கள் மற்றும் நீர்ப்பம்பிகளை வழங்குவதற்கான தேவைகளை நிறுவனம் தெளிவாக அடையாளம் கண்டுள்ளது. அதன் உள்ளூர் உற்பத்தி சீபீபத்திய தொழில்நுட்பங்கள், உபகரணங்கள் மற்றும் நன்கு பிரதிப்பயிற்சிபெற்ற உற்பத்தி செய்முறைய ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகிறது.

சிங்கர் (ஸ்ரீலங்கா) ஏற்கனவே நாட்டின் உள்ளூர் உற்பத்தி செயல்முறையில் முக்கிய பங்கு வகித்து வருகிறது. சிங்கர் பல உள்ளூர் உற்பத்தித் தொழிற்சாலை வசதிகளைக் கொண்டுள்ளது. இது பரந்தளவிலான நுகர்வோர் தயாரிப்புகளை உற்பத்தி செய்து வருகிறது. 07 ஏக்கர் நிலப்பரப்பில் பரந்து விரிந்து கிடக்கும் அதன் பிலியந்தலை தொழிற்சாலை வளாகமானது சோஃபா இருக்கைகள், கட்டில்கள், அலுமாரிகள் மற்றும் உள்நாட்டு மற்றும் விசேஷ ரோக்கங்களுக்காக விசேஷ உற்பத்திகள் உட்பட தளாடங்களை பிரதானமாக உற்பத்தி செய்யும் மூன்று தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது.

DFCC வங்கி தற்போது UnionPay அட்டையை ஏற்கின்றது

இலங்கையிலுள்ள முதன்மையான வர்த்தக வங்கிகளில் ஒன்றான DFCC வங்கியானது, தனது விற்பனை மையங்களில் அட்டைக் கொடுப்பனவு இயந்திரங்கள் தற்போது UnionPay அட்டைகளையும் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது.

DFCC வங்கியானது, 2020ஆம் ஆண்டில் வணிகர்களை உள்ளிணைத்துக்கொள்ளும் வணிக முயற்சிய ஆரம்பித்ததிலிருந்து ஒரு தீவிரமான விஸ்தரிப்பு மூலோபாயத்தில் காலடியெடுத்து வைத்துள்ளது. அன்று முதல் வங்கியானது தொழில்நுமையில் ஒரு குறிப்பிடத்தக்க செயல்பாட்டாளராக வளர்ச்சி கண்டுள்ளதுடன், தனது வலையமைப்பில் பல்வேறு கொடுப்பனவுச் சேவை வழங்குநர்களை இணைத்துக்கொண்டுள்ளது. UnionPay தற்போது இதில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதன் மூலம், DFCC வங்கியின் வணிகர் உள்ளிணைப்பு வலையமைப்பு இப்போது அனைத்து பிரபலமான அட்டை வர்த்தகநாமங்களையும் ஏற்றுக்கொள்கிறது.

வெளிநாட்டில் தொழில்புரியும் வீட்டுப் பணிப்பெண்களுக்காக பீல்ஸ் இன்ஷுவரன்ஸ் புதிய காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது

பீபல்ஸ் இன்ஷுவரன்ஸ் நிறுவனம், இலங்கை மக்களின் நம்பிக்கையை வென்ற நிதி நிறுவனங்களின் முதன்மையானராான மக்கள் வங்கி குழுமத்தின் உறுப்பினராகும். வறுமை காரணமாக வெளிநாட்டுக்குச் செல்லும் வீட்டுப் பணிப்பெண்களுக்கான புதிய காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வை கடந்த ஒகஸ்ட் 09ஆம் திகதி கொழும்பு சினமன் லேக்சைட்டில் ஏற்பாடு செய்திருந்தது.

எமது நாட்டுக்கு அந்நிய செலாவணியை கொண்டு வந்து நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றும் வெளிநாட்டில் தொழில்புரியும் வீட்டுப் பணிப்பெண்கள் எதிர்நோக்கும் திடீர் சம்பவங்களின்போது, அவர்களை பொருளாதார ரீதியாக வலுவடையச் செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்ட இக்காப்புறுதித் திட்டம், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, பீபல்ஸ் இன்ஷுவரன்ஸ் நிறுவனத்தின் தலைவர் இசூ பாபடைபெத்தி ஆகியோரின் தலைமையில் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பீபல்ஸ் இன்ஷுவரன்ஸ் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஜீவனி காரியவசம், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.பீ.ஏ. விமலவீர, இலங்கை வெளிநாட்டு சேவைகள் பணியகத்தின் தலைவர் மிகேந்திர குமரசிங்க, அதன் உபத்தலைவர் ஹிம்மி அலீஸ், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனத்தின் தலைவர் சரூஜ் தன்தெனிய, உத்தரவாதம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவன சங்கத்தின் (ALFEA) தலைவர் பாரூஸ் மரிக்கார், செயலாளர் எம்.எப்.எம். அர்ஸாட் மற்றும் பொருளாளர் சமன் நாக உட்பட ஊடகவியலாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டார்கள்.

இன்று விடைபெறுகிறார் மகாராணி எலிசபெத் II

1926 - 2022

மௌனிக்கிறது ஐக்கிய இராச்சியம்

மறைந்த பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச்சடங்குகள் இன்று முழு அரச மரியாதையுடன் வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் காலை 11 மணியளவில் இடம்பெற்று கடந்தாண்டு உயிரிழந்த ராணியின் கணவர் பிலிப்பின் உடலின் அருகிலேயே நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

ராணியின் இறுதிச்சடங்கின் பின்னர் ஐக்கிய இராச்சியம் (பிரித்தானியா, வேல்ஸ், ஸ்கொட்லாந்து, வடக்கு அயர்லாந்து) முழுவதும் 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் இன்று நடைபெறவுள்ள இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் மற்றும் ஜப்பானின் பேரரசர் நருஹிட்டோ உட்பட 500இற்கும் மேற்பட்ட உலகத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களின இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் பிரித்தானியாவுக்கு படையெடுத்துள்ளனர்.

இறுதிச்சடங்கிற்கான முழு ஒத்திகையையும் நேற்று அந்நாட்டு இராணுவம் நிறைவுசெய்தது. குதிரைகள் பூட்டிய பீரங்கி வண்டியின் மீது ராணியின் உடல் வைக்கப்பட்டு, லண்டனின் முக்கிய வீதிகள் ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு, இறுதிச்சடங்கு நடத்தப்படவுள்ளது.

ராணியின் இறுதிச்சடங்கில் பங்கேற்பதற்காக ரஷ்யா, பெலாரஸ் மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்ப்பு மீறி சீனா பங்கேற்பு

இந்நிலையில், ராணியின் இறுதிச்சடங்கில் சீனத் தலைவர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கக்கூடாது என்று அந்நாடு தடை விதித்துள்ளது. இதற்கு பிரித்தானிய எம்.பிக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஆனால், அதை பொருட்படுத்தாமல் இறுதிச்சடங்கில் தனது நாட்டின் துணை ஜனாதிபதி வோங்க் கியூஷ்ன் கலந்துகொள்வார் என்று சீன அரசு அறிவித்தது.

இறுதிச்சடங்கில் சுமார் 7.5 இலட்சம் பேர் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று காலை 6.30 மணியுடன் பொதுமக்களுக்கான அஞ்சலி நேரம் நிறைவடைகின்றது. கடந்த மூன்று நாட்களாக கடும் குளிர் - மழைக்கு மத்தியில் கால் கடுக்க நீண்ட வரிசைகளில் காத்திருந்து பொதுமக்கள் தங்களின் ராணிக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

பாதுகாப்பு வலயத்துள் லண்டன்

உலகத் தலைவர்களின் வருகையைத் தொடர்ந்து முழு லண்டன் நகரும் பலத்த பாதுகாப்பு வலையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பணியில் பிரிட்டிஷ் எம்ஐ5 மற்றும் எம்ஐ6 உளவுத்துறை நிறுவனங்கள், லண்டனின் பெருநகர காவல்துறை மற்றும் இராசகிய சேவை ஆகியவை இணைந்து செயற்பட்டு வருகின்றன. பிரித்தானிய காவல்துறை இதுவரை மேற்கொள்ளாத மிகப்பெரிய பாதுகாப்பு நடவடிக்கை இதுவாகும். லண்டன் முழுவதும் பலத்த பாதுகாப்பு வளையத்திற்குள் காணப்படும் என்று முன்னாள் ரோயல் பாதுகாப்பு அதிகாரியான சைமன் மோர்கன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இறுதிச்சடங்கிற்கான பாதுகாப்புப் பணிகளுக்கு மட்டும் 59 கோடி ரூபா நிதி செலவிடப்படுகிறது.

இதுகுறித்து நியூயோர்க் போஸ்ட் வெளியிட்டுள்ள செய்தியில், ராணி எலிசபெத்தின் இறுதிச்சடங்குக்காக செலவிடப்படும் தொகை, பிரிட்டன் வரலாற்றில் ஒரே நாளில் பாதுகாப்புக்காக செலவிடப்பட்ட மிகப்பெரிய தொகை என்றும், இதுவரை பிரிட்டன் காவல்துறை மேற்கொண்ட பாதுகாப்புப் பணிகளிலேயே இது மிகப்பெரிய சவாலான பணி என்றும் குறிப்பிட்டுள்ளது.

பிரிட்டன் முழுவதும் 125 திரையரங்குகள்; இறுதிச்சடங்கு நேரலையில் ஒளிபரப்பு

வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் இன்று நடைபெறும் ராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச்சடங்கு பிரிட்டன் முழுவதும் சுமார் 125 திரையரங்குகளில் ஒளிபரப்பப்படும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இதன்படி பூங்காக்கள், தேவாலயங்கள் உள்ளிட்ட இடங்களில் மக்கள் இறுதிச்சடங்கை காண திரைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஊடகங்களில் நேரலையாக ராணியின் இறுதிச்சடங்குகள் ஒளிபரப்பப்படவுள்ளன.

1997ஆம் ஆண்டு இளவரசி டயானாவின் இறுதிச்சடங்கு 2012இல் லண்டன் ஒலிம்பிக்ஸ் என பிரிட்டன் வரலாற்றில் நடந்த முக்கிய நிகழ்வுகளைக் காட்டிலும், ராணியின் இறுதிச்சடங்கிற்கு அதிக மக்கள் வரக்கூடும் என்பதால் பலத்த ஏற்பாடுகளை செய்திருக்கும் அரசு, இன்று பொது விடுமுறை அறிவித்துள்ளது.

11 மணிக்கு இறுதிச்சடங்கு

பிரித்தானிய மகாராணியாக 70 ஆண்டு காலம் கோலோச்சிய ராணி இரண்டாம் எலிசபெத் ஸ்கொட்லாந்திலுள்ள பல்மோரல் அரண்மனையில் வசித்துவந்த நிலையில், உடல்நலக்குறைவால் கடந்த 08ஆம் திகதி தனது 96ஆவது வயதில் காலமானார்.

மகாராணி எலிசபெத்தின் மறைவு பிரித்தானியா மட்டுமன்றி உலக நாடுகளையும் சோகத்தில் ஆழ்த்தியது.

இந்நிலையில், ஸ்கொட்லாந்தில் அரச பரம்பரையினர் மற்றும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த ராணியின் உடல் கடந்த 13ஆம் திகதி ரோயல் விமானப்படை விமானம் மூலம் லண்டனுக்கு கொண்டுசெல்லப்பட்டு, பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் அதிகாரபூர்வ இல்லமான பெக்கிங்ஹாம் அரண்மனையில் வைக்கப்பட்டது. தொடர்ந்து, ராணியின் உடல் பீரங்கி வண்டியில் ஏற்றப்பட்டு இராணுவ மரியாதையுடன் பெக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து, நாடாளுமன்ற வளாகத்திலுள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபேக்கு 2 கிலோமீற்றர் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

ஊர்வலத்தில் ராணியின் மகன்களான மன்னர் 3ஆம் சார்ள்ஸ், இளவரசர் எண்ரூ, இளவரசர் எட்வர்ட் , ராணியின் ஒரேயொரு மகளான ஏன் மற்றும் மன்னர் சார்ள்ஸ் - டயனா தம்பதியினரின் மகன்களான இளவரசர் வில்லியம்ஸ், இளவரசர் ஹரி ஆகியோர் அணிவகுத்துச் சென்றனர்.

அதைதொடர்ந்து வெஸ்ட்மினிஸ்டர் மண்டபத்தில் இராஜ மரியாதையுடன் செங்கோல், கொஹினூர் வைரம் பதிக்கப்பட்ட கிரீடத்துடன் வைக்கப்பட்டுள்ளது. இதன்போது மகன்களான மன்னர் 3ஆம் சார்ள்ஸ், இளவரசர் எண்ரூவ், இளவரசர் எட்வர்ட் , மகளான ஏன் ஆகியோர் ராணியின் உடலை சுற்றி நின்று அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி செலுத்திய பேரக்குழந்தைகள்

இந்நிலையில், நேற்று ராணி எலிசபெத்தின் பேரக்குழந்தைகள் அனைவரும் அவரது உடல் அடங்கிய பேழையை சுற்றி நின்று அஞ்சலி செலுத்தினர்.

மன்னர் சார்ள்ஸ் - மறைந்த இளவரசி டயானாவின் மகன்களான வில்லியம்ஸ் மற்றும் ஹரி (இளவரசர்கள்), இளவரசி ஏனின் குழந்தைகளான ஜோர்ஜ் டின்டால் மற்றும் பீற்றர் பிலிப்ஸ், இளவரசர் எண்ரூவின் மகன்களான பீட்ரைஸ் மற்றும் யூஜெனி, இளவரசர் எட்வர்ட் மேடி ஜூயிஸ் விண்ட்சர் மற்றும் ஜேம்லின் இரண்டு குழந்தைகள் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

வேல்ஸ் இளவரசர் மற்றும் சசெக்ஸ் பிரபு உட்பட ராணியின் எட்டு பேரக்குழந்தைகள் அவரது சவப்பெட்டியைச் சுற்றி நின்று அஞ்சலி செலுத்திய காட்சிகள் அரச குடும்பத்தின் டுவிட்டர் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

இதன்போது பிரிட்டன் சிம்மாசனத்தின் அடுத்த வாரிசான இளவரசர் வில்லியம்ஸ் தலை குனிந்து, ராணியின் சவப்பெட்டியின் தலை அருகிலும், அவரது சகோதரர் இளவரசர் ஹரி காலடியிலும் நின்றனர். அரச பரம்பரையின் இராணுவ வீரர்களான இளவரசர்கள் இருவரும் பாரம்பரிய இராணுவ சீருடையில் இருந்தனர். இளவரசர் ஹரி ஏற்கனவே பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியாக ஆப்கானிஸ்தானில் பணியாற்றியவராவார்.

ராணியை இறுதியாகப் பார்க்க எல்லா வயதினரும் எல்லாத் தரப்பிலிருந்தும் வந்திருக்கின்றனர். நீண்ட வரிசையில் காத்துநிற்கும் மக்கள், கிட்டத்தட்ட 16 மணிநேரம் வரை காத்திருந்து தங்களின் ராணிக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு லண்டனில் வெப்பநிலை 6 டிகிரி செல்சியஸாகக் குறைந்ததால், தன்னார்வலர்கள் பலர் வரிசையில் காத்துக்கிடக்கும் பொதுமக்களுக்கு போர்வைகள் மற்றும் தேநீர்க் கோப்பைகளை வழங்கினர்.

மறைந்த ராணியின் இறுதிச்சடங்குகள் உள்ளூர் நேரப்படி காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது. இதற்கு முன்னர் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் உலக நாடுகளின் தலைவர்கள், மிக முக்கிய பிரமுகர்கள் என இரண்டாயிரம் பேர் கலந்துகொள்ளும் அரச மரியாதை நிகழ்வு நடைபெறுவுள்ளது.

அரச மரியாதை செலுத்தியபடன் எலிசபெத்தின் உடல் அடங்கிய பேழை லண்டன் நகரத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதி வழியாக குதிரை பூட்டப்பட்ட பீரங்கி வண்டியில் பெக்கிங்ஹாம் அரண்மனைக்கு அருகிலுள்ள வெலிங்டன் ஆர்ச் வரை எடுத்துச்செல்லப்படவுள்ளது.

பின்னர் உடல், விண்ட்சர் கோட்டைக்கு அருகேயுள்ள செயிண்ட் ஜோர்ஜ் தேவாலயத்துக்கு அர்ப்பணிப்பு பிராத்தனைக்காக எடுத்துச்செல்லப்பட்டு, பிராத்தனை முடிந்த பின் றோயல் வோல்ட் என்று அழைக்கப்படுகிற விண்ட்சார் கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள அடக்க அறைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இறுதியாக அரச குடும்பத்தினர் மட்டுமே கலந்துகொள்கிற அடக்க ஆராதனை, மன்னர் ஆறாம் ஜோர்ஜ் நினைவு தேவாலயத்தில் இடம்பெறவுள்ளது. அதன்பின்னர் ராணியின் உடல் அருகே கடந்த ஆண்டு மறைந்த ராணியின் கணவர் இளவரசர் பிலிப்பின் உடலும் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

தனது இறுதிச்சடங்கின்போதே கணவரையும் தனக்கு அருகே அடக்கம் செய்யவேண்டும் என்பது ராணியின் கடைசி விருப்பம். அதற்காகவே, கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பிலிப்பின் உடல் பாதுகாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ராணி இறுதிச்சடங்கின் பின்னர் ஐக்கிய இராச்சியம் (பிரிட்டன், வேல்ஸ், ஸ்கொட்லாந்து, வடக்கு அயர்லாந்து) முழுவதும் 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

இருமுறை இலங்கை விஜயம்

இலங்கை பிரித்தானிய ஆளுகைக்குட்பட்டிருந்த வேளை இரண்டு முறை (1954ஆம் ஆண்டு கண்டி, நுவரெலியாவுக்கும், 1981ஆம் ஆண்டு அவரது பெயர் பொறிக்கப்பட்ட விக்டோரியா அணை கட்டுமானத்தைக் காண) எலிசபெத் மகாராணி விஜயம் மேற்கொண்டமை வரலாற்றின் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டிருக்கின்றமை நினைவுக்கூரத்தக்கது.

ராணியின் பிறப்பு

ராணி எலிசபெத் அலெக்ஸாண்ட்ரா மேரி விண்ட்சர், லண்டனிலுள்ள மே.ஃபேரில் 1926ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி பிறந்தார்.

ராணி எலிசபெத் 1926, ஏப்ரல் 21ஆம் திகதி பிறந்தாலும், அவரின் பிறந்தநாள் ஜூன் மாதத்தின் முதல் அல்லது இரண்டாம் சனிக்கிழமைகளில் தான் கொண்டாடப்படுகிறது. குறிப்பிட்ட எந்தவொரு திகதியும் அறிவிக்கப்படுவதில்லை. ஆக ராணியின் பிறந்தநாள் என்ற எந்தவொரு குறிப்பிட்ட திகதியும் கலண்டரில் இல்லை. ஒவ்வொரு ஆண்டும் அந்நாட்டு அரசு தான் ராணியின் பிறந்தநாளை அறிவிக்கும். அதன்படியே கொண்டாட்டங்கள் அமையும்.

'லிலிபெட்' ஆன எலிசபெத்

எலிசபெத் எதிர்காலத்தில் ராணியாவார் என்று யாரும் கனிக்கவில்லை. ஆனால், இருமுறை மணவிலக்கு பெற்ற அமெரிக்கரான வாலிஸ் சிம்ப்சனை மணந்துகொள்வதற்காக 1936ஆம் ஆண்டு டிசம்பரில் அரியணையை விட்டு விலகினார் எலிசபெத்தின் பெரியப்பா எட்டாம் எட்வர்ட் அரசர்.

இதையடுத்து எலிசபெத்தின் தந்தை ஆறாம் ஜோர்ஜ் மன்னர் ஆனார். இதன் மூலம் அரியணை வாரிசு ஆனார் எலிசபெத். குடும்பத்துக்குள் 'லிலிபெட்' என்று அழைக்கப்பட்ட எலிசபெத்துக்கு அப்போது வயது 10.

மூன்றாண்டு காலத்தில் நாஸி ஜேர்மனியுடன் போரில் ஈடுபட்டது பிரிட்டன். போர்க் காலத்தில் இளவரசி எலிசபெத் மற்றும் அவரது இளைய சகோதரி இளவரசி மார்கரெட் ஆகிய இருவரையும் கனடாவுக்கு அனுப்பிவிடலாம் என்ற யோசனையை அவர்களது பெற்றோர் நிராகரித்தனர். இதையடுத்து, அவர்கள் இருவரும் பெரும்பாலான நேரத்தை விண்ட்சர் கோட்டையிலேயே கழித்தனர்.

வீட்டிலேயே கல்வி

அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மற்றவர்களைப்போல் பாடசாலைக்குச் செல்வதில்லை. இதனால் குழுவாக மற்ற மாணவ, மாணவிகளுடன் கல்வி கற்கும் அனுபவம் அவருக்கு கிட்டவில்லை. ராணி எலிசபெத்தும் அப்படியே. அவருக்கும் அவரின் தங்கை மார்கரெட்டிற்கும் வீட்டிலேயே கல்வி கற்பிக்கப்பட்டது.

அடம்பிடித்து பெற்ற ஓட்டுநர் பயிற்சி

18 வயதான பின்னர், ஆக்கிலரி பிரிகேடியல் சேவையில் 5 மாதங்கள் கழித்தார் எலிசபெத். எலிசபெத் எப்பொழுதும் மக்களுக்காக தனது பங்களிப்பை தர ஏதாவது செய்துகொண்டே இருப்பார். இரண்டாம் உலகப்போர் சமயங்களில் தனது பெற்றோர்களிடம் போராடி டூட்டிஸ் பயிற்சி பெற்றார். இதன்மூலம் அம்புலன்ஸ் மற்றும் லொறி ஓட்டும் பயிற்சியையும் பெற்றார். சில மாதங்களில் அவர் ஜூனியர் கமான்டர் ஆகும் வாய்ப்பையும் பெற்றார். இப்படி அவர் வாழ்நாளில் நடந்த சுவாரஸ்யமான சம்பவங்கள் பல. அதில் இதுவும் ஒன்று.

"துன்பக் காலத்தில் மலரும் சக மனிதர்களிடையிலான நேயத்தையும் பரஸ்பர பெருமித உணர்வையும் தாம் அப்போது உணர்ந்தோம்" என்று பிற்காலத்தில் அவர் நினைவுகூர்ந்தார்.

பிலிப்பின் காதல்வலையில் வீழ்ந்த ராணி

1939ஆம் ஆண்டு அரசர் - ராணியோடு டார்ட்மௌத்தில் உள்ள றோயல் கடற்படைக் கல்லூரிக்குச் சென்றார் 13 வயது இளவரசி. அவருக்கும் அவரது தங்கை மார்கரெட்டுக்கும் அவர்களது உறவினரும் கிரீஸ் இளவரசருமான பிலிப் பாதுகாவலராக வந்தார்.

அவர்கள் சந்தித்தது அது முதல் முறையல்ல. ஆனால், பிலிப் மீது எலிசபெத்துக்கு அப்போதுதான் முதன்முறையாக ஈர்ப்பு ஏற்பட்டது. தமது கடற்படைப் பணியின் விடுமுறைகளில் இருக்கும்போதெல்லாம் இளவரர் பிலிப் தமது அரச குடும்ப உறவினர்களை சந்தித்தார். 1944ஆம் ஆண்டு தமக்கு 18 வயது ஆனபோது பிலிப் மீது தெளிவாகவே காதல் வயப்பட்டிருந்தார் எலிசபெத். தனது அறையில் பிலிப்பின் படத்தை வைத்திருந்தார். இருவரும் கடிதங்களை பரிமாறிக்கொண்டார்கள்.

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தது குறிக்கும் வகையில் கொண்டாடப்பட்ட ஜூபிலிப்பிய வெற்றி நாள் நிகழ்வில், பெக்கிங்ஹாம் அரண்மனை எதிரே தி மால் எனப்படும் ராஜவீதியில் ஆயிரக்கணக்கானோர் கூடியிருக்க, தமது அரச குடும்பத்தினரோடு சேர்ந்து பங்கேற்றார் எலிசபெத்.

போருக்குப் பின்னர், இளவரசர் பிலிப்பை மணம் முடிக்க விரும்பிய அவரது ஆசைக்கு குறுக்கே பல தடங்கல்கள் நிலவின. தமது நம்பிக்கைக்குரிய ஒரு மகளை இழக்க அரசர் தயங்கினார். தமது வெளிநாட்டு பூர்வீகத்தை ஏற்காத அரசமைப்பின் சம்பிரதாயத்தை வென்றாக வேண்டிய நிலை பிலிப்புக்கு ஏற்பட்டது.

ஆனால், கடைசியில் இந்த ஜோடியின் விருப்பமே வென்றது. 20 நவம்பர், 1947 அன்று வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் அவர்கள் திருமணம் செய்துகொண்டனர். பிலிப் எடின்பரோ கோமகன் பட்டத்தைப் பெற்றார்.

12 கொள்ளுப் பேரப்பிள்ளைகள் கண்ட ராணி

இந்த தம்பதியின் முதல் மகன் சார்ள்ஸ் 1948இல் பிறந்தார். பின்னர் 1950இல் இளவரசி ஏன், 1960இல் இளவரசர் எண்ட்ரூ, 1964இல் இளவரசர் எட்வர்ட் என நான்கு குழந்தைகளுக்கு தாயானார் ராணி எலிசபெத்.

இந்த நால்வரும் தங்கள் பெற்றோருக்கு 8 பேரக் குழந்தைகளை அளித்தனர். பிறகு 12 கொள்ளுப் பேரப்பிள்ளைகள் பிறந்தனர். 2021ஆம் ஆண்டு தமது 99ஆவது வயதில் பிலிப் இறப்பதற்கு முன்பாக, தங்களது 74 ஆண்டுகால திருமண வாழ்க்கைக்குப் பின்னர் அவரே தமது வலிமை என்று கூறிய ராணி, 2022 செப்டெம்பர் 08ஆம் திகதி இப்பூவுலக வாழ்க்கைக்கு விடைகொடுத்தார்.

மகாராணி இரண்டாம் எலிசபெத்தை இழந்ததால் இன்று இங்கிலாந்து வலிமை இழந்து நிற்கிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7